டிசம்பர் 11 - 17, 2005 December 11 - 17, 2005 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## நெருங்கி வருகிறது இந்தியா



## கொலைகளால் சூடாகும் குடாநாடு

# தடுமாறும் தலைமை

கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்முன்வைத்த 'பிரபாவின்சிந்தனை' கள்மஹிந்தவின் சிந்தனைகளின் தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### மஹிந்த - ராஜதந்திரிகள் சந்திப்பு

கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ராஜதந்திரிகளை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்கள் முன்னிலையில் உரையாற்றினார். அவரின் அந்த உரை தேர்தல் காலத்தில் மஹிந்தவினால் மக்கள்முன் வைக்கப்பட்ட 'மஹிந்தவின்சிந்தனைகளில்' இருந்து மாறுபட்டிருந்ததை தெளிவாக காணக்கூடியதாக இருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான, தெளிவான வரையறுக்கப்பட்ட ஆலோசனைகள் எதுவும் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்ற பேராசையினால் பேரினவாதக் கொள்கைகளை தென்னிலங்கை மக்கள் முன் விதைத்து வெற்றி பெற்ற மஹிந்த இப்போது இனப்பிரச்சினை விடுக்கும் சவாலை எதிர்கொள்ள முடியாது திண்டாடுகிறார் என்பதே சர்வதேச ஊடகங்களதும் அரசியல் அவதானிகளதும் கணிப்பாகும்.

### மஹிந்தவின் குழப்பம்

தவிர, ராஜதந்திரிகளுடனான தனது குறிப்பிட்ட சந்திப்பின் போது, ஏற்கனவே தயார் நிலையில் இருந்த தனது கொள்கை விளக்க உரையை அவர்கள் முன் வாசித்த ஜனாதிபதி அவர்களின் கேள்விகளுக்கு - பதிலளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தை தவிர்த்துக் கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிக்கா



ஆகியோர் இவ்வாறான சந்திப்புகளின் போது இராஜதந்திரிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து அவர்களின் சந்தேகங்களை தீர்த்து வைப்பது வழக்கம்.

இவ்வாறு கேள்வி-பதில் நேரத்தை தவிர்த்துக் கொண்டமை பிரச்சினைகள் பற்றிய அவரது தெளிவில்லாத் தன்மையையே எடுத்துக் காட்டுவதாக பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் உரையின் போது "பொறுமை இழந்து , நம்பிக்கை இழந்து விரக்தியின் விளிம்பில் நிற்கும் எமது மக்கள், இனியும் பொறுத்திருக்கத் தயாரில்லை. புதிய அரசாங்கம், ஒரு குறுகிய கால எல்லைக்குள் எமது அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தவறினால் நாம் பொது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுய நிர்ணய போராட்டத்தை- எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திர போராட்டத்தை, அடுத்த ஆண்டு தீவிரப்படுத்துவோம்" என்று எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த எச்சரிக்கையை அடுத்தே பொதுவாக தென்னிலங்கையும் குறிப்பாக மஹிந்தவும் குழப்பம் அடைந்திருப்பதை நிலைமைகள் எடுத்துக்காட்டுகின்றன. ...ந்த 28ஆம் திகதி வெளிநாட்டு ...தந்திரிகள் மத்தியில் உரையாற்றும் ...மஹிந்த தனது வார்த்தைகளை கவனமாகவும் அவதானத்துடனும் அளந்து பேசியிருப்பதை காண முடிகிறது.

### யுத்தநிறுத்தம்

நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றிய போது அரசு எதிர்பார்க்கும் விடயங்களை அடக்கக் கூடியதாக யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தி அமைக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். ராஜதந்திரிகளுடனான அவரது சந்திப்பின் போது புலிகளின் ஒத்துழைப்புடன் அது மீளாய்வு செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், யுத்த நிறுத்த ஒப்பந்தம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஆரம்பம் முதலே மறுதலித்து வந்திருக்கிறார்கள். ஆனால் அதை மீளாய்வு செய்வதற்கு இணங்கியிருந்தார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிகளை அரசு ஒழுங்காக அமுல்படுத்துமானால் யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்பில்லை என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்து வருகிறது. இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய மஹிந்த முன்வந்திருப்பது அவர் தனது முன்னைய நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது.

### இணைத்தலைமை-இந்தியா

அது மட்டுமன்றி தன்னுடைய இனப் பிரச்சினைக்கான பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு தமிழ் தேசத்தின் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் மஹிந்த. ஆனால் பேச்சு வார்த்தைகளுக்கு அடிப்படையாக அமையப்போவது எது என்பது பற்றி அவர் எதுவுமே தெரிவிக்கவில்லை. விடுதலைப்புலிகளுடன்பேசுவதற்கு முன்னர் தென்னிலங்கைக் கட்சிகளிடையே கருத்திணக்கத்தை ஏற்படுத்தி அக்கட்சிகளின் ஊடாக கண்டெடுக்கப்படும் முடிவே பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாக அமையுமென்று கூறியிருந்த அவர் இப்போது இணையத் தலைமை நாடுகளையும் இந்தியாவையும் வளைத்துப் பிடிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறார்.

இருப்பினும் கட்சிகளுக்கிடையே கருத்தொருமைப்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளும் தென்னிலங்கையில் விரைவில் முன்னெடுக்கப்படும் என பத்திரிகைச் செய்திகள் தெரிவித்த போதும் இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டால் கூட அது பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க ஒரு போதும் உதவப் போவதில்லை. ஏனெனில் தென்னிலங்கை கட்சிகள் முன்வைக்கும் ஒருமித்த கருத்தானது தமிழ் மக்களது அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதாக ஒரு போதும் அமையப் போவதில்லை.

மேலும் புலிகள்-ராஜபக்ஷ இரகசிய உடன்பாடு என்று இப்போது குரல் கொடுத்துள்ள ஐ.தே.கட்சி, கட்சிகளுக்கு இடையிலான கருத்தொருமைப்பாடு என்பது மஹிந்தவின் புருடா அல்ல என்று திருப்தி அடைந்தால் மட்டுமே தான் இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் என்று அறிவித்துள்ளது. எனவே கருத்தொருமைப்பாடு என்பதை இழுத்தடிப்பு என்று கூறினும் அது தவறாக இருக்கப் போவதில்லை.

### மீண்டும் சர்வதேச வலைப்பின்னலா?

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினையை முன்நகர்த்துவது தொடர்பாக ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சு இணைத்தலைமை நாடுகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து இவ் விடயம் குறித்து எதிர்வரும் 19ஆம் திகதி ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, நோர்வே ஆகிய இணைத்தலைமை நாடுகள் பிரஸல்ஸில் கூடி ஆராய இருக்கின்றன. இப்போது இணைத்தலைமை நாடுகளையும் இந்தியாவையும் ஜனாதிபதி மஹிந்த அணுகி இருப்பதன் பின்னணி என்ன? முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைப் போல் இவரும் சர்வதேச வலைப்பின்னல் ஒன்றில் புலிகளைச் சிக்கவைத்து தமிழ் தலைமையினாலும் மக்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு தீர்வைத் திணிப்பதற்கு ஆயத்தமாகிறாரா என்ற சந்தேகம் தமிழ் தரப்பில் வலுவடைந்து வருகிறது.

மேலும் நோர்வேயின் அனுசரணைப் பணி பற்றிய தெளிவான நிலைப்பாடு எதனையும் அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை. ஆனால் அரசின் சமாதான செயலக பணிப்பாளர் ஜோன் குணரத்தினா நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணிகள் தொடரும் என அறிவித்துள்ளார். இது கூட ஒரு இராஜதந்திர வியூகமாக இருக்கலாம். நோர்வேயின் அனுசரணைப் பணியை மஹிந்தவும் பேரின வாதிகளும் விரும்பாத போதும் அந்த நாட்டின் சமாதானப்பணிகள் தொடர வேண்டும் என்றே இணைத்தலைமை நாடுகள் விரும்புகின்றன. நோர்வேயின் பங்களிப்பை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளத் தவறுமானால் இங்கு யுத்த நிறுத்தம் கேள்விக்குறியாகிவிடும் என்று இணைத்தலைமை நாடுகள் அஞ்சுகின்றன. இந்த யதார்த்த நிலைகளைப் புறம் தள்ளி தன்விச்சையாக எதையும் செய்ய முடியாத நிலைக்கு மஹிந்த தள்ளப்பட்டுள்ளார்.

### இந்தியாவின் பங்கு

இப்போதுஇலங்கை இனப்பிரச்சினை பற்றி இந்தியத் தலைவர்களுடன் மந்திராலோசனை நடத்தும் பொருட்டு நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியா வர இருக்கிறார். இவற்றை எல்லாம் பார்க்கும் போது கண்களைக் கட்டி காட்டில் விடப்பட்டவனைப் போல மஹிந்த சமாதானத்தை எட்டுவதற்கான வழிதெரியாது தடுமாறுவதையே அவதானிக்க முடிகிறது.



இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்கு என்ன?

பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் அது நேரடியாக முழு அளவில் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதே மஹிந்தவின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். ஆனால் நேரடியாகத் தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை. இலங்கை விடயத்தில் நேரடியாகத் தலையிடாமலும் அதே சமயம் ஒரேயடியாக ஒதுங்கிக் கொள்ளாமலும் பங்களிப்பைச் செலுத்துவதையே இந்தியா விரும்புகிறது. அதனால் நோர்வேயின் அனுசரணைகளை பணிகளையும் இந்தியா வரவேற்கிறது.

இலங்கையில் திரும்பவும் யுத்த நிலைமை வெடிப்பதை தவிர்த்து, சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதை உறுதிப்படுத்தி, விடுதலைப்புலிகளை சமாதானப் பாதையில் தொடர்ந்தும் வைத்திருப்பதே இந்தியாவின் நோக்கமாக இருப்பதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தை

**-நேதாஜி-**

அறிவிக்க உள்ளார்களா என்ற பீதி இந்தியாவை ஆட்கொண்டிருப்பதையே இந்தியத் தலைவர்களின் அண்மைக்கால பேச்சுக்களும் இராஜதந்திர நகர்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன. நவீன சர்வதேச ஒழுங்கமைப்பின் பின்னணியில், சர்வதேசத்தைப் புறக்கணித்து விட்டு மஹிந்த யதேச்சையான முடிவுகள் எதையும் எடுக்க முடியாது என்ற யதார்த்தத்தையே இந்தியா மற்றும் இணைத்தலைமை நாடுகளின் தற்போதைய நகர்வுகள் நிரூபிக்கின்றன.

இதை உணராது தனது மனம் போன போக்கில் மஹிந்த செயற்படுவாரானால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குள் அவர் தள்ளப்படலாம்.

### இராணுவக் கட்டமைப்பு

இங்கே இன்னொரு முக்கிய விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்கான தீர்வுத் திட்டம் எதுவும் இன்றி இணைத் தலைமை நாடுகளையும் இந்தியாவையும் இவ் விடயத்தில் இழுத்து விடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்யும் மஹிந்த தனது இராணுவக்கட்டமைப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் தீவிர கவனம் செலுத்துகிறார் என்பதே அது.

மஹிந்த தற்போதைய இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவை பதவி விலகுமாறு கேட்டு கடும் போக்காளர் என இராணுவத் தரப்பினரால் வர்ணிக்கப்படும் ஜெனரல் சரத் பொன்சேகாவை அப்பதவிக்கு நியமித்துள்ளார். தனது சகோதரரும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியுமான கோதாபய ராஜபக்ஷவை பாதுகாப்பு செயலாளராக நியமித்திருக்கிறார். அதே போல் ஓய்வு பெற்ற பதில் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியாவை பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கத் தீர்மானித்துள்ளார். இவர் ஜாதிக்க ஹெல உறுமயவின் தீவிர ஆதரவாளர் என்பது கவனிக்கத்தக்கது. மேலும் பாதுகாப்பு பிரதியமைச்சராக மற்றுமொரு கடும் போக்காளரான பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். இவை அனைத்தும் பேச்சுவார்த்தைகள் தோல்வி காணுமிடத்து புலிகளை ராணுவ ரீதியில் எதிர் கொள்வதற்கான முஸ்தீபுகளா அல்லது இராணுவ பயமுறுத்தல் மூலம் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான நகர்வுகளா என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

### சமஷ்டித் தீர்வு

தற்போது, தமிழ் மக்களுக்கு பாரம்பரிய தாயக பிரதேசம் இல்லை எனவும் ஒற்றையாட்சியின் கீழ் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் மஹிந்த அறிவித்திருப்பது இந்தியாவுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. எனவே, இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வை விரும்பும் இந்தியா புதிய ஜனாதிபதியின் நிலைப்பாட்டை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

இணைத்தலைமை நாடுகளும் ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையிலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று விரும்புகின்றன. எனவே இந்தியா மற்றும் இணைத்தலைமைகளினூடாக ஒற்றையாட்சித் தீர்வொன்றைத் திணித்துவிட மஹிந்த எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அருகியே காணப்படுகின்றன.

மத்தளத்துக்கு இடதுபக்கத்திலும் இடி வலதுபக்கத்திலும் இடி என்பது போல அவருக்கு ஒரு பக்கத்தில் விடுதலைப்புலிகளும் மறுபக்கத்தில் பேரினவாதிகளும் இடிகொடுத்து வருகின்றனர். அவர்களின் அடிகளை தாங்க முடியாது தடுமாறுகிறார் மஹிந்த.

### அபாயச் சங்குகள்

தமிழ் தலைமை ஒரு குறுகிய கால அவகாசத்தையே மஹிந்தவுக்கு வழங்கியிருக்கிறது. இதை மனதில் கொண்டு தீர்க்கமான ஒரு முடிவுக்கு அவர் வரவேண்டி இருப்பது காலத்தின் கட்டாயமாகும். மஹிந்த எந்த நோக்கத்தை மனதில் நிறுத்தி

(27ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியத்தை மழுங்கடிக்க எதிரிகள் கங்கணம்!


நீர்வேலியில் உயிரிழந்தவர்களின் சடலங்கள்

சிங்கள தேசத்தின் தலைமையைத் தேர்ந்தெடுக்கும். ஜனாதிபதித் தேர்தலில் வாக்களியுங்கள் என்று காட்டுக் கத்தல் கத்தின தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகள். அதை மக்கள் நிராகரித்துவிட்டார்கள்.

எமக்கென்றொரு தலைமை உண்டு. தாயகம் உண்டு நாம் ஏன் சிங்கள தேசத்தின் தலைமைக்கு வாக்களிக்க வேண்டும் என்று நினைத்த தமிழ் மக்கள் - கடந்த காலத்தில் வாக்களித்த வரலாற்றுத் தவறுகளை உணர்ந்து - தாம் உண்டு தம்பாடுண்டு என்று இருந்துவிட்டார்கள். தமிழர் தாயகத்தில் தேர்தல் பற்றிய சிந்தனை கிஞ்சித்தும் இல்லாது போய்விட்டது.

வடக்கில் 7லட்சத்துக்கு மேற்பட்டோர் வாக்களிக்கத்தகுதி பெற்றிருந்தும் ஆக 2ஆயிரம் பேரே வாக்களித்தனர். வாக்களியுங்கள் என்று பல்வேறு விதமாக பிரசாரங்களை முடுக்கிவிட்டிருந்தவர்கள் இதனால் மூக்கு உடைந்து போனார்கள். இவர்களில் ஈ.பி.டி.பியினருக்கு முக்கிய பங்குண்டு.

இத்தகைய நிலையில் தமிழ்த் தேசிய ஆன்மா தலை நிமிர்ந்து சர்வதேசத்தின் கதவுகளை ஒரு கணம் எட்டிப்பார்த்தது; அதனை சர்வதேசமும் நிமிர்ந்துபார்த்தது. இது தமிழினத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. தமிழ்த் தேசியத்துக்கு எதிரான தேசவிரோத சக்திகளுக்கு விழுந்த உச்சந்தலை அடி. இதனால் அவர்கள் கொதிப்படைந்தார்கள்.



## யாழ்.குடாநாட்டுப் படுகொலைகளின் பின்னணியில் சதி!

ஆத்திரத்தைத் தம்முன் அடக்கிக் கொண்டார்கள்.

இது ஒரு புறமிருக்க, தமிழினத்தின் விடிவிற்காகத் தம்முயிர் ஈந்து ஈழத்தாயின் கருவளையில் கண்ணுறங்கும் கண்மணிகளை நினைவுகூறும் தமிழர் தேசிய விழாவான மாவீரர் நாள் கடந்த மாதம் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டில் கடந்த ஆண்டுகளை விட இம்முறை மிகவும் சிறப்பாக மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வெளியேறியிருந்த நிலையிலும் மக்கள் மயப்படுத்தப்பட்ட உணர்வு பூர்வமான நிகழ்வாக மாவீரர் நாள் இடம்பெற்றது. பெருமெடுப்பில் என்றுமில்லாதவாறு வீதிகள் எங்கும் சோடனைகள், அலங்கார வளைவுகள், நினைவுப்பந்தல்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு, சந்திகள் தோறும் எழுச்சி கீதங்கள் என்று களை கட்டி நின்றது யாழ்ப்பாணம்.

விடுதலைப் புலிகள் மக்களை அச்சுறுத்தித்தான் இவ்வாறான விழாக்களை கொண்டாடுகிறார்கள் என தமிழ்த் தேசியத்துக்கெதிரான சக்திகள் புரளிகளைக் கிளப்பிக்கொண்டிருந்த வேளையில் மக்கள் மயமான இத்தகைய எழுச்சிக்கொண்டாட்டங்கள் அவர்களுக்கு சினத்தைக் கிளம்பியது. தேச விரோத சக்திகளை மென்மேலும் ஆத்திரமடையவும் வைத்தது.

நவம்பர் 17இல் மக்களின் தேர்தல் புறக்கணிப்பு, அதைவிட நவம்பர் 27இல் மக்கள் மயமான மாவீரர் எழுச்சிக் கோலங்கள் என யாழ். மக்கள் விடுதலையின் பால் கொண்டிருந்த பற்று தேசவிரோத சக்திகளை வெறுப்பூட்டின. ஆக மக்களை பழிவாங்க அவர்கள் கங்கணம் கட்டினர். கொடூரபணியில் இறங்கி மறைமுகமான யுத்தத்துக்குத் தயாராகினர். ஊர்காவற்றுறையில் அதனை ஆரம்பித்து அவர்கள் இப்போது நீர்வேலிவரை பாய்ந்துவிட்டனர். தமிழ்த் தேசியப்பற்றாளர்கள், ஆதரவாளர்கள் என பலரை போட்டுத்தள்ளத் தொடங்கிவிட்டனர். அவர்களின் கோபம் துப்பாக்கிகளில் தீ நாக்குகளாக வெடித்தன.

கடந்தமாதம் 25ஆம் திகதி நீர்வேலி வடக்கு கரந்தன் பகுதியில் மாவீரர் நினைவுப்பந்தல் அமைப்பதற்கென வீதிச்சோடனையில் ஈடுபட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் என்.நிருபன் என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

ஊர்காவற்றுறையில் கடந்த 26ஆம் திகதி இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போன்று கடந்த வியாழக்கிழமை நீர்வேலிப்பகுதியில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தமது தோட்டத்துக்குப் பசளைக்காக மரக் குழைகளைப் பறித்துவிட்டு வீட்டுக்கு முன்பாக உள்ள தேநீர் கடை ஒன்றில் இரவு 8மணியளவில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த சமயம் அவ்விடத்திற்கு வந்த ஆயுததாரிகள் சன்னதமாடிவிட்டுப் போய்விட்டனர்.

இதில் ஒரு பிள்ளையின் தந்தை உட்பட இருவர் துடிதுடித்து பரிதாபமான முறையில் பலியாகினர். மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார். அவர் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. யாழ். மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் மருந்துவர்கள் அவரைக் காக்கப் போராடுகிறார்கள். மிகக்கொடூரமான இந்தப் படுகொலைகளைக் கண்டித்தும் கொலையுண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் குடாநாடு தலைசாய்த்தது; அனைத்துப் பணிகளும் முடங்கின. இந்தச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யார் என்பது இன்னும் தெரியாத நிலையில் அதற்கான குற்றஞ்சாட்டுக்கள் இனந்தெரியாதவர்கள் எனும் பெயரில் விழுந்துள்ளது. இருப்பினும் இந்தக் கொடூரக் கொலையின் சூத்திரதாரிகள் யார் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாததல்ல.

கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதித் தலைவர், சம்பவம் நடந்த மறுநாள் அங்கு பயணித்தார். அவர் மக்களிடம் கேட்ட ஒரு கேள்வியில் பல அர்த்தங்கள் பொதிந்துள்ளன. "சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாக இராணுவத்தினர் வந்தனரா?" என்பதுதான் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி மற்றி வைனியோன்பாவின் கேள்வி. இந்தக் கேள்வியில் பல அர்த்தங்கள் பொதிந்துள்ளன. ஏனெனில் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சற்றுத் தொலைவில்தான் இராணுவ முகாம் ஒன்று உள்ளது. சூட்டுக்கு இலக்கான இளைஞர்கள் அனைவரும் மாவீரர் நாள் நினைவு தினத்தை நீர்வேலிப் பகுதியில் சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்திருந்தனர். இவர்களுக்கு இராணுவப் புலனாய்வுத் துறையினர் அச்சுறுத்தல்களை விடுத்து வந்துள்ளனர் என்று உள்ளூர்வாசிகளும் உறவினர்களும் தெரிவிக்கின்றனர்.

ஆக, சிங்கள பேரினவாதிகளினதும் அவர்களது கைக்கூலிகளினதும் கைவரிசை இக் கொலைகளின் பின்னணியில் இருப்பது புலனாகிறது. தமிழ் தேசிய ஆதரவாளர்களை சுட்டுக்கொலை செய்வதாலும், அச்சுறுத்துவதாலும் தமிழ்த்தேசியத்தின் பலம் குன்றிவிடும் என்று யாராவது கருதினால் அது அவர்களின் பலவீன்மாகத்தான் கருதமுடியும்.

தமிழினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிங்களப் பேரினவாதத்தால் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழருக்கு எதிராகப் பல்வேறு விதமான அராஜகங்கள் கட்டவிழ்க்கப்பட்டன. குன்றியதா தேசியத்தின் பலம்?

83 இனக்கலவரம், 95 இடம்பெயர்வுகள் என்று எத்தனையோ விதத்தில் தமிழ்மக்கள் பழிவாங்கப்பட்டனர் அத்தகைய பழிவாங்கல்களினால் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கலாம் என்று சிங்கள பேரினவாதம் இன்று நேற்றல்ல அன்று தொடக்கம் கனவுகண்டு வருகிறது. ஆனால், அது முடியாது.

தலைவர் வே.பிரபாகரன் 1985இல் கூறியிருந்தார் "என்றோ ஒருநாள் எமது விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக உருவெடுக்கும்" என்று. அத்தகைய கருத்து இன்று நிதர்சனமாகியுள்ளது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டம் இன்று வீறுகொண்டுள்ளது. தமிழ் தேசியத்தை மழுங்கடிக்கும் நோக்கில் அதில் பற்றுள்ளவர்களையும், ஆதரவாளர்களையும் எதிரிகளும் துரோகிகளும் படுகொலை செய்வதும் பழிவாங்குவதும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

அத்தகைய அராஜகங்களும், பழிவாங்கல்களும் தமிழ்த்தேசிய ஆன்மாவை மென்மேலும் தட்டியெழுப்பும். தமிழ் மக்களின் விடுதலை மூச்சு இன்னும் பெரியளவில் வீச்சுப் பெறும். *



சுடர் ஒளி

டிசம்பர் 11 - 17, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

# நெருங்கி வருகிறது இந்தியா

இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டும் என்கிறது இந்தியா. அத்துடன் அனுசரணைப் பணியில் நோர்வேயுடன் இணைந்து இந்தியா உதவும் என்றும் அது தெரிவிக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷியாம் சரண் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையில் நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவினதும் மற்றும் ஆசிய நாடுகளினதும் உதவி பெறப்படும் என்று மட்டும் தெரிவித்திருந்தார்.

ஆனால் சமாதானப் பணிகளில் இருந்து நோர்வேயை புறம்தள்ள முடியாத நிலைமை தற்பொழுது ஏற்பட்டிருப்பதை ஆகப் பிந்திய அரசியல் நகர்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

நோர்வேயை புறந்தள்ளி விட்டு அரசு தனக்கு விரும்பிய நாடு ஒன்றை ஒரு தலைப் பட்சமாகக் கொண்டு வருவதும் சாத்தியம் இல்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளில் பின்பலமாக இருந்து வரும் அமெரிக்காவும் மற்றும் சில மேற்கு நாடுகளும் நோர்வேயின் பங்களிப்பு தொடருவதையே விரும்புகின்றன. ராஜபக்ஷ என்னதான் சொன்னாலும் எந்த ஒரு நாடும் அமெரிக்காவையும் அதன் நேசநாடுகளையும் அனுசரித்துப் போக வேண்டிய கட்டாய நிலைமையை 'புதிய உலக ஒழுங்கு' ஏற்படுத்திவிட்டிருக்கிறது. அரசின் இனவாதக் கூட்டாளிகளான ஜே.வி.பி யும் சிஹல உறுமையும் இந்த யதார்த்த நிலைமை தெரியாதவர்கள்.

ஆகவே, நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரத்தான் போகிறது.

இப்படியான நிலையில் தனது ஆட்சிப் பங்காளர்களான ஜே.வி.பியையும் சிஹல உறுமயவையும் திருப்திப் படுத்தும் நோக்கத்துடனேயே இந்தியாவின் உதவியையும் நாட நடவடிக்கை எடுத்து வருகிறார் ஜனாதிபதி.

தனது நலன்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை மீது ஒரு பிடியை வைத்திருக்க எப்பொழுதும் விரும்பும் இந்தியாவுக்கு இலங்கையின் புதிய அரசின் காய் நகர்த்தல்கள் வாய்த்திருக்கின்றன.

இந்தியாவின் தென் மண்டல இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.தர்காரின் இலங்கை விஜயமும் ஓமந்தை முன்னரங்கப் பகுதிக்கு அவர் மேற்கொண்ட பயணமும் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நெருக்கத்தையே எடுத்துக் காட்டுகிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து வந்த அதே சமயம் புலிகளுக்கெதிரான சர்வதேச வலைப்பின்னல் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

ரணிலின் ஆட்சி கலைக்கப்பட்டு சந்திரிக்கா ஆட்சி அமைத்த போது அவரின் நெருங்கிய சகாவான லக்ஷமன் கதிர்காமர் இந்தப் பணியை தொடர்ந்தார்.

சர்வதேச மட்டத்தில் புலிகள் இயக்கத்தை தடை செய்வது, புலிகளுக்கு வரும் ஆயுதங்களைப் பறிப்பது, புலிகளை பலவீனப்படுத்துவது ஆகியவை இவற்றில் அடங்கும். ஆனால் இவை பயனற்றுப் போன நிலையில் மஹிந்தவின் சிந்தனை வேறு விதமாக இருக்கிறது.

இனவாதக் கூட்டுக்குள் சிக்கி இருக்கும் மஹிந்த யுத்தம் ஒன்று ஏற்பட்டால் சர்வதேச உதவியுடன் அதனை எப்படி முறியடிப்பது என்பதிலேயே கவனமாக இருக்கிறார்.

பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றெல்லாம் இந்தியா கூறி வந்தாலும், இலங்கை விவகாரத்தில் இந்தியா சமீபத்தில் காட்டி வரும் சிரத்தை, கவனம், கரிசனையை நோக்கும் போது இந்தியாவின் உள்நோக்கம் குறித்து சந்தேகம் எழுகிறது.

அரசமைப்பு விவகார மற்றும் தேசிய நல்லிணக்கஅமைச்சரான டியூ குண சேகரா, புலிகளுடன் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் இந்தியாவும் மற்றும் நாடுகளும் இலங்கைக்கு உதவும் என்று தெரிவித்துள்ளார்.

ஆகவே, புதிய அரசு தான் சமாதான முயற்சிகளைத் தொடர விரும்புவதாக சர்வதேசத்துக்கு காட்டிக் கொள்ளவே நோர்வேயின் பங்களிப்பு தொடரும் என்கிறது.

ஆனால் அதன் உள்நோக்கம் யுத்தம்தான். அதற்காகத் தான் இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

# கண்மூடப் போகும் காலவகாசம்

சமாதானக் கதவுகள் மூடப்பட்டு விட்டன. மூடப்பட்டுள்ள கதவுகளை தட்டித் திறக்கச் செய்யவேண்டிய பொறுப்பு தென்னிலங்கைத் தலைமையிடம் விடப்பட்டுள்ளது. ஆனால் தென்னிலங்கையின் சமாதானத்தை நோக்கிய தற்போதைய நகர்வுகள் பூட்டப்பட்டுள்ள கதவுகளை திறக்க வைக்குமா என்ற சந்தேகத்தை சமாதான ஆர்வலர்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

## முடிந்த முடிவு

தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளை - அபிலாஷைகளை நிராகரித்து:-



❖ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில்-

❖ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தில்-

❖நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்கையில்-

ஜனாதிபதி ஆற்றிய உரைகளே சமாதானக் கதவுகளை மூடவைத்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் தின உரையின் போது,

"இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடை என்றும், சிங்கள இனத்துக்கே உரித்தான சொத்துடமை என்றும் மஹாவம்சம் திரித்து விட்ட புனைகதையில் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டுகிடக்கிறார்கள். அத்துடன் சிங்கள மக்களது கருத்துலகில் மாற்றம் ஏற்படும் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் அது புத்துயிர் பெற்று வருகின்றது"-என்று கூறியிருந்தார்.

இவ்வாறு தமிழ்த் தலைமை மற்றும் மக்கள் மத்தியில் தென்னிலங்கைபற்றி நிலவும் சிந்தனைகளே சமாதானக்கதவுகள் மூடப்படுவதற்கான காரணங்களாக அமைந்தன.

தவிர, தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையை நிகழ்த்துவதற்கு சில தினங்களுக்கு முன் "நாங்கள் இதுவரை அடைந்த வெற்றிகளுக்கு எமது இராணுவ பலமும் விழிப்புணர்வுமே காரணமாக அமைந்தன. எமது இறைமையை வென்றெடுத்ததற்கான வெற்றிக் கொடியை நாம் எப்போது நாட்டுகிறோமோ அன்றுதான் தமிழீழ தேசத்தின் தோற்றத்துக்காக தமது இன்னுயிரை நற்கொடையாக ஈந்த 17000 மாவீரர்களுக்கான காணிக்கையைச் செலுத்தியவர்களாவோம். இந்தப் பாரிய பொறுப்பை கருத்தில் கொண்டும் வெளி நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்தேச மக்களுக்கு நாம் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றிக் கொள்ளவும் எமது சுதந்திர தேசத்தை வெகுவிரைவில் பிரகடனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்" - என்று தமிழ்ழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான் தெரிவித்ததாக பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

இவரது கருத்துக்கு உரமூட்டுவது போல கடற்படைத் தளபதி சூசை தனது பிரிவைச் சேர்ந்த துணைப்படையினர் முன்னிலையில் உரையாற்றும் போது.

"80களில் 2000 வீரர்களுடன் மட்டும் நாம் இந்திய மற்றும் ஸ்ரீலங்கா படைகளுடன் மோதி வெற்றி கொண்டோம். இப்போது நிலைமை முற்றாக மாற்றமடைந்துள்ளது. வட புலத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எமது இலட்சியத்தில் நாம் உறுதியாக இருக்கிறோம்"- என்று தெரிவித்ததாகவும் செய்திகள் வெளியாகின.

தமிழீழத்துக்கான தேசியக் கொடியை ஏற்றும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றிய வழிகாட்டுதல் வெளியிடப்பட்ட சம காலத்தில் தான் குறிப்பிட்ட தலைவர்கள் இருவரும் முன்னர் கூறப்பட்டுள்ளது போல் உரையாற்றி இருக்கிறார்கள்.

இவை எல்லாம் தமிழ் தேசத்தின் தலைவனது முடிந்த முடிவை சுட்டிக்காட்டும் சமிக்ஞைகளாகவே அமைந்துள்ளன.

## சமாதானத் திறவுகோல்

நாம் முன்னர் கூறியிருப்பதைப் போல் சமாதானக் கதவுகள் மூடப்பட்டு இருந்தாலும் சமாதானப் பேச்சுக்களை முன்நகர்த்துவதற்கான ஏற்பாடுகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தலைவர் பிரபாகரன் தனது கடும் போக்கைத் தளர்த்தி தென்னிலங்கைக்கு சொற்ப கால அவகாசத்தை வழங்கியிருக்கிறார். பூட்டப்பட்டுள்ள சமாதானக்கதவுகளைத் திறப்பதற்கு தென்னிலங்கைத் தலைமையிடம் அவர் கொடுத்திருக்கும் திறவுகோல் தமிழ் தேசம் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமாதான முன்னெடுப்புத்தான். தன்னிடம் வழங்கப்பட்டுள்ள திறவுகோலை சரியான முறையில் பயன்படுத்த தென் தேசம் தவறுமானால் பூட்டப்பட்டுக் கிடக்கும் சமாதானக் கதவுகள் நிரந்தரமாகவே மூடப்பட்டு விடும்.

## இடது சாரிகள்

தமிழீழ விடுதலைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த சமயத்தில் பொங்கி எழுந்த சுனாமிப் பேரலையும் அதைத் தொடர்ந்து தமிழ் தேசம் எதிர் கொண்ட பேரழிவுகளும் விடுதலைப் போருக்கான ஆயத்தங்களை ஒத்திவைக்கத் தன்னை நிர்ப்பந்தித்ததாக தென்தேசத்துக்கு ஞாபகமூட்டி இருக்கிறார் தலைவர்.

தமிழ்த் தேசத்தின் சிந்தனை இப்படி இருக்க இனப்பிரச்சினை குறித்து தலைவர் பிரபாகரன் விடுத்த கால அவகாசத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் அரசமைப்பு விவகார அமைச்சருமான திரு டியு குணசேகரா தெரிவித்துள்ளார். 50 ஆண்டுகால இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண்பது சாத்தியமல்ல என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஸ்ரீலங்காவின் தீராத நோயாக இனப்பிரச்சினை தொடர்கிறது என்றால் அதற்கு காரணம் யார்? மாவட்ட சபைகளோடு தீர்ந்திருக்கவேண்டிய இந்தப் பிரச்சினை இப்போது சுதந்திர தேசம் ஒன்றைத் தொட்டு நிற்பதற்கு யார் பொறுப்பு?

- சுபாஷ் -

சிங்கள-பௌத்த பேரினவாதம் மட்டுமன்றி சாகா வரம் பெற்று நாடாளுமன்ற நாற்காலிகளை என்றும் தாம் அலங்கரித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று கனவு கண்டு, இனவாதத்துக்குத் தீனி போட்ட டியு குணசேகரா போன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாத அரசியலும் இதற்கான காரணங்களில் ஒன்று என்பதையும் சரித்திரம் மறந்துவிடப் போவதில்லை.மறைத்துவிடப்போவதில்லை.

உலகில் அடக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட, வர்க்கத்தினரை கைதூக்கிவிடுவதற்கான போராட்டங்களை இடது சாரிகள் முன்னின்று நடத்தி வெற்றி கண்டமையே சரித்திரத்தின் நிலையான பதிவுகள். ஆனால் ஸ்ரீலங்காவில்?

சிறுபான்மைத் தமிழினத்தின் பிறப்புரிமைகள் பறிக்கப்படுவதற்கு, அவர்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஓரங்கட்டப்படுவதற்கு, இனவாதக்கட்சியான ஸ்ரீலங்கா சு.கட்சி பதவியில் இருந்த காலத்தில் அதனுடன் ஒட்டிக்கொண்டிருந்த இடது சாரிகள் துணைபோயிருக்கிறார்கள்.

ஸ்ரீலங்காவின் அரசியல் பரப்பில் இவர்கள் தடம் புரண்ட சந்தர்ப்பங்கள் பலவற்றைப் பற்றி இப்பந்தியில் பல தடவைகள் எழுதியிருக்கிறோம். மீண்டும் ஒரு முறை ஒரு விடயத்தை மட்டும் திரும்பி பார்க்க விரும்புகிறோம்.

ஒரு மொழி இரு தேசங்கள், இரு மொழிகள் ஒரு தேசம் என்று 1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பழம்பெரும் இடது சாரித் த்லைவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா தனது 1972 இன் அரசமைப்பின் ஊடாக தமிழரின் குரலுக்கு அரணாக இருப்பதற்கென சோல்பரி யாப்பின் மூலம் உருவாக்கப்பட்ட செனட் சபையை இல்லாதொழித்ததுடன் பௌத்த மதத்தையும் அரியணையில் ஏற்றி வைத்தார். இவரின் பேரினவாதச் செயற்பாடு இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் சிலைமேல் எழுத்தாக அழியா வரம் பெற்றதொன்றாகி விட்டது.

தமிழ் மக்களின் விடுதலை உணர்வைக் கூர்மையடையச் செய்து நாட்டைத் துண்டாடியதில் இந்த நாட்டு இடது சாரிகளின் இனவிரோதச் செயற்பாடுகளுக்கும் பெரும் பங்குண்டு. 'நமக்கென ஒரு நாடில்லாவிடினும் நாம் இல்லாத நாடில்லை' என்று கூறி, இன்று தமிழ் தேசத்தின் விடியலுக்காகக் காத்திருக்கும் தமிழ் மக்கள், தமிழ்த் தேசத்தின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது இந்த இடது சாரிகளையும் நன்றியோடு நினைவு கூர்வார்கள் என்பதை டி.யு.குணசேகரா போன்ற இடதுசாரிகள் தெரிந்து கொள்ளட்டும்.



டி.ஈ.டப்ள்யூ.குணசேகரா

## பாதுகாப்பு செலவினம் அதிகரிப்பு

தென்னிலங்கையில் இடம் பெற்றுவரும் அரசியல் நகர்வுகளைப் பார்க்கும் போது அமைச்சர் டியு குணசேகர கூறியிருப்பதைப் போல் தமிழ்த் தேசம் விடுத்த கால அவகாசம் நிராகரிக்கப் பட்டு விட்டதைப் போன்ற ஒரு தோற்றமே தென்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த இன்னும் சிலதினங்களில் தனது வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்க இருக்கிறார். தனக்கு வாக்களித்த தென்னிலங்கை மக்களின் உச்சியைக் குளிரவைக்கும் விதத்தில் பல சலுகைகள் இவரால் அறிவிக்கப் பட உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் தமிழ் மக்களை நோக்கி போரா? சமாதானமா? என்ற கேள்வியையே விடுக்க இருப்பதாக அறிகிறோம்.

டியு குணசேகராவும் பிரபாகரனின் கால அவகாசத்தை நிராகரிப்பதாகக்

(13ம் ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத் திட்டமா? தீர்த்துக் கட்டவா?



பிரபா



மஹிந்த

விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் கடந்த 27ஆம் திகதி மாவீரர் நாள் உரையினை ஆற்றியிருந்தார். இவரது உரை உலகெங்கும் பல தரப்புக்களாலும் உன்னிப்பாக அவதானிக்கப் பட்டது. இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற ஒரு சூழலில் பிரபாவின் மாவீரர் நாள் உரை வந்துள்ளது.

அதில் அவர் பல விடயங்களை தொட்டுச் சென்றிருந்தார். கடந்த காலப் பேச்சுக்கள், சிங்கள தேசத்தின் இனவாதப் போக்கு, எதிர்கால சமாதானத்தின் நிலை என்பன குறித்து தெளிவான செய்திகளை அவர் வழங்கி இருந்தார்.

மாவீரர் நாள் உரையின் பின்னரான நிலைமைகளையும், அடுத்த ஒரு சில மாதங்களில் நடைபெறக்கூடிய சாத்தியமான நிகழ்வுகள் பற்றியும் சிந்திக்கும் போது தெளிவான பாதை ஒன்றுக்கான சமிக்ஞையை தென்னிலங்கை இதுவரை வெளிப்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மாவீரர் நாள் உரையின் முக்கிய பகுதிகளையும், தென்னிலங்கை ஆட்சியாளர்களின் 'சிந்தனைகளையும்' ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையில் உள்ள இடைவெளி மிகப் பெரியது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

சமாதான முயற்சிகளில் தென்னிலங்கையின் புதிய ஆட்சிப் பீடத்தின் கொள்கை என்ன என்பது பற்றி சிறிது விளங்கிக் கொண்டால் உண்மையான நிலைமையினை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும். சமாதான முயற்சியில் அரசின் அடிப்படைக் கொள்கையின் சுருக்கம் இதுதான்.

❖ அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களின் போது அனைத்து தரப்பினரையும் இணைத்து அனைவருடனும் பேச்சுக்களை மேற்கொள்வது.

❖ இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி கட்டமைப்பை பேணுகின்ற விதத்தில் அதிகாரப் பகிர்வுக்கான அரசமைப்பொன்றை ஏற்படுத்துதல்.

❖ தமிழரின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை என்பவற்றை ஏற்றுக் கொள்ளாது விடல்.

போன்றவற்றுடன் மஹிந்த 'புதிய' சமாதானப் பாதையை முன்னெடுக்கப் போவதாக கூறுகின்றார்.

அனைத்தையும் புதிதாக மேற்கொள்வோம் என்ற தொனிப் பொருளில் தொடங்கியுள்ள புதிய அரசின் கொள்கைக்கும் தமிழரின் அரசியல் அபிலாஷைகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருப்பதை உணர முடியும்.

எனினும் தமிழர் தலைமை சமாதானத்தின் மீது கொண்ட பற்றுதியை வெளிப்படுத்தும் வகையில் மஹிந்தவுக்கு சிறிய கால அவகாசம் ஒன்றை வழங்கியுள்ளார் தலைவர் பிரபா.

''கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் மத்தியிலான இடைவெளி மிகப் பெரியது. எனினும் அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுபவர் என்பதால் சமாதான வழிமுறைகளை அவர் எவ்விதம் கையாளப் போகிறார் என்பதையும் தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப் போகிறார் என்பதையும் முதலில் நாம் அறிந்து கொள்வது அவசியம்'' என பிரபா குறிப்பிட்டுள்ளார்.

தலைவரது உரையின் இந்தப் பகுதி தற்போதைய யதார்த்தத்தை வெளிப்படுத்தும் அதேவேளை அடுத்த பகுதி காத்திருக்கும் ஆபத்தை பிரதிபலிக்கிறது.

தலைவர் உரையின் இறுதிப் பகுதியில் தென்னிலங்கை சக்திகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பின்வரும் செய்தியை வழங்குகிறார்.

''பொறுமையிழந்து, நம்பிக்கையிழந்து விரக்தியின் விளிம்பில் நிற்கும் எமது மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். வரையறுக்கப்பட்ட ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் எமது மக்களின் அரசியல் வேட்கைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான அரசியல் தீர்வுத் திட்டத்தைப் புதிய அரசு முன்வைக்க வேண்டும். இது எமது இறுதியான, உறுதியான அவசர வேண்டுகோள் ஆகும். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து கடும் போக்கை கடைப்பிடித்து காலத்தை இழுத்தடிக்க புதிய அரசு முற்படுமானால் நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேச சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்'' என்ற கனதியான செய்தியை பிரபா கூறியுள்ளார்.

தென்னிலங்கையின் சில அரசியல் ஆய்வாளர்கள் 'குறுகிய காலம்' என்ற பிரபாவின் பதத்துக்கு பலவித அர்த்தங்களைக் கொடுக்க முற்பட்டுள்ளனர். குறுகிய காலம் என்பது ஒரு வருடம் என வியாக்கியானம் செய்கின்றனர்.

தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு வருடம் என்ற குறுகிய காலத்துக்கு காத்திருக்க தயாரில்லை. ஆகக் கூடியது மூன்று மாதங்களாகத்தான் அது இருக்கும் என நம்பப்படுகிறது. தலைவரின் உரையிலிருந்து 3 மாதங்களை சேர்த்துப் பார்த்தால் பெப்ரவரி மாதத்தை அது குறிக்கிறது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22 இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன் முறிவும் பெப்ரவரியில் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ நினைப்பது போல் முதலில் பேச்சு, பின்னர் தீர்வு என்பதெல்லாம் பகல்கனவு. முதலில் திட்டம். உருப்படியாக அதை முன்வைத்த பின்னர் பேச்சு. இதுதான் புலிகளின் நிலை.

தம்மை பொறிக்குள் தள்ளும் சிங்கள அரசுகளையும், தமக்கெதிரான நிழல் யுத்தத்தைத் தொடரும் சிங்கள படைகளையும் புலிகள் நம்பத் தயாராக இல்லை. முன்னரும் புலிகள் நம்பியது கிடையாது. பிரபாகரன் அடிக்கடி சொல்லும் வார்த்தை இது. 'நம்ப நட நம்பி நடவாதே'' என்பதுதான் அது.

ஏற்கனவே சமாதானம் என்ற போர்வையில் இரண்டு ஆண்டுகள் புலிகள் என்ற உலகப் புகழ் பெற்ற விடுதலை இயக்கத்துடன் விளையாட முற்பட்ட ரணில் விக்கிரமசிங்கா இறுதியில் உலகப் புகழீட்டி நிற்கும் புலிகளாலும், தமிழ் மக்களாலும் பொறிக்குள் வீழ்த்தப்பட்டு முதுகெலும்பு முறிக்கப்பட்டார்.

அவர் இனிக் கனவிலும் புலிகளுடன் விளையாட மாட்டார் என நம்புவோம்.

இந்த நிலையில் மஹிந்த தெளிவான இரண்டு தெரிவுகளில் ஒன்றை எடுக்க வேண்டும். ஒன்று யுத்தம். மற்றையது சமாதானம்.

அவரைப் பொறுத்தவரையும், அவரைச் சுற்றியுள்ளவர்களைப் பொறுத்தவரையும் சமாதானம் சற்றுத் தொலைவில்தான்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவீரர் நாள் உரையின் இறுதியில் தலைவர் தமிழர்களுக்கும் ஒரு அழைப்பை விடுத்துள்ளார்.

களமாடி வீழ்ந்த மாவீரர்களின் இலட்சியங்களை சிலுவையாகச் சுமந்து கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் விடுதலைப் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்பதுதான் அது. தீர்வுத் திட்டமா? தீர்த்துக் கட்டவா? என்ற தமிழரின் கேள்விக்கு விடை தர வேண்டிய பொறுப்பு சிங்கள தேசத்துக்குரியது.

ஷோபா


## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம்" (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

டிசம்பர் 17 – 21 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEL No. 5368426, 2368427
Hot Line: 0777 569205


வவுனியாவில்...

2006 ஜனவரி 3 - 4
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

டிசம்பர் 5 - 11
A.S.N. கல்யாணமண்டபம்
392/A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 222 3181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



# தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள்!

இப்போது இருப்பது சமாதானமா? போரா? போருக்கான சமாதானமா? சமாதானத்துக்கான போரா? யாழ் மக்கள் தங்கள் தலையைப் பிய்த்து உதறிக் காயப்போட வைத்திருக்கின்றன இந்தக் கேள்விகள்.

நாளாந்தம் துப்பாக்கிச்சூடு, கிரனேட் வீச்சு, யாருக்காவது காயம், கோபத்தில் இராணுவம் மக்களைத் தாக்குகிறது. அடிக்கடி உயிரிழப்பு அதனால். அவ்வப்போது ஹர்த்தால்கள், போராட்டங்கள் என்று அல்லோலகல்லோலப்படுகிறது யாழ்ப்பாணம். இவையெல்லாம் போர்க்கால சமிக்ஞைகள். சமாதானத் திரைக்குப் பின்னே நடக்கும் முழுத் தீவிரப் போரின் வெளிப்பாடுகள்.

இதுவரை கிழக்கில் தொடர்ந்து வந்தது இந்த நிழல் போர் இருண்ட யுத்தம் – இப்போது யாழ் மண்ணுக்கும் பரவி விட்டது. இவற்றுக்குப் பெயர் இனந்தெரியாத நபர்களின் தாக்குதல்கள். தினப் பத்திரிகைகளின் செய்திகளில் தவறாது இந்த வசனத்துக்கு தினம் தினம் இடமுண்டு. இந்தத் தாக்குதல்களில் எப்போதுமே கொல்லப்பட்டவர் மட்டுமே அடையாளம் காணப்படுவார். கொலைக்கு காரணமானவர் பக்கம் வெறும் இருள் மட்டும் தான். 'இருண்ட யுத்தம்' என்பது பொருத்தமான பெயர்தான்.

இதன் கடைசித் தாக்குதல் யாழ் நகரில் நடந்தது. கிளைமோர் தாக்குதல். 6 சிப்பாய்கள் அந்த இடத்திலேயே பலி! ஒருவரை காயத்துடன் அவசரமாக பலாலிக்கும் பின்னர் கொழும்புக்கும் கொண்டு பறந்தனர். தாக்குதல் நடந்த இடம் பலாலி வீதி. யாழ்ப்பாண இராணுவத்தினரின் முதன்மையான விநியோக மார்க்கம். எந்நேரமும் உஷாராக பாதுகாப்புடன் இருக்கும் வீதி. தாக்குதல் அங்கேயே நடத்தப்பட்டது. பகல் ஒரு மணியளவில் வெடித்தது. காது பிளந்த சத்தத்தில் அப்பகுதி ஒரு கணம் கலங்கியது.

மிகத் துணிச்சலான தாக்குதல். இராணுவ முகாமுக்கு அருகிலேயே நடத்தப்பட்டது. வீதிக் காவலுக்கு உணவுக்காகக் காத்திருந்த சிப்பாய்களுக்கு உணவு கொண்டு புறப்பட்டவர்கள் உயிர்போனவர்கள் மட்டும்தான் போனது.



ஆத்திரப்பட்ட அவர்கள் வீதியில் போவோர் வருவோரைப் பிடித்து வைத்துத் தாக்கினர். எதிரி முழு இருட்டில் கண்ணில் பட்டவர்களுக்கு, தாம் அடி கிழக்கில் தான் விதைத்ததை, வடக்கில் அறுவடை செய்தது இராணுவம்.

கிளைமோர் வெடித்த சிறிது நேரத்தில் அங்கிருந்த திருநெல்வேலி நகரம் வெறிச்சோடியது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் அநேகமான கடைகள் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த ஒரு சில கடைகளின் கதவுகள் சாத்தப்பட்ட விதம் யாரும் அறியாத கவு. இருந்த மக்கள் சென்ற இடம் தெரியாது. மாலை 5 மணிக்குப் பிறகு நகரம் அமைதியடைய வழமைக்குத் திரும்பி விட்டது. யாழ் மக்கள் போரை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார்கள். குண்டு வெடித்தால் மூடுவதும் சிறிது நேரத்திலேயே திறப்பதும் போர்க்காலப் பழக்கம் தானே.

2002 பெப்ரவரியில் ரணில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் மீது நடத்தப்பட்ட முதல் பெரும் தாக்குதல் இது. இதற்கு முன்னரும் இப்போதும் யாழ் குடாநாட்டில் இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன, நடத்தப்படுகின்றன. ஆனால், இத் தாக்குதலில் போர்க்காலம் போன்று கிளைமோர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நீர்வேலியில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னணியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமாரின் இறுதிக்கிரியை நடைபெற்ற சமயத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பது ஒரு தகவல் தெரிவித்தது. இந்தத் தாக்குதலுக்கு மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

வடக்கு – கிழக்கில் உள்ள சகல பொதுமக்களுக்கும் விடுதலைப் புலிகள் அண்மையில் தமது ஆயுதப் பயிற்சிகளை வழங்கி இருந்தனர். பயிற்சிகளை முடித்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டதே இந்த மக்கள் படை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கிவரும் இந்தப் படை, இராணுவத்தினரால் கைவிடப்பட்ட ஆயுதத் தளபாடங்களைக் கொண்டே அவர்களைத் தாக்குகிறது என்று கூறப்படுகின்றது.

வடக்கில் தமிழ் இளைஞர்கள் – யுவதிகள் – கொல்லப்பட்டால் பழிவாங்கும் நடவடிக்கையாக இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது மக்கள் படை. இனி வரும் காலம் இனிமையானதாக இருக்காது, படையினருக்கும் பொது மக்களுக்கும் என்று கட்டியம் கூறுகின்றது இந்த அறிக்கை.

விடுதலைப் புலிகள் இதனை மக்கள் போராட்டம் என்கிறார்கள். இராணுவமோ, மக்களின் பெயரில் புலிகள் தான் இதனைச் செய்கிறார்கள் என்கிறார்கள். பத்திரிகைகள் இனந்தெரியாதவர்கள் என்கின்றன. கிழக்கிலும் இதே நிலைதான். அங்கும், குற்றச்சாட்டில் சற்று மாறுபட்டு கருணா குழுதான் கிழக்கு தாக்குதல்களுக்குக் காரணம் என்கிறது இராணுவம். ஆனால், கருணாவின் பெயரில் இராணுவப் புலனாய்வுத் துறைதான் அனைத்துக்கும் காரணம் என்கின்றனர் புலிகள். அதனையும் இனந்தெரியாதவர்கள் என்கின்றன பத்திரிகைகள். இதனால் தான் கிழக்கில் விதைத்ததை வடக்கில் அறுக்கிறது இராணுவம் என்கிறோம். என்ன நடக்கின்றது என்று திணறுகின்றனர் மக்கள். ஒன்று மட்டும் அவர்களுக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. அது விரைவில் போர் வரப்போகிறது என்ற செய்திதான்.

போர் வந்தால் மின்சாரம் இருக்காது. தொலைக்காட்சி இருக்காது. தொலைபேசியும் [illegible] இருக்காது. மீண்டும் மண்ணெண்ணெய் விளக்குகள், கொழும்பில் இருந்து சாமான்களுக்கு காத்திருக்கும் நிலை எல்லாவற்றையும் எதிர்கொள்ள மக்கள் தயாராகிவிட்டார்கள்.

"இதையெல்லாம் நாங்கள் பார்க்காததா என்ன? [illegible]" என்று சொல்லும் [illegible] எதிர்கொள்ளத் தயாராகும் மக்களுக்கு, [illegible]

மக்கள் தயாராகிவிட்டார்கள் என்றால் இனி என்ன போர் வரவேண்டியது தானே? [illegible] சம்பவம் [illegible] கட்டியம் கூறியுள்ளது. இனி இது பரவும். வடக்கு – கிழக்கு எங்கும் 'மக்கள் படை' வெடிக்கும். அங்கு நிலை கொண்டுள்ள படைகளின் கட்டுக்கோப்பு குலையும். அவர்கள் மக்களைத் தாக்கும். மக்கள் தாக்கப்படும் போது அவர்களின் காவலர்களான புலிகள் வாழாவிருக்க முடியுமா? அப்போது போர் மீண்டும் பூத்துப் பெருகும். இதுதானே நியதி!

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறமாட்டேன் என்று மஹிந்த கூறிக் கொண்டிருக்கையிலேயே போர் வெடித்துவிடும் போல் இருக்கிறது. நிலைமை மோசமடைகின்றது என்றே கண்காணிப்புக் குழுவும் கூறுகின்றது. புலிகள் மீது குற்றஞ்சாட்டிவிட்டு இந்தச் சம்பவத்தை கவனத்தில் எடுக்காமல் இருந்தால் நிலைமை இன்னும் மோசமடையவே அது வழிவகுக்கும்.

தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விரைவில் சமாதான முயற்சிகளை மஹிந்த ஆரம்பிக்காது விட்டாரானால், போர் இனித் தவிர்க்க முடியாதது. ஏனெனில் தமிழ்மக்கள் அதற்குத் தயாராகிவிட்டார்கள். ◆



# பி.ஜே.பியிலிருந்து உமாபாரதி மீண்டும் வெளியேற்றம்; புதிய கட்சி தொடங்குவார்?


பாரதிய ஜனதாவின் சர்ச்சைக்குரிய தலைவரான உமா பாரதி மீண்டும் ஒரு தடவை கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஒரு வருட காலத்துக்குள் அவர் இவ்வாறு வெளியேற்றப்படுவது இது இரண்டாவது தடவை ஆகும். 2004 நவம்பரில் கட்சித்தலைவர் அத்வானியை தொலைக்காட்சிகாமராக்கள் முன்னிலையில் நீட்டிப் பேசியதால் உமாபாரதி கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். பின்னர் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியதையடுத்து மீண்டும் சேர்க்கப்பட்டார்.

எனினும் மத்திய பிரதேச முதல்வராக தன்னை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் கைவிடவில்லை. வழக்கு ஒன்று காரணமாக 2004 ஜூலையில் அவர் துறந்த அப்பதவியை மீண்டும் தருமாறு அவரும் அவரது ஆதரவாளர்களும் கோரியதை அடுத்து கட்சியின் நாடாளுமன்ற அவை கூடியது.

அதில் தற்போதைய முதல்வர் பாபுலால் கோரை அகற்றுவதென்று முடிவானது. எனினும் முதல்வராக உமா பாரதியை நியமிக்காது சிவ்ராஜ் சிங் சௌஹானை நியமிப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன்படி மத்திய பிரதேச மாநில பிஜேபி எம்.எல்.ஏக்களின் கூட்டத்தில் சௌஹானை முறைப்படி தெரிவு செய்வதற்கு கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு வெளியே உமாபாரதி ஆதரவாளர்கள் கோஷமிட்டு பதாதைகளை விரித்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். கூட்டத்தில் பொதுச் செயலாளராக பங்குகொண்ட உமாபாரதி வெளிநடப்புச் செய்தார். கட்சியை விமர்சித்து காட்டமான அறிக்கையும் அவரால் வெளியிடப்பட்டது. இதனையடுத்தே கட்சி அவரை நீக்கி உள்ளது. இம்முறை மன்னிப்புக் கேட்டு மீண்டும் இணைவாரா என்பது தெரியவில்லை.

அதிரடி அறிக்கைகள் விடுபவரான உமாபாரதி சமீபகாலமாக கட்சிக்குத் தலையிடியாகவே இருந்து வந்தார். ஒரு முறை அவரை மன்னித்த கட்சி இந்த முறை அவரை அகற்றியே தீருவது என்று முடிவு செய்து விட்டதாகத் தெரிகிறது.


உமாபாரதி

மூத்த தலைவரான வாஜ்பாயும் அத்வானியும் அவருக்கு எதிரானவர்கள். இரண்டாம் நிலை இளம் தலைவர்களான அருண்ஜேட்லி, சுஷ்மா ஸ்வராஜ், வெங்கையா நாயுடு, பிரமோத் மஹாஜன் ஆகிய 4 பேரும் அதைவிட உமாபாரதிக்கு பிரதான எதிரிகள். ஏனெனில் டிசம்பரில் அத்வானி தலைவர் பதவியை ராஜினாமா செய்யும் போது தலைவர் பதவியை குறி வைப்பவர்களே இந்த நால்வரும். உமாபாரதி முதல்வர் பதவியில் இருந்தால் தலைவர் பதவியைக்கோர நல்ல வாய்ப்புக் கிடைக்கும். ஆனால் இம்முறை அவரை கட்சி திட்டமிட்டு வெளியேற்றிவிட்டது.

எனினும் மத்தியபிரதேசத்தில் பல பிஜேபி தலைவர்கள் உமாபாரதிக்கு ஆதரவு தெரிவித்து கட்சியை விட்டு விலகியுள்ளனர். அத்துடன் உமாபாரதி தாழ்ந்த சாதி சன்னியாசியானவர். அவருக்கு கணிசமான அடிமட்ட மக்களின் ஆதரவும் உண்டு. அத்துடன் இம்முறை அவருக்கு ஆதரவாக முன்னாள் பொதுச் செயலாளர் கே.என்.கோவிந்தாச்சாரியா குரல் கொடுத்துள்ளார்.

பாரதிய ஜனதா தனது தீவிர இந்து அடையாளத்தைக் கைவிட உத்தேசித்துவரும் இந்தக் காலத்தில் தீவிர இந்துக்கள் உமாபாரதியின் பின்னால் திரண்டால் அது பிஜேபிக்கு ஆபத்தாக முடியலாம்.

மேலும் அத்வானி அல்லது வாஜ்பாய் போன்றவர்களே பிஜேபி ஆளும் கட்சியாக இராதபோது கட்சித் தலைமையில் இருப்பது கட்சிக்கு நல்லது. இப்போது கட்சி எதிரணியில் இருப்பதால் இவ்விருவரில் ஒருவர் தான் பொருத்தமானவர். ஆனால் வாஜ்பாய் வயதால் தள்ளாடுகிறார். அத்வானி விலகுகிறார். யார் தலைவராகப் போகிறார் என்பதே இப்போதுள்ள கேள்வி. 5 பேர் இந்தப்பதவிக்கு அடிபடுகின்றனர். வெங்கையா நாயுடு, சுஷ்மா ஸ்வராஜ், பிரமோத்மஹாஜன், முரளி மனோகர்ஜோஷி, அருண் ஜேட்லி ஆகியோரை இந்த ஐவரும்.

இதற்கிடையில் தமிழகத்தில் சினிமா நடிகர்கள் சங்கம் குஷ்புவுக்கு ஆதரவு குரல் கொடுத்துள்ளது. கடந்த வாரங்களில் இப்பகுதியில் குஷ்பு மற்றும் சுஹாசினி மீதான பா.ம.க மற்றும் விடுதலைச்சிறுத்தைகளின் தாக்குதல் பெண் உரிமை மீதான தாக்குதலா அல்லது ஒட்டு மொத்த சினிமா உலகு மீதான தாக்குதலா என சந்தேகம் வெளியிட்டோம்.

**எஸ்.சுரேந்திரஜித்**

சினிமா உலகின் நடிகர்கள் பெண் நடிகைகள் தாக்கப்படுவதால் பாராமுகமாக இருக்கிறார்களோ என்றும் ஐயம் வெளியிட்டோம். சினிமா நடிகர்கள் சங்க ஆண் நடிகர்களான நிர்வாகிகள் இப்போது விழித்துக் கொண்டு விட்டார்களோ என்று தோன்றுகிறது. எனினும் இது பெண் உரிமையைக் காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல, சினிமா மீதான தாக்குதலை எதிர்கொள்ளும் முயற்சி எனக்கருதவும் இடமுண்டு.

ஏனெனில் இன்று பெண் நடிகைகளைத் தாக்குபவர்கள் இப்படியே போய் ஆண் நடிகர்களை அடக்கமுயல்வார்கள். ஏற்கனவே கமல், ரஜனி, விஜயகாந்த் என அடக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்களே பா.ம.கவினரும் விடுதலைச் சிறுத்தைகளும் என்பது குறிப்பிடத்தக்கது.


# VACANCIES

**எமது பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன**

## DRIVERS

குறைந்தது இரண்டு வருட அனுபவம். லொறி, வான், ஆட்டோ, மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான லைசன்ஸ் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

## DESPATCH CLERKS

G. C. E O/L பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான லைசன்ஸ் உடையவராகவும் இருத்தல் வேண்டும். வான்/ஆட்டோ ஓட்டுவதற்கான லைசன்ஸ் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## PRINTING TRAINEES

Machine Minders, Stripping Artists பயிலுநர்களாகச் சேர்வதற்கு G C E O/L பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், நல்ல திடகாத்திரமானவராகவும் இருத்தல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் இரவு நேர வேலை செய்யக்கூடியவராக இருத்தல் அவசியமாகும். தங்குமிட வசதி தேவைப்படின் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு 071 4114992/ 071 4145004 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


நற்சான்றிதழ்களுடன் 13-12-2005க்கு முன்னர் காலை 10 மணிக்கும் - மாலை 5.00 மணிக்குமிடையில் நேரில் வரவும் அல்லது 13.12.2005க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**Operations Manager**
**சுடர் ஒளி**
85, Jayantha Mallimarachchi Mawathe
(Mahawatte Road)
Grandpass


# ஒரு கோடி டொலர்களை விழுங்கியது பறவைக் காய்ச்சல்

1918 ஆம் ஆண்டு கட்டுப்பாடு எதுவுமின்றி பரவிய ஸ்பானியப்ளூ (Spanish Flu) காய்ச்சல் உலகம் முழுவதும் சுமார் 5 கோடி மக்களை பலிகொண்டது.

மூன்று வகையான வைரஸ்கள் தொற்று நோய் காய்ச்சலுக்கு காரணமாக இருப்பதாகப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. அவை ABC என அடையாளம் காணப்பட்டன. இந்த மூன்று பிரிவுகளிலும் BC வைரஸ்கள் Flu காய்ச்சலை மனிதர்கள் மத்தியிலும் A பிரிவு பறவைகள் மற்றும் மிருகங்கள் மத்தியிலும் உண்டாக்குவதாக கண்டுபிடிக்கப்பட்டது.




H5N, ரக பறவைக் காய்ச்சல் 1997 ஆம் ஆண்டு ஹொங்கொங்கில் வேகமாகப் பரவியது. இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பறவைகளின் எச்சங்கள் தான் பறவைக் காய்ச்சல் அங்குள்ள பறவைகளைப் பிடிப்பதற்கு காரணமாக அமைந்தன.

பருவ காலம் மாறும் போது ஆசியாவுக்கு ஏனைய கண்டங்களில் இருந்து இடம் பெயரும் பறவைகள் மூலமே இந்தத் தொற்று, கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு பரவியது மட்டுமின்றி கோழிப் பண்ணைத் தொழிலுக்கு பெரும் அச்சுறுத்தலையும் விடுத்துள்ளது. சுமார் 15 கோடி வளர்ப்புப் பறவைகள் இந்தக் காய்ச்சல் காரணமாக ஒன்றில் கொல்லப்பட்டுள்ளன அல்லது இறந்துள்ளன. இதனால் சுமார் 1 கோடி டொலர் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஒரு மனிதனிடமிருந்து இன்னொருவருக்கு பறவைக்காய்ச்சல் தொற்றியதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் பறவைகளைக் கொல்லும் போது அல்லது அவற்றின் இறக்கைகளைப் பிடுங்கும் போது அல்லது அவற்றை சமையலுக்குத் தயார் செய்யும் போது பறவைக் காய்ச்சல் வைரஸ் தொற்றிக் கொண்டதால் இதுவரை சுமார் நூறு பேர் வரையில் இறந்துள்ளனர். நன்கு சமைக்கப்பட்ட கோழி இறைச்சியில் இருந்து, முட்டையில் இருந்து இந்த வைரஸ் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை.

இதுவரை இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ பறவைக் காய்ச்சலால் வளர்ப்புப் பறவைகள் எதுவும் இறந்ததாக அறிவிக்கப்படவில்லை. பறவைக் காய்ச்சல் வைரஸ் தொற்றியுள்ள பறவைகள் இலங்கைக்குள் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான தடைகள் ஏற்படுத்தாவிடின் எமது நாட்டின் கோழி வளர்ப்புத் தொழில் நிச்சயமாகப் பாதிக்கப்படும்.

நவம்பர் மாத முற்பகுதியில் கிழக்குச் சீனாவில் பறவைக் காய்ச்சல் காரணமாக 6800 கோழிகள் இறந்ததை அடுத்து இந்த தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் உள்ளூர் விவசாயத் திணைக்களத்தினர் உடனடியாக இறங்கினர்.

பறவைக் காய்ச்சல் தொற்றிக்கொண்ட பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக அங்கு பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மூன்று கிலோமீட்டர் பிரதேசத்திலுள்ள வளர்ப்புப் பறவைகள் யாவும் கொன்றொழிக்கப்பட்டன.

மனிதர் மத்தியில் இந்த நோய் பரவாமல் இருப்பதற்கான எச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியது கட்டாயக் கடமை உலக நாடுகளுக்கு உண்டு.

# அரசின் பக்கம் பல்டி அடிக்க முயலும் முஸ்லிம் காங்கிரஸ்

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்ததும் முஸ்லிம் அரசியல் அரங்கில் இடம் பெற்ற முதல் நிகழ்வு, மாற்றத்திற்குள்ளான புதிய அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர்களின் அமைச்சுக்களும் மாற்றப்பட்டமையே. அடுத்ததாக இடம்பெறப்போவது முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பக்கம் அடிக்கப் போகும் பல்டி நிகழ்வு.

முஸ்லிம் காங்கிரஸ் அரசின் பக்கம் சாயப் போவதாகக் கதை அடிபட்டுக் கொண்டிருப்பது ஒரு வதந்தி அல்ல. அவ்வாறு நடக்கலாம் என முஸ்லிம் காங்கிரஸும் தெரிவித்துள்ளது. அதே வேளை ஜனாதிபதித் தேர்தல் முடிந்த மறுநாளே அமைச்சர் மங்கள சமரவீர முஸ்லிம் காங்கிரஸ் விரும்பினால் எம்முடன் இணையலாம் எனத் தெரிவித்தார்.

இந்த அழைப்புக்கு ஏற்ற பச்சை சமிக்ஞையை முஸ்லிம் காங்கிரஸ் இலேசாக காட்டியுள்ளதோடு அது தொடர்பாக முடிவெடுக்கும் நடவடிக்கையிலும் இறங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு அரசுக்குத் தேவை என்றால் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அந்த ஆதரவு வழங்கப்படும். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்க மு.கா முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் அரசுக்கு ஆதரவு வழங்க நாம் முன்வைக்கும் நிபந்தனைகள் என மு.கா தெரிவித்துள்ளது.

## ரஊப் ஹக்கீம்- ஆறுமுகன் இந்தியாவில் சந்திப்பு

மு.கா இந்த அறிவிப்பை விடுத்து விட்டு சும்மா இருப்பதாகத் தெரியவில்லை. இதைத் தீவிரப்படுத்த செயலில் இறங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்த வாரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் மு.காவின் தலைவர் ரஊப் ஹக்கீம் ஆகியோர் இந்தியாவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தேர்தல் முடிவை அடுத்து- தாம் சந்தித்த தோல்வியை அடுத்து மு.காவும் இ.தொ.காவும் திடீரென சந்தித்துப் பேசியிருப்பதானது அரசுடன் மு.கா இணையப் போவதை உறுதிப் படுத்தியுள்ளது.

ஆட்சிக்கு வரும் இரு பிரதான கட்சிகளுடன் மாறிமாறி இணைவதை வழக்கமான அரசியல் செயற்பாடாகக் கொண்டது இ.தொ.கா. கடந்த தேர்தலுக்கு முன் இ.தொ.கா அரசின் பக்கமே சாய்ந்திருந்தது. தேர்தல் நெருங்கியதும் அரசை விட்டு விலகி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது. இந்த ஆதரவு மீண்டும் ஆட்சியின் பக்கம் சாய்ந்தால் அது ஆச்சரியமல்ல. அவ்வாறு மாறுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

இ.தொ.கா மீண்டும் அரசின் பக்கம் மாறா விட்டால் இ.தொ.காவில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் பக்கம் சாயத் திட்டம் தீட்டி உள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இந்தத் திட்டம் பற்றி நன்கு அறிந்த இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் கட்சி உடைவதை விரும்பாது மீண்டும் அரசுடன் இணைவார் என்றே தெரிகிறது.

இந்த உண்மையை உணர்ந்த மு.காவின் தலைவர் ரஊப் ஹக்கீம் இ.தொ.கா மற்றும், மு.கா ஆகிய இரண்டு கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பலமான ஒரு நிபந்தனையின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவு வழங்கினால் அது இந்த இரண்டு கட்சிகளுக்கும் பிரயோசனமாய் அமையுமென நினைத்துள்ளார்.

அதன் அடிப்படையிலே ஆறுமுகனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் ஹக்கீம். இந்தப் பேச்சுவார்த்தையின் விபரங்கள் வெளியிடப்படாத போதிலும் இந்தப் பேச்சுவார்த்தையில் அரசுடன் இணைவது பற்றியே கலந்துரையாடினர் என நம்பப்படுகிறது.

## மு.கா அரசுடன் இணைவதன் நோக்கம்

கடந்த தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்காது ரணிலை ஆதரித்த மு.கா தேர்தல் முடிந்ததும் மஹிந்த தலைமையிலான அரசை ஆதரிக்க முன்வந்ததன் நோக்கம் என்ன? ஐ.தே.கவுடன் இருந்து இனிமேல் எதையும் சாதிக்க முடியாது என்ற எண்ணமா அல்லது அரசின் பக்கம் சாய்ந்துள்ள- மு.காவில் இருந்து பிரிந்து சென்ற- அமைச்சர்களுக்கு வேட்டு வைக்கும் திட்டமா என்ற கேள்வி இங்கே எழுகின்றது.

கடந்த தேர்தல் பிரசாரத்தின் போதெல்லாம் ரஊப் ஹக்கீம் மு.காவில் இருந்து பிரிந்து சென்றவர்களை துரோகிகள் என விமர்சித்து வந்தார். இப்போதும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

தேர்தலில் ரணில் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவார். அப்போது மு.காவில் இருந்து பிரிந்து சென்றவர்களின் கொட்டமும் அரசியல் பலமும் அடங்கி விடும். அந்த வழியில் இவர்களை பழிதீர்த்து விடலாம் என நினைத்தார் ரஊப் ஹக்கீம்.

ஆனால் தேர்தல் முடிவுகள் ஹக்கீமின் அந்தத் திட்டத்தை மாற்றி அமைத்துள்ளன. அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டும் கூட முன்பிருந்த எட்டு முஸ்லிம் அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளுக்கு ஆபத்து ஏற்படவில்லை.

சேஹு இஸ்ஸதீனுக்கு வழங்கப்பட்ட ஊடக பிரதி அமைச்சுப் பதவி மாத்திரமே சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. என்றாலும் ஏனைய ஏழு பேருக்கும் புதிதாக வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகள் திருப்தி அளித்துள்ளன.

இத்தனைக்கும் இந்த அமைச்சர்களின் எல்லாத் தொகுதிகளிலும் மஹிந்த ராஜபக்ஷ கடந்த தேர்தலில் தோற்றே போனார். தொகுதிகளில் தோற்றாலும் பரவாயில்லை மாவட்ட ரீதியில் சரி மஹிந்தவால் வெல்ல முடியவில்லை.

இந்த நிலைமை காரணமாக முஸ்லிம் அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு விடுமோ என்ற கேள்வியும் அப்போது எழுந்தது. ஆனால் பாதகமான மாற்றங்கள் ஏதும் பெரிதாக நிகழவில்லை.

இந்த முஸ்லிம் தலைவர்களின் எந்தத் தொகுதியிலும் மஹிந்த வெற்றி பெறாத போதிலும், மஹிந்த எந்தப் பழிவாங்கல் நடவடிக்கைளையும் மேற்கொள்ளவில்லை. இத் தொகுதிகளில் தோற்றும் அவர் மக்களை அரவணைக்கின்றார் என இப்பகுதி



ஆறுமுகன் தொண்டமான்



ரஊப் ஹக்கீம்

மக்கள் எண்ணும் விதத்தில் அமைச்சுக்களைக் குறைக்காமல் விட்டிருக்கலாம் மஹிந்த.

இதன் மூலம் தோற்றுப் போன இப்பகுதிகளில் எதிர்காலத்தில் தனது வாக்கு வங்கியை அதிகரிக்கும் மஹிந்தவின் திட்டமாக இது இருக்கலாம். இந்த அமைச்சர்களும் அதற்கேற்ப மக்களை அணுகலாம்.

இந்த அரசியல் நடவடிக்கைகளையும் தந்திரோபாயத்தையும் உணர்ந்தே அரசுடன் இணையும் முடிவை மு.கா எடுக்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது.

மு.காவிற்கு எதிரான இந்த முஸ்லிம் அமைச்சர்கள் கடந்த காலங்களில் தாம் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு நல்லவிதமாக மக்களை அணுகலாம். அந்த நிலையில் வளர்ந்து வரும் மு.கா மீண்டும் சரிவைக் காணலாம்.

இவ்வாறான காரணங்களைக் கருத்திற் கொண்டு அத்திட்டங்களை முறியடித்து மு.காவின் வளர்ச்சிப் பாதையில் ஏற்படும் தடையை அகற்றுவதே மு.கா அரசுடன் இணையப் போவதற்கான காரணங்கள் என நம்பப்படுகிறது.

## அரசுடன் மு.கா இணைவதை முஸ்லிம் அமைச்சர்கள் ஏற்பார்களா?

மேற்குறிப்பிட்ட காரணங்களை மையமாகக் கொண்டு மு.கா அரசுடன் இணைய முன் வந்தாலும் கூட அந்த இணைவு இடம் பெறுமா என்பது சந்தேகமே. மு.காவிலிருந்து பிரிந்து சென்று அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களே இந்த சந்தேகத்திற்குக் காரணம்.

மு.காவின் சக்தியைச் சிதைத்து தமது சக்தியை நிலை நாட்டுவதே இந்த முஸ்லிம் அமைச்சர்களின் நோக்கம். அதற்கான ஆயுதமாக இவர்கள் பயன்படுத்துவது இந்த அரசையும் இந்த அரசில் இவர்கள் பெற்றுக் கொண்ட அமைச்சுப் பதவிகளையுமே.

இவர்களின் பிரதான நோக்கம் மு.காவிலிருந்து பிரிந்தவர்களெல்லாம் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதல்ல. மாறாக மு.காவின் தலைவர் ரஊவ் ஹக்கீமை விரட்டி விட்டு கட்சியைக் கைப்பற்றுதல் அல்லது மு.காவைப் பலவீனப்படுத்துதல் என்பதே.

இதற்கான முனைப்புடனேயே இவர்கள் செயற்படுகின்றனர். இவர்கள் அடிக்கடி விடுகின்ற அறிக்கைகளும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றன.

எம்.ஐ.முபாறக்

மு.காவை சிதைக்க வேண்டும் என இவர்கள் நினைப்பது போலவே மு.காவும் இவர்களின் பலத்தை சிதைக்க வேண்டும் என நினைக்கிறது.

இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியாக இருக்கும் இவர்கள் அனைவரும் கருத்து முரண்பாடுகளுடனும் ஒருவரையொருவர் வீழ்த்தும் சதித்திட்டத்துடனும் அரசுடன் இணைந்து செற்படுவது எத்தளவு வெற்றியளிக்கும் எனத் தெரியாது.

என்றும் கீரியும் பாம்பும் போல் சண்டை பிடிக்கின்ற ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் இந்த அரசில் இணைந்து செயற்படும் போது ஏன் முஸ்லிம் தலைவர்கள் இணைந்து செயற்பட முடியாது என்ற கேள்வியை சிலர் எழுப்பலாம்.

ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் சண்டை பிடித்தாலும் கூட நிறைய விடயங்களில் அவர்களிடையே ஒற்றுமை உண்டு. இனவாதம், மதவாதம், இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட பல விடயங்களில் அவர்கள் ஒத்து நிற்கின்றனர்.

அவர்கள் ஒருவரையொருவர் தாக்கினாலும் கூட அதை அவர்களின் தனிப்பட்ட பிரச்சினை போல் காட்டிக் கொள்கின்றனர். அவர்களின் கொள்கை சரியோ பிழையோ சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவர்கள் ஒற்றுமைப்பட்டு விடுகின்றனர்.

ஆனால், முஸ்லிம் தலைவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மத்தியில் இவ்வாறான நிலை இல்லை. முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முதல் நாடு எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள் வரை இவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்குத் தனி அலகு வேண்டும் என சிலரும் வேண்டாம் என ஒரு சிலரும்- சமாதானப் பேச்சில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வேண்டும் எனச் சிலரும் வேண்டாம் எனச் சிலரும், வடக்கு கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் எனச் சிலரும் பிரிக்க வேண்டாம் எனச் சிலரும், சமஷ்டி முறை மூலம்தான் சமாதானத் தீர்வு எனச் சிலரும் இல்லை ஒற்றை ஆட்சியின் கீழ்தான் சமாதானத் தீர்வு எனச் சிலரும் கூறி வருகின்றனர்.

இவை மாத்திரமன்றி நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளிலும் முஸ்லிம் தலைவர்களின் நிலைப்பாடு இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்டே நிற்கின்றது.

இவர்களின் இந்த முரண்பட்ட நிலைப்பாடும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினரிடையிலான முரண்பட்ட நிலைப்பாடும் எப்படி ஒத்துப் போக முடியும்?

வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் தன்மை உடையது ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி போன்றோரின் நிலைப்பாடு. ஆனால், வேற்றுமையையே அடிப்படைத் தன்மையாகக் கொண்டது முஸ்லிம் தலைவர்களின் நிலைப்பாடு.

இவ்வாறான ஒரு கொள்கையுடன் கூடிய முஸ்லிம் தலைவர்கள் எவ்வாறு ஒரு கட்சியுடன் இணைந்து செயற்பட முடியும்? அதையும் மீறி அவர்களால் செயற்பட முடியும் என்றால் அது முஸ்லிம்களுக்குக் கிடைக்கும் பெரும் வெற்றியாகும்.

ஆனால், இவர்கள் அவ்வாறு ஒற்றுமைப் படப் போவதுமில்லை. முஸ்லிம்களுக்கு விடிவு வரப் போவதுமில்லை. இந்த நிலையில் மு.கா அரசுடன் இணைவது எந்தளவு சாத்தியப்படும் எனத் தெரியாது.

அதேவேளை, அரசுடன் இணைவதற்காக மு.கா எடுத்த தீர்மானமானது கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் போன்றதாகவே கருதப்படுகின்றது. அரசுடன் இணையுமாறு மு.காவின் தலைவர் ரஊவ் ஹக்கீமுக்கு அழுத்தம் கொடுத்து அவர் சேர முடியாது என மறுத்ததன் காரணமாகவே மு.காவின் மாற்றுக் குழுவினர் அரசின் பக்கம் சேர்ந்தனர்.

இப்போது ஹக்கீம் எடுத்திருக்கும் முடிவை அவர் அப்போதே எடுத்திருக்கலாமே, நாங்கள் கட்சியை விட்டு விலகியிருக்கமாட்டோமே எனக் கூறுகின்றனர் மு.கா மாற்றுக் குழுவினர். இவ்வாறான காரணங்களால் மு.கா இணைவதை முஸ்லிம் அமைச்சர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது சந்தேகமே

## மஹிந்தவின் நிலைப்பாடு

மு.கா அரசுடன் இணையப் போவதை அரசுடன் இணைந்துள்ள முஸ்லிம் தலைவர்கள் அனுமதிப்பார்களா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமிருக்க ஜனாதிபதி மஹிந்த மு.காவை ஏற்றுக் கொள்வாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மு.கா நிபந்தனைகளாக முன்வைக்கும் அதன் கோரிக்கையே இச் சந்தேகத்திற்குக் காரணம். மு.காவின் கோரிக்கை ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் ஒத்துப் போகக் கூடியது. மஹிந்தவின் சிந்தனையோ இந்த விஞ்ஞாபனத்திற்கு எதிர்மாறானது. இந்த நிலையில் மஹிந்த மு.காவின் நிபந்தனைக்கு உடன்படுவாரா?

வருவது வரட்டும் வெற்றியே எனக்கு முக்கியம் என நினைத்து மஹிந்த ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்ததுபோல் மு.காவுடனும் ஒப்பந்தம் செய்தாலும் வியப்பதற்கில்லை.

காரணம், அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற வேண்டும் என்ற முனைப்பில் உள்ளது அரசு. இதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் தம்பக்கம் வளைத்துப் போடும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது அது.

ஐ.தே.க கடந்த தேர்தலில் தோல்வியைச் சந்தித்ததைத் தொடர்ந்து ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசின் பக்கம் தாவ உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் ஐ.தே.க உறுப்பினர்களுடன் சேர்த்து மு.காவையும் வளைத்துப் போட்டால் அரசுக்கு அது உதவியாய் இருக்கும்.

இவ்வாறான ஒரு தேவைப்பாடு அரசுக்கு உள்ளதால் ஒருவேளை மு.காவின் கோரிக்கைகளை ஏற்று அதன் நிபந்தனைகளுக்கு அரசு ஒத்துப் போகக் கூடிய ஒரு நிலைமையும் உண்டு. இன்னும் ஓரிரு தினங்களில் எல்லாம் தெரிய வரும். அதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. பொறுத்திருந்து பார்ப்போம்.

# காமவெறியன்

**உண்மைக்கதை**

**வீ**ட்டில் தனியாய் இருந்த பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொலை செய்த காமக் கொடூரனைப் பிடித்திருக்கிறது, தமிழ் நாடு பொலீஸ். அப்பெண்ணின் ஏழு வயதுக் குழந்தை தான் கொலையாளியைப் பற்றிய துப்புக் கொடுத்தது.

தமிழ் நாடு நெல்லை நகரில் இருக்கும் சின்னக் கிராமம் தான் திப்பணம்பட்டி. இந்த ஊரைச் சேர்ந்தவர் பச்சைமால். இவரது மனைவி பெயர் தாமரைச் செல்வி. காதலித்து திருமணம் செய்த பச்சைமாலுக்கு மூன்று குழந்தைகள். பச்சைமால் தனியார் ஆழ்துளை கிணறு தோண்டும் வாகனச் சாரதியாய் இருக்கிறார்.

கடந்த 18-ஆம் திகதி மாலை, பச்சைமால் தூத்துக்குடிக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார். எனவே, அவரது மனைவி தாமரைச் செல்வியும் குழந்தைகளும் மட்டுமே வீட்டில் தனியாய் இருந்திருக்கிறார்கள். அவர் தூத்துக்குடிக்கு போய் விட்டு இரவு 9 மணிக்கு வீட்டுக்குத் திரும்பியிருக்கிறார். அப்போது அவரது வீட்டில் ஊரே கூடி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். மூன்று குழந்தைகளும் "அம்மா! அம்மா!" என்று அழுது கொண்டிருக்க, தாமரைச்செல்வியை மட்டும் காணோம்.

"இரவு ஏழு மணியில் இருந்தே தாமரைச்செல்வியைக் காணாது, குழந்தைகள் அழுது கொண்டிருக்கின்றன!" என்று ஊரார் தெரிவித்திருக்கிறார்கள். அவரும் வெளியில் சென்று மனைவியைத் தேடிப் பார்த்துவிட்டு, கடைசியாய் தனது மூத்த மகள் லதாவைப் பக்கத்தில் அழைத்துக் கேட்கவும்... அந்தக் குழந்தைசொன்ன பதில், அவரைத் தூக்கி வாரிப் போட்டது.

"உன்கூட வருவாரே முருகன் சித்தப்பா... அவர்தான் தூக்கிட்டுப் போனார்" என அந்தக் குழந்தை கூறியது.

இதைக் கேட்டவுடன் பச்சைமாலுக்கு அடிவயிற்றில் பந்து உருண்டது. அந்த முருகன் வேறுயாரும் அல்லன். அதே ஊரில் பக்கத்துத் தெருவில் வசிப்பவன். இருபத்தேழு வயதான அவனும், அந்த ஆழ்துளை கிணறு தோண்டும் வாகனத்தில் பச்சைமாலுடன் தான் பணிபுரிகிறான். ஆனால், பெண்கள் விடயத்தில் பலவீனமானவன். தினமும் இரவில் அவனுக்குப் பெண் வேண்டும். மைனர் பெண்ணாக இருந்தால் கூட, விடாத காமக் கொடூரன்.

பதைத்துப் போன பச்சைமாலும்



பிணமாகக் கிடக்கும் தாமரைச் செல்வி

அவனது உறவினரும் நேராய் முருகன் வசிக்கும் தோட்டத்திற்குச் சென்று தேடினார்கள். அரை மணி நேர தேடுதலுக்குப் பின்னர் தக்காளிச் செடிகளுக்கு இடையில் ஏதோ இடற, குனிந்து பார்த்திருக்கிறார்கள். அங்கே தனது மனைவி கிடப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார் பச்சைமால். உடலில் உயிர் இல்லை. இதைத் தொடர்ந்து உடனடியாய் பொலீஸ் நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர்.

சப்-இன்ஸ்பெக்டர் பாலமுருகன் அங்கு வந்தார். பின்பு நேராக முருகன் வீட்டிற்குச் சென்று, அங்கு நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தவனை தட்டி எழுப்பி, பொலீஸ் நிலையத்துக்கு கூட்டி வந்திருக்கிறார். அதன் பிறகே தாமரைச் செல்வியின் உடலை எடுத்துப் பிரேத பரிசோதனைக்காக தென்காசி மருத்துவமனைக்கு அனுப்பினார்.

"முருகன் ஒரு காமக் கொடூரன். தினமும் ஒரு பெண் வேண்டும் அவனுக்கு.." என்று முன்னுரை கொடுத்தவர், "பதினெட்டாம் திகதி அன்று, பச்சைமால், பேருந்து நிலையத்தில் பஸ் ஏறுவதை பார்த்த முருகன், அப்போதே திட்டம் தீட்டி இருக்கிறான். நேராக திப்பணம்பட்டிக்கு வந்து பச்சைமாலின் சகோதரர்களிடம், 'பச்சைமால் எங்கு போகிறார்? எப்போது வருவார்?' என்றெல்லாம் விசாரித்திருக்கிறான். இரவு லேட்டாகத்தான் அவர் வருவார் என்பதை உறுதிசெய்து கொண்ட முருகன், இரவு ஏழு மணிக்கு பச்சைமால் வீட்டுக்குப் போயிருக்கிறான். ஊரை விட்டு சற்று ஒதுக்குப் புறமாக இருக்கிறது அவர் வீடு. அங்கு தாமரைச் செல்வி வீட்டின் முன்னால் அமர்ந்து பீடி சுற்றிக் கொண்டிருந்திருக்கிறார். பக்கத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்திருக்கின்றன.

முருகனைப் பார்த்தவுடன் பயந்து போன தாமரைச்செல்வி, 'என்ன? இந்த நேரத்தில் வந்திருக்கிறாய்!' என்றிருக்கிறார். அதற்கு முருகன் 'சைக்கிளில் புல்லுக் கட்டை கொண்டு வந்தேன். ஆனால், அது தவறி கீழே விழுந்திட்டுது. தூக்க முடியவில்லை. நீங்கள் வந்து கொஞ்சம் தூக்கி வைத்தால் நல்லாய் இருக்கும்' என்று பவ்வியமாகச் சொல்லியிருக்கிறான். இதை உண்மை என்று நம்பிய தாமரைச்செல்வி, பீடித் தட்டை தூரவைத்துவிட்டு எழுந்திருக்கிறாள். அவ்வளவுதான் அவளது வாயைப் பொத்தி, அப்படியே அலாக்காய்த் தூக்கிக் கொண்டு, அரைக் கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தனது தோட்டத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறான் முருகன்.

முதலில் ஒரு கயிற்றால், அவளது கைகள் இரண்டையும் பின்னால் வைத்துக் கட்டியிருக்கிறான். பின்னர் சேலையை உரிந்து வாய்க்குள் திணித்திருக்கிறான். அதுதான் தொண்டைக் குழிவரை போய் தாமரைச் செல்விக்கு மூச்சுத் திணறி இருக்கிறது. அதோடு அவளைக் கொடூரமாய்க் கற்பழித்திருக்கிறான். அதிர்ச்சி தாங்காமல் தாமரைச் செல்வி இறந்து போயிருக்கிறாள். கற்பழித்த பின்னாடிதான் அவள் செத்துப் போன விஷயம் முருகனுக்குப் புரிந்திருக்கிறது.



அப்படியே உடலை இழுத்து விட்டு விட்டு, அங்கேயே மோட்டாரில் குளித்து விட்டு, வீட்டிற்கு வந்து விட்டான். சின்னக் குழந்தை கொடுத்த டிப்ஸினால்தான் கொலையாளி உடனடியாகச் சிக்கினான்" என்று முடித்தார் விசாரணை அதிகாரி.

மனைவியை பறிகொடுத்துவிட்டு பரிதாபமாய் உட்கார்ந்திருந்த பச்சைமாலிடம் பேசினோம்.

"செக்ஸ் விஷயத்திலே அவன் 'பலவீனமானவன்' என்று எனக்குத் தெரியும். அதுதான் அவனையெல்லாம் என் வீட்டிற்கு கூட்டி வரமாட்டேன். தனிஆளாய் அவன் இதை செய்திருக்க முடியாது. மேலும் இரண்டு பேருக்காவது இதில் சம்பந்தம் இருக்கும். சம்பவ இடத்துக்குப் பக்கத்திலே ஏராளமான இளநீர் கோம்பைகள் கிடந்தன. ஒற்றை ஆளாய் இருந்தால், என் மனைவி அவனைத் தட்டிவிட்டு ஓடி வந்திருப்பா. பொலீஸ் அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும்" என்று அழுதார்.

இதையே கிராம மக்கள் வேறு சிலரும் சொன்னார்கள்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 189

சொற்சிலம்பம் 189 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் டிசம்பர் 17ஆம் திகதி ஆகும் விடைகள் டிசம்பர் 26ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 03 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.187 க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 189

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | 5 |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | | ■ |
| ■ | | ■ | 13 | | | ■ | 14 |
| 15 | | 16 | | ■ | 17 | 18 | |
| 19 | | | ■ | 20 | ■ | 21 | |
| | ■ | 22 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 187

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 வா | 3 த | ம் | ■ | 4 அ | 5 மு | 6 து |
| 7 வே | ட் | டி | ■ | 8 க | ழ | க | ம் |
| 9 க | டு | ப் | 10 பு | ■ | 11 க | ம் | பி |
| ம் | ■ | 12 பு | த் | 13 த | ன் | ■ | க் |
| ■ | 14 ப | ■ | 15 தி | ண் | ■ | 16 ந | கை |
| 17 க | த் | 18 தி | ரி | ■ | 19 கு | டி | ■ |
| 20 மு | தி | ரை | ■ | 21 க | ள | ப் | 22 பு |
| 23 கு | னி | ■ | 24 க | ரு | ம் | பு | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.189

### இடமிருந்து வலம்

1. கட்டுப்பட்டில்லாத அடாவடித்தனம்
6. புலிகள் தரப்பில்
   - வீரமரணமடைந்த முதல் பெண் போராளி (இந்தியப் படையுடனான சமரில் )
7. ஆறாவது ஒருமை உருபு. சுட்டும் சொல்லும் கூட
8. செம்பு
10. நாற்காலி
11. நாள்
12. இரத்தம்
13. தீர்வு கிட்டும் / முடிவு வரும்
15. மக்களுக்கு சேவை செய்தல் இவருக்கு சேவை செய்த மாதிரி
17. தானிய அளவீட்டு அலகு
19. திடீரென என்பதைக் குறிக்கும்
21. சேர்
22. பாதுகாப்புத் தருகின்றவன்

### மேலிருந்து கீழ்

1. ஒரு பிரபந்தம். ஒரு பாட்டின் இறுதியை அடுத்த பாடலின் முதலடியாகக் கொள்வது
2. பெரும் பறை வகை
3. நேரத்துடன் தொடர்புடையது
4. மறைவில் நீட்டுவது
5. மாதரின் ஆட்சி இங்கு
7. விருந்தினர்
9. தேவையற்று தாமதப்படல்
10. இனிப்பானது. சீனி தயாரிக்க உதவுவது
12. சிஷ்யருக்குப் பெரியவர்
13. சாப்பாடு
14. கதையில் நாயகனின் எதிரி இவன்
15. சுவர்
16. ஓர் அரிசி ரகம்
18. எல்லா / அனைத்து
20. தோழன் / உடனிருப்பவன்

## சொற்சிலம்பம் போட்டி இல. 184

1. திருமதி.த.தனலட்சுமி,
   இல.90,
   ரெயில்வே கிழக்கு ஒழுங்கை,
   கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
2. இ.ஹொர்நேலியா ஷாமினி,
   இல:72,
   புனித செபஸ்தியார் கோயில் வீதி,
   புளியடிக்குடா, மட்டக்களப்பு.
3. இ.நளினி,
   335/1, 42ஆவது ஒழுங்கை
   கொழும்பு—06.

### பாராட்டுப் பெறுவோர்

1. கே.எம்.எம்.கலீல்,
   21, குளியாப்பிட்டிய வீதி,
   ஹொறம்பாவ.
2. ஏ.எச்.எம்.ரமழான்,
   160, காமினிபுர,
   ஹட்டன்.
3. செல்வி.துரைராசா கிரிஸ்ரபெல்,
   32(66) கோவில் வீதி,
   யாழ்ப்பாணம்.
4. திருமதி. கலாவதி குமாரசாமி,
   இல: 27/125, பரக்கும்பா பிளேஸ்,
   கொழும்பு—06.
5. ஹியூபட் செலர்,
   இல 07, சகாயபுரம்,
   மாமாங்கம்,
   மட்டக்களப்பு.
6. ஜே.ஏ.யூலியஸ்,
   ஆயுர்வேத திணைக்களம்,
   கப்பல் துறை,
   திருகோணமலை.
7. சாருகா புஸ்பராஜா,
   புனித சவேரியார் கோயில் வீதி,
   குழமங்கால்,
   மல்லாகம்.
8. ப.பத்மராதிகா,
   8/1, நம்ளின் மாவத்தை,
   குடாப்பாடு,
   நீர்கொழும்பு.
9. ஜே.நிரஞ்சலா,
   (அதிபர் இல்லம்)
   ப/ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி,
   ஹப்புத்தளை.
10. வி.சிவபாலிருதயா,
   முள்ளாவத்தை,
   அல்வாய்.

# எஸ்.ஜே.சூர்யாவை கைவிட்டார் விஜய்?



எஸ்.ஜே.சூர்யாவின் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த புலி படம் கைவிடப்பட்டுவிட்டது. தமிழ் சினிமாவின் லேட்டஸ்ட் நிலவரம் இதுதான். சூர்யா படத்தில் விஜய் நடிக்கிறார் என்ற விஷயம் கசியத்தொடங்கியதுமே, இவர் நடித்த அன்பே ஆருயிரே படத்தை அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருந்தனர் விநியோகஸ்தர்கள். என்.எஸ்.சி என்று சொல்லப்படும் ஏரியாவில் மட்டும் சுமார் 6கோடி ருபாவை விலைகொடுத்து வாங்கினார்கள் விநியோகஸ்தர்கள். காரணம் விஜய் படத்தையும் சேர்த்து வாங்கிவிடலாம் என்ற கணக்குத்தான். ஆனால் விநியோகஸ்தர்களின் கணக்குமட்டுமல்ல சூர்யாவின் கணக்கும் பிணக்காகிவிட்டதுதான் கொடுமை. சூர்யா எதைச் செய்தாலும் அதில் பிழை கண்டுபிடிக்கப்பட்டு கோர்ட்டுக்கு போவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள் விடுதலைச்சிறுத்தையினரும், பா.ம.க வினரும். இவர் நடிக்கும் கள்வனின் காதலி என்ற படத்துக்கு சென்னை 100 அடி சாலையில் வைக்கப்பட்டிருந்த கட் - அவுட் ஒன்று கண்களை உறுத்த அதிரடியாக கோர்ட்டுக்குப் போனது மேற்படி குறூப்! நீதிமன்றம் அந்தக் கட் அவுட்டை அகற்றும்படி உத்தரவு பிறப்பிக்க முன்னரே சூர்யா தானே முன்வந்து அதன் டிசைனை மாற்றனார். இப்படியே போற இடமெல்லாம் பிரச்சினையைச் சந்திக்கும் சூர்யாவின் படத்தில் நாம நடிச்சால் நம் கதி என்னவாகும் என்று நினைத்தாரோ என்னவோ, புலி படத்தையே கைவிட்டுவிட்டாராம் விஜய்.



"மழை வெள்ளத்தில் மாயமானது என் மேலாடை" என்று டி. ராஜேந்தரிடம் முறையிடுகிறார் மும்தாஜ்! வேறு ஒன்றும் இல்லை.




குறைந்த காற்றழுத்தத்தை நினைத்தாலே குலை நடுங்குகிறதாம் லைலாவுக்கு!

படம் 'கண்ட நாள் முதல்'

## சின்ன மின்னி

- 'ஆதி' படத்தில் வரும் சண்டைக்காட்சி ஒன்றிற்காக 40 அடி உயரத்தில் தலைகீழாகத் தொங்கியிருக்கிறார் விஜய். இந்தக்காட்சிக்கு டூப் போடலாம் என்று இயக்குநர் எவ்வளவு சொல்லியும் தானே ஒரியினலாக செய்கிறேன் என்று சவால்விட்டு, இப்படி வௌவாலாகத் தொங்கினாராம் விஜய்.
- 'பாசக்கிளிகள்' படத்தில் மாளவிகாவின் பாசக்கிளு கிளு குளியல் காட்சிகள் நிறைந்துள்ளனவாம். 'அசப்பில பார்த்தால் மாளவிகாவின் ஆடைகளே தெரியாது' என்று பெரிய அணு குண்டைத்தூக்கிப் போடுகிறார் பாசக்கிளி இயக்குநர் இராம நாராயணன்.
- பிதாமகன் படத்தைத் தயாரித்த வி.ஏ.துரை அந்தக்கால நடிகர் ராமராஜனுக்கு மறுவாழ்வு கொடுத்திருக்கிறார். இவர் தயாரிக்கும் தர்மன் படத்தில் இவர்தான் ஹீரோ. கையில் துப்பாக்கியுடன் அந்தரத்தில் இவர் பறப்பதுபோல போஸ்டர் அடித்து சென்னையைக் கலக்கியிருக்கிறார்கள்.
- 'டிஸ்யூம்' படத்துக்காக மழையில் நனைந்து நடித்த 'காதல்' சந்தியாவுக்கு ஜலதோஷமாம். அத்தோடு, இவர் வல்லவன் படத்தில் சிம்புவுடைய பிரண்டாக நடிக்கிறாராம். அதுமட்டுமன்றி, சேரனின் 'பொக்கிஷம்' படத்திலும், விஜய் நடித்து பெரு வெற்றி பெற்ற திருப்பாச்சி படம் தெலுங்கில் தயாராகிறது. அதில் மல்லிகா வேடத்திலும் நடிக்கிறார்.
- 'நம்பர் ஒன், நம்பர் டு நடிகர் என்று வரிசை எண் கொடுத்து அழைப்பதையோ, சூப்பர் ஸ்டார் பட்டம் கொடுப்பதையோ நான் விரும்பவில்லை. எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல் போன்று நானும் மக்கள் மனதில் இடம்பிடிக்கவேண்டும் என்பதே எனது விருப்பம் என்கிறார் விக்ரம்.



கிராமத்தில் இருந்து வரும் இளைஞன் நகரத்தில் சந்திக்
இல்லாது ஒழிக்கிறான் என்பதே கதை.

கேப்டன் சினி கிரியேஷன்ஸ் சார்பில் விஜயகாந்தின் மை
விஜயகாந்தின் அரசியல் பிரவேசத்தை மனதில்கொண்டு
நெடி படத்தில் அதிகம்.

இயக்குனர் ஜெப்பிர ஒய்க்கு இது முதல்படம் கோன் பட
தமிழில் அறிமுகமாகிறார்.

பொள்ளாச்சி, மும்பை, டெல்லி ஆகிய பகுதிகளில் படப்
ஒளிப்பதிவு செய்ய, ஸ்ரீகாந்தேவா இசை அமைக்கிறார். 400
நடனக்கலைஞர்கள் பங்குபெறும் பாடல் ஒன்று படத்தில் இ
நான்கு சண்டைக்காட்சிகள் படமாக்கப்படவுள்ளன.

விஜயகாந்துடன் ரமணாவில் கதாநாயகியாக நடித்த ஆஷி
விஜயகாந், ஆஷிமா, பிரதீப்ராவத்(அறிமுகம்), சாயாஜி ஷின்
எம்.என் நம்பியார், ஸ்ரீகாந், மன்சூர் அலிகான், கருணாஸ், அ

## ஆணை முன்னோட்டம்

சத்தியத்தைக் காப்பாற்றும் வழமையான ஆக்ஷன் ஹீரோ கதை.

வசன விஷுவல் என்டர்டெய்னர்ஸ் சார்பில் ஸ்ரீனிவாசன் தயாரிக்கிறார்.

கர்ணா, மணிகண்டா, படங்களுக்குப்பிறகு அர்ஜுனும், செல்வாவும் இணையும் மூன்றாவது படம்.

நமீதா நாயகி, கீர்த்தி சாவ்லா படத்தில் பவர் புல் கேரக்டர் ஒன்றில் நடிக்கிறார்.

மலையாள நடிகர் மனோஜ், கே.ஜெயன் முக்கிய வேடத்தில் நடிக்கின்றனர்.

டி.இமானின் இசையில் அர்ஜுன், நமீதா இடம்பெறும் காட்சியை ஷூட் செய்திருக்கிறார்கள்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சங்கவி கேரக்டர் ரோல் ஒன்றில் நடிக்கிறார்.

காசு கொடுத்துவரும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை 'ஆணை' நிறைவேற்றும், நம்பிக்கையுடன் சொல்கிறார் இயக்குநர் செல்வா.

அர்ஜுன், நமீதா, கீர்த்தி சாவ்லா, சங்கவி, வடிவேலு, மனோஜ், கே.ஜெகான் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

# சுதேசி



...ரத்தில் சந்திக்கும் உழல் மற்றும் குளறுபடிகளை எப்படி

...பகாந்தின் மைத்துனன் எல்.கே.சுதீஷ் தயாரிக்கிறார்.
...திலிகொண்டு உருவாகும் படம் என்பதால், அரசியல்

...ம் கேசவன் படத்தில் நடித்த பிரதீப் ராவத் இப்படம் மூலம்

...கிகளில் படப்பிடிப்பு நடைபெறுகிறது. ...ச்சர்ஸ்
...மக்கிறார். 4000 துணை நடிகர்களுடன் 100
...று படத்தில் இடம்பெறுகிறது. மும்பை, டெல்லியில்
...ளன.

...நடித்த ஆஷிமா இதில் ஜோடியாக நடிக்கிறார். நடிகர்கள்
...சாயாஜி ஷிண்டே, கிருஷ்ணா, மனோஜ், கே.ஜெயன்,
...கருணாஸ், அலெக்ஸ், தாமு, கலைராணி மற்றும் பலர்.

## விஜய், அசினுக்கு 'பிலிம் டுடே விருது'

டி.வி மற்றும் சினிமா நடிகர்களுக்கு விருது வழங்கிவரும் 'பிலிம் டுடே' பத்திரிகை இந்த ஆண்டும் அதற்கான விழாவை காமராஜர் அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சியில் விஜய், அசின் பங்குகொள்கிறார்கள் என்பதனை அறிந்த ரசிகர்கள் அரங்கை மொய்த்துவிட்டார்கள்.

நிகழ்வினை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார் ஷோபா சந்திரசேகர்.

கௌசல்யா, ஸ்ரீபிரியா, அபிஷேக் உள்ளிட்ட சின்னத்திரை நடிகர்களுக்கு விருது வழங்கி முடிந்ததும் வெள்ளித்திரை நடிகர்கள் அரங்கிற்கு அழைக்கப்பட்டார்கள்.

சிகரம்தொட்ட மனிதர்கள் என்னும் பெயரில் டி.எம்.சௌந்தரராஜன், மனோரம்மா ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தனது தந்தைக்கும் வழங்கப்பட்ட இவ்விருதை விஜய் தனது கைகளாலேயே வழங்கினார்.

இறுதியாக விஜய்க்கும் அசினுக்கும் விருது வழங்கப்பட்டபோது 'கரவொலி' காதைப்பிளந்தது. இறுதியில் 'பிலிம்டுடே' ஆசிரியர் பி.டி.செல்வக்குமார் நன்றி கூறினார்.



## ரகசியமாக முடிந்த 'சிவாஜி' பட பூஜை

வருடத்துக்கு ஒருமுறை மட்டுமே திறக்கும் ஸ்ரீரங்கத்தின் சொர்க்கவாசல் மாதிரி ரசிகர்களுக்காக எப்போதாவதுதான் திறக்கும் ஏ.வி.எம் ஸ்ருடியோவின் கதவுகள். நடிகர், நடிகைகள், டெக்னீசியன்கள், இயக்குநர்கள், பத்திரிகையாளர்கள் என அனைவருக்கும் திறந்தே கிடக்கும் ஏ.வி.எம் வாசலில் ரசிகர்கள் மட்டும் எப்படியாவது அடையாளம் காணப்பட்டுவிடுவார்கள். அவர்களை கப்பென்று பிடித்துக்கொள்ளும் செக்கியூரிட்டிகள், ரசிகர்களின் கனவு தேசத்துக்கே பூட்டுப்போட்டுவிட்ட சந்தோசத்தில் அவர்களை வெளியே தள்ளுவார்கள்.

ஆனால், ரஜினி படமோ , கமல் படமோ பூஜை போடுகின்ற அந்த அற்புதத்திருநாளில் அத்தனை ரசிகர்களுக்கும் கதவுகள் திறக்கும். சில வருடங்களுக்கு முன்பு இதுபோலத்தான் நிகழ்ந்தது பாபா படத்தின் பூஜையும்.

ஏதோ அரசியல் கட்சிகளின் மாநாடு போல திரும்புகிற இடமெல்லாம் ரசிகர்களின் தலைகள். அழகாக வளர்க்கப்பட்டிருந்த புல்வெளிகள் எல்லாம் ரசிகர்களின் கால்கள் பட்டு துவம்சமாகின. ஆனாலும், முதலிரவில் மெத்தை கசங்கின சுகம்தான் இருந்தது ஏ.வி.எம் ஸ்ருடியோவுக்கு.

ஆனால் இந்தமுறை அத்தனை களேபரங்களும் மிஸ்ஸிங்! கண்ணும் காதும் வைத்தால்போல நவம்பர் 28-ஆம் திகதி காலையில் தங்கள் நிறுவன தயாரிப்பான சிவாஜி படப்பூஜையை நடத்திமுடித்துவிட்டார் ஏ.வி.எம்.சரவணன். அஷ்ட நட்சத்திரங்களும் ஆசீர்வதிக்கும் நாளாம் இந்த 28-ஆம் திகதி. சர்வமுகூர்த்த தினமான இந்த நாளில் பூஜை போடுவதே சிறந்தது என ஜோதிடர்கள் சொல்ல, விறுவிறுவென்று வேலைகளை ஆரம்பித்தார் சரவணன்.

ஷங்கர், ரஜினி இருவரையும் கலந்தாலோசித்தவர், பிற நட்சத்திரங்களுக்கு நேரடியாகவே போன் போட்டார். 'காலையில் 9 மணிக்கு ஏ.வி.எம்முக்கு வந்திடுங்க' அவ்வளவுதான் மெஸேஜ். ஏன்? எதற்கு? கேட்காமலே வந்தார்கள் விவேக், ராஜுசுந்தரம் போன்றவர்கள். வந்த பிறகுதான் தெரிந்தது, விஷயம் எதுவென்று.

அத்தனை பேருக்கும் மகிழ்ச்சி, கவிப்பேரரசு வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மானின் தாயார் கரீமாபேகம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். டிசெம்பர் 15-ஆம் திகதி படப்பிடிப்பு தொடங்குகிறதாம்.

...டம்



...ஷன் ...ஜனும், ...ஜோஷ்டர் ...பறும ...ர் ...றார் ...லு,

## மல்லிகாவை மிஞ்சும் நிஷா

இந்திய சினிமாவில் மல்லிகா ஷெராவத் மட்டுமே செக்ஸ் வெடி குண்டாகத் திகழ்கிறார். சம்பளம் எவ்வளவு அதிகமாகத் தருகிறார்களோ, அந்த அளவுக்கு ஆடையைக் குறைக்கச் சம்மதிப்பது அவரது வழக்கம்.

இப்போது மல்லிகாவையும் மிஞ்சும் வகையில் வந்திருக்கிறார் நிஷா கோத்தாரி. ஊர்மிளா மடோன்கரை அறிமுகப்படுத்திய ராம்கோபால் வர்மாவின் கண்டுபிடிப்புத்தான் இவர். முதல் படமான ஜேம்சில் இவர் காட்டிய தாராள மயம் கண்டு பாலிவுட்டின் மற்ற கவர்ச்சிக் கன்னிகள் கலங்கிப் போய் இருக்கிறார்கள்.

மாடலிங் துறையில் இருந்து வந்திருக்கும் நிஷா, மல்லிகா ஷெராவத், பிபாஷா பாசு போன்ற நடிகைகள் அதிரடி ஸ்டேட்மெண்ட் விடுத்தது போல தானும் மேலாடையின்றி நடிக்கத் தயார் என்று அதிரடி ஸ்டேட்மெண்ட் விடுத்திருக்கிறார். இதனால் அவருக்கு மளமளவென பட வாய்ப்புகள் குவிந்திருக்கின்றன.

"படத்துக்கு அரைநிர்வாணக் காட்சி தேவை என்றால் நிச்சயம் அதில் நான் நடிப்பதில் தவறில்லைதானே?" என்று அப்பாவி போல கேட்கிறார், நிஷா. நல்ல கேள்விதான்.

நிஷா வேறு யாரும் அல்லர், தமிழில் 'ஜே.ஜே.' படத்தில் மாதவனுக்கு ஜோடியாக நடித்த அமோகாதான்.



# வீராப்புப் பேசிய இங்கிலாந்து தோல்வி!
# விஸ்வரூபம் எடுத்துவிட்டது பாகிஸ்தான்!!

பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என்ற ரீதியில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இந்தப் போட்டித் தொடரைப் பொறுத்த வரையில் வீராப்பு பேசிக்கொண்டு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் வந்த இங்கிலாந்து இறுதியில் படுதோல்வியடைந்து நாடுதிரும்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தொடர் ஆரம்பிக்கும் முன்னர் என்னவோ இங்கிலாந்து பேச்சில் ஆதிக்கம் செலுத்தினாலும், முழுப்போட்டித் தொடரிலுமே ஆதிக்கம் செலுத்தியது பாகிஸ்தான் அணியே. இது யாமறிந்த உண்மை.

உண்மையில் இங்கிலாந்து அணிக்கு என்னதான் நடந்தது? என்று ஆராய்ந்து பார்த்தால் இங்கிலாந்து அணியை சகல துறைகளிலும் கட்டிப் போட்டது பாகிஸ்தானின் ஆக்ரோஷம்.

முதல் ஆட்டத்தில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை கைப்பற்றிய பாகிஸ்தான் இங்கிலாந்து 2 ஆண்டுகள் பெற்ற தொடர் வெற்றியை தடுத்து நிறுத்தியது. அதற்கு முன்னர் இங்கிலாந்து அணி பங்களாதேஷ், மேற்கு இந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா போன்ற அணிகளை



டெஸ்ட் தொடர்களில் அதுவும் அவ்வணிகளின் சொந்த மண்ணிலேயே வீழ்த்தியுள்ளது.

இந்த தைரியத்திலேயே பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து தாறுமாறாக வார்த்தைகளை அள்ளி வீசியது. அத்துடன் அளவுக்கு அதிகமான சவால்களையும் எடுத்தியம்பியது. இதன் தாக்கம் விஸ்வருபம் எடுத்து தொடரை அப்படியே அள்ளியது பாகிஸ்தான். அத்துடன் அது 3ஆவது ஆட்டத்தை இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் கைப்பற்றியது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரையில் இந்த வெற்றியின் மூலம் உச்ச நிலைக்கு வந்து விட்ட அணியாகின்றது. ஆனால், இது மாத்திரம் போதாது. 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டித் தொடரை கைப்பற்ற வேண்டுமானால் இன்னும் முன்னேற்றத்தைக் காணவேண்டும்.

இது பாகிஸ்தான் அணிக்கு கடினமான விடயமல்ல. நிச்சயம் முடிந்த விடயம். ஏனெனில், பாகிஸ்தான் அணியில் உள்ள வீரர்களைப் போன்ற சிறந்தவர்கள் வேறெந்த அணியிலும் இல்லை எனலாம்.

அதாவது சகல அணிகளிலும் ஒருசில வீரர்களே அதுவும் குறிப்பிட்டு- விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே எடுத்துக் காட்டக் கூடிய வீரர்களாகத் திகழ்வார்கள். ஆனால், பாகிஸ்தான் அணியில் அப்படியில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் சிறந்தவர்களே.

ஆக அவர்களின் ஆதிக்கத்தில் பாகிஸ்தான் 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரைக் கைப்பற்றுவது அவ்வளவு கடினமல்ல.

இங்கிலாந்து வீரர்கள் தங்கள் வாய்ச் சவாலை நிறுத்தி தத்தமது திறமைகளை வெளிப்படுத்துவார்களானால் நிச்சயம் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் வெற்றி பெறலாம். இனியாவது திருந்துவார்களா அவர்கள்?

## விளையாட்டுச் செய்திகள்!

– கிரிஜா –

# யார் அழகு ராணி?




1994 ஆம் ஆண்டு அமெரிக்காவில் 'யு.எஸ்.ஜூனியர்' அமெரிக்க பகிரங்க டெனிஸ் போட்டித் தொடர் நடைபெற்றது. இதில் மார்ட்டினா ஹிங்கிஸ், அன்னக்கோர்னிகோவாவை 6-0, 6-0 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

போட்டி முடிவுற்றதும் மார்ட்டினா பக்கம் வந்த அன்னகோர்னிகோவா, "நீ போட்டியில் வேண்டுமானால் ஜெயித்திருக்கலாம் உன்னை விட நான்தான் உண்மையான அழகு ராணி. எனக்குத்தான் எப்போதும் மவுசு இருக்கும்"-என்று சொன்னாராம்.

6 வருடம் கழித்து 2000-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெற்றி பெற்று குவித்தார் மார்ட்டினா.

தற்போது கலை நிகழ்வொன்றில் இருவரும் சந்தித்துக் கொண்டனர். அப்போது அன்னகோர்னிகோவா, மார்ட்டினாவிடம் "நீதான் உண்மையான ராணி என்று ஒத்துக் கொள்கிறேன்" -என்பதை கூறியிருக்கிறார்.

# வெற்றியின் ரகசியம்



கிரிக்கெட்டுக்கு ஒரு பிரையன் லாராவைப் போல் 'கோல்ப்' விளையாட்டுக்கு டைகர் வூட்ஸ். உலகின் தலைசிறந்த கோல்ப் ஆட்டக்காரரான டைகர் வூட்ஸ் தன்னுடைய விளையாட்டில் தொடர் வெற்றிகளை குவித்திருக்கிறார். இந்த வெற்றிக்கெல்லாம் தன் பெற்றோர்களே முக்கிய காரணம் என்று கூறும் டைகர் வூட்ஸ் தன்னுடைய விளையாட்டின் சிறப்புக்கு மேலும் இரண்டு காரணங்கள் கூறுகிறார்.

ஒன்று அவர் போட்டிக்கு முன்பு தன் மனதை அதற்காக தயார்படுத்தும் விதம்.

மற்றொன்று அவரது ஆட்டத்தில் காணப்படும் தனிப் பாணி. இந்த இரண்டும் தன் பெற்றோர்களிடமிருந்தே தனக்கு வந்திருப்பதாகக் கூறுகிறார்.

வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் அதை வாங்கித்தந்த பெருமை எல்லாம் உங்களைச் சேரும்." -என்று தன் பெற்றோரைப் புகழ்கிறார், டைகர் வூட்ஸ். சமத்துப் பிள்ளை.......!

# நான்தான் லாராவை அதிக தடவை வீழ்த்தியவன்
# மார்தட்டுகிறார் ஆஸியின் வேகப் புயல் மெக்ராத்!



உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவரான அவுஸ்திரேலியாவின் வேகப்புயல் கிளென்மெக்ராத்திற்கு மற்ற பந்து வீச்சாளர்களை விட ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதாவது, எதிரணியின் நாயகர்களை மற்ற பந்துவீச்சாளர்களைவிட அதிக தடவை வீழ்த்தியவர் என்னும் சிறப்புதான் அது.

அதாவது, எதிரணியின் நாயகர்களை மற்ற பந்துவீச்சாளர்களை விட இவர்தான் அதிகமாக ஆட்டமிழக்கச் செய்துள்ளார். இந்த விடயம் குறித்துக் கேட்டபோது "அப்படியா? இப்படி ஒரு விடயம் இருப்பது எனக்கு உண்மையிலேயே தெரியாது." - என்று உற்சாகமாகக் கூறிய அவரிடம்-

களத்தில் இறங்கியவுடனேயே எதிரணியின் நாயகனைத்தான் குறி வைப்பீர்களா?- என்று மற்றொரு கேள்வி கேட்கப்பட்டது.

"அப்படியெல்லாம் கிடையாது. எதிரணியின் சிறந்த துடுப்பாட்டக் காரர்களை ஆட்டமிழக்கச் செய்வது ஒரு சவாலான விடயம். பெரும்பாலும் அணித்தலைவரே ஒரு அணியின் சிறந்த துடுப்பாட்டக்காரராக இருப்பார். எனவே, இதனால் அந்தச் சிறப்பு எனக்கு கிடைத்திருக்கலாம். தவிர அணித் தலைவரை ஆட்டமிழக்கச் செய்வதன் மூலம் எதிரணிக்கு அதிக நெருக்கடியைக் கொடுக்க முடியும். இதன் மூலம் மற்ற துடுப்பாட்டக் காரர்களை எளிதில் வெளியேற்றி விடலாம். ஆகவே அணித்தலைவரை ஆட்டமிழக்க வைப்பதில் தானாகவே ஆர்வம் மிகுந்திருக்கலாம்" என்று அடிக்கொண்டே போனார் மெக்ராத்.

# நான் ஸ்பெயினுக்கு செல்கிறேன்! ரொனால்டோ



பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ரொனால்டோ. இவர் தற்போது ரியால்மாட்ரிட் கழகத்துக்காக விளையாடி வருகின்றார். சிறந்த கால்பந்து வீரரான ரொனால்டோ மூன்று உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது 29 வயதான இவர் தனது ஓய்வு பற்றி வாய் திறக்காமல் இருந்து வந்தார். ஆனால், இவரது சமீபத்திய செயற்பாடு இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது போல் இருக்கின்றது.

ரொனால்டோ தற்போது ஸ்பெயின் நாட்டு குடியுரிமையைப் பெற விண்ணப்பித்துள்ளார். காரணம் அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிகளில் விளையாடிய கையோடு தனது ஓய்வு அறிவிப்பை வெளியிடுவார் என்று தெரிகின்றது. இதன் பின் இவர் ஸ்பெயின் நாட்டில் குடியேறலாம்.

# கிழக்கில் சிதைவுறும் தமிழ் - முஸ்லிம் உறவு

**ஓர் அசம்பாவிதம் இடம்பெற்று முடிந்து அதன் பதற்ற நிலை தணிவதற்குள் இன்னொரு அசம்பாவிதம் நடந்து விடுகிறது. இதனால் பதற்ற நிலை இடைவிடாது தொடர்வது மட்டுமல்லாமல் இரு இனங்களுக்கும் இடையிலான பகைமை உணர்வும் விசாலமடைகின்றது.**

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தினத்திலிருந்து இன்றுவரை கிழக்கில் இனமுறுகல் நிலை தோன்றிவிட்டது. கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து ஒற்றுமையாக, நிம்மதியாக வாழத் தொடங்கிய தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மீண்டும் சிதைந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது.

அவ்வப்போது சில சில அசம்பாவிதங்கள் இடம் பெற்றாலும் ஒரு சில நாட்களிலேயே அவை மறக்கடிக்கப்பட்டு மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பி விடுவது வழமை.

ஆனால், இப்போது எழுந்துள்ள பிரச்சினைகளும் அப்படியானவைதான். இருந்தாலும், அவை அணைவதும் எரிவதுமாய் உள்ளன. ஓர் அசம்பாவிதம் இடம்பெற்று முடிந்து அதன் பதற்ற நிலை தணிவதற்குள் இன்னொரு அசம்பாவிதம் நடந்து விடுகிறது. இதனால் பதற்ற நிலை இடைவிடாது தொடர்வது மட்டுமல்லாமல் இரு இனங்களுக்குமிடையிலான பகைமை உணர்வும் விசாலமடைகின்றது. அவ்வாறான தொரு நிலைதான் இப்போது தோன்றியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தினமாகிய 17ஆம் திகதி கல்முனையில் இடம் பெற்ற கொலைச்சம்பவம் முதல் இப்போது மூதூர்- தோப்பூரில் இடம்பெற்றுள்ள கொலைச் சம்பவங்கள் வரை மேற்குறிப்பிட்ட நிலைமை தொடர்ந்து கொண்டே போகிறது.

17ஆம் திகதி தேர்தல் தினமன்று கல்முனையில் வைத்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த மௌலவி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவ்வப்போது நிகழும் அசம்பாவித சம்பவங்களில் இதுவும் ஒன்று என்றே அப்போது கருதப்பட்டது. இத்தோடு முடிந்துவிடும் எனவும் கருதப்பட்டது. அவ்வாறு நினைத்ததைப் பொய்ப்பிற்கும் வகையில் தொடர்ந்தும் அசம்பாவிதங்கள் இடம்பெறத் தொடங்கின.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தை அடுத்து மறுநாளே அடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அதுதான் அக்கரைப்பற்று பள்ளிவாசலில் சுபஹ் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோர் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்.

இத் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டு 20 பேர் வரை காயமடைந்தனர். இதனையடுத்து இனமுறுகலும் பதற்றமும் தொடரத் தொடங்கின.

அதேசமயம் ஏறாவூரிலும் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு மாதத்திற்கு முன் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்ட இவர்கள் அக்கரைப்பற்றுச் சம்பவம் இடம்பெற்ற மறுநாள் சுட்டுக் கொல்லப்பட்டு சடலங்கள் வாழைச்சேனையில் போடப்பட்டதை அடுத்து ஏறாவூரில் பதற்றம் நிலவியது.

அக்கரைப்பற்று சம்பவத்தால் அம்பாறைப் பிரதேசத்தில் மாத்திரம் நிலவிய பதற்ற நிலை ஏறாவூர் கொலைச் சம்பவத்தை அடுத்து விரிவடைந்து அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களையும் பிடித்துக் கொண்டது.

ஏறாவூரில் நிலவிய பதற்ற நிலை தணிந்து போனாலும் அக்கரைப்பற்றில் பதற்றம் நீடிக்கவே செய்தது. முஸ்லிம் பகுதிகளில் பல நாட்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

முஸ்லிம் பகுதிக்குள் தமிழர்கள் செல்வதும் தமிழ் பகுதிக்குள் முஸ்லிம்கள் செல்வதும் தடைப்பட்டுப் போயிருந்தது. எல்லைப் புறங்களில் வசிக்கும் தமிழ்- முஸ்லிம் மக்கள் இரவானதும் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயரத் தொடங்கினர்.

அரச, தனியார் நிறுவனங்கள் செயலிழந்தன. அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் முடங்கின. வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுகள் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏற்பட்டன.

பல நாட்கள் நீடித்த இவ்வாறான பதற்ற நிலையை அடுத்து தமிழ்- முஸ்லிம் மக்களிடையே சமரசம் மேற்கொள்ளப்பட்டு கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை நிலைமை வழமைக்குக் கொண்டு வரப்பட்டது.

இப் பிரச்சினை அணைந்து வரும் நிலையில் அடுத்த பிரச்சினை தோற்றம் பெற்று விட்டது. காத்தான்குடியின் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் மூதூரில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஹாஜா முகைதீன் மீதான சூட்டுச் சம்பவம் ஆகியவற்றுடன் அணைந்த பிரச்சினை மீண்டும் எரியத் தொடங்கிவிட்டது.

நற்பிட்டிமுனையைச் சொந்த இடமாகக் கொண்ட காத்தான்குடி பிரதேசச் செயலாளர் பளீல் வெள்ளிக்கிழமை அவரது அலுவலகத்தில் வைத்து இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற முடியாத நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மறுநாள் சனிக்கிழமை மூதூர் ஐ.தே.க. அமைப்பாளர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவத்தை அடுத்து பள்ளிக்குடியிருப்பில் இருந்து வந்த இரு தமிழர்கள் இனந் தெரியாதோர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். மறுநாள் மூன்று முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து திருகோணமலையில் மூதூர், தோப்பூர் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பதற்றம் நிலவத் தொடங்கியது.

இந்த நிலையில் படுகாயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த காத்தான்குடி பிரதேச செயலாளர் பளீல் மரணமடைந்தார். அதனையடுத்து அம்பாறை மாவட்டத்திலும் தணிந்திருந்த பதற்றமும் அச்சநிலையும் மீண்டும் எழத் தொடங்கின.

அக்கரைப்பற்றுச் சம்பவத்தைக் கண்டித்து அம்பாறையில் பல நாட்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வழமைக்குத் திரும்பிய மறுகணமே மீண்டும் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டிய நிலைக்கு அம்பாறை மாவட்டம் தள்ளப்பட்டது. மூன்று நாட்கள் ஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது.

பளீலின் மரணத்தையும் மூதூர் சம்பவத்தையும் கண்டித்தே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பழைய பதற்ற நிலை மீண்டும் தோன்றியுள்ளது.

இதற்கிடையில் மூதூரில் இரு இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்தி வழமை நிலையைக் கொண்டு வருவதற்காக மூதூர் பள்ளிவாசல்கள் சம்மேளனமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஞாயிறு மாலை ஐந்து மணிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பில் இரண்டு இனங்களுக்குமிடையிலான முறுகல் நிலையைத் தணிப்பதற்காக இணக்கம் காணப்பட்டது. இருந்தும் பதற்றம் நிலவுகிறது. தமிழ்- முஸ்லிம் மக்களாகிய நாம் உடன் பிறவாச் சகோதரர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு எமது ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும். இல்லையேல் எமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை கிடைக்காமல் செய்வதற்கு பேரினவாதிகள் எமது பிளவை ஒரு சாதகமாகப் பயன்படுத்துவார்கள். தமிழ்- முஸ்லிம் மக்களே உணர்ந்து செயற்படுங்கள்.

எம்.ஐ.முபாறக்

---

## கண்மூடப்...

(4ம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதன் மூலம் இதே கேள்வியைத்தான் நாசுக்காக எழுப்பி இருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரான சுகாதார அமைச்சரான நிமல் சிறிபாலடிசில்வாவும் பிரபாகரனின் 'கால அவகாசம்'பற்றி அறிந்து நாம் பதற்றமடையவில்லை என்றே கூறியிருக்கிறார்.

தற்போது சமர்ப்பிக்கப்பட உள்ள வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு துறைக்குப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. உலக நாடுகள் மத்தியில் சமாதானம், பேச்சுவார்த்தை, என்று பிரசாரம் செய்யப்படுகின்ற போதும் திரைமறைவில் யுத்தம் ஒன்றுக்கு அரசாங்கம் அவசரமாக தயாராகி வருவதையே கள நிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

எந்த நிலைமையும் சமாளிக்கும் வகையில் ஏராளமான அரசாங்கத்துடன் ஆயுதக் கொள்வனவுக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது மட்டுமன்றி ஒன்றன் பின் ஒன்றாக இராணுவ உயர் பதவிகள் கடும் போக்காளர்களுக்கே ஜனாதிபதியினால் வழங்கப்பட்டு வருகின்றன.

### சமஷ்டித் தீர்வு

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையின் போது குறிப்பிட்ட இன்னொரு விடயத்தையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

''சிங்கள இனவாத உயர் குழாம், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நடுநிலையான தீர்வை முன்வைக்கும் என எதிர்பார்க்க முடியாது'' என்று கூறியிருந்தார்.

தென்தேசத்தின் தற்போதைய இராணுவ நகர்வுகளைப் பார்க்கும் போது தலைவரது இந்தக் கூற்று நூற்றுக்கு நூறு வீதம் சரியானதே என்ற சிந்தனை தவறாக இருக்க முடியாது.

சுயநிர்ணய உரிமை, தனித்தமிழ் தேசம் என்ற கோரிக்கைகளில் உறுதியாக நின்ற விடுதலைப் புலிகள், 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் சமஷ்டி அரசமைப்பின் கீழ் தம்மைத் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமைக்கு இணங்கி இருந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளாக இது பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க சிங்களப் பேரின வாதத்துக்கு அவர்கள் கால அவகாசத்தையும் வழங்கி இருந்தனர்.

ஆனால் தென்னிலங்கை அந்தக்கால அவகாசத்தைப் பயன்படுத்தி தனது மஹாவம்ச மனோநிலையை மாற்றுவதற்கு தவறிவிட்டது. அவர்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்குமானால், தமிழ்மக்கள் அரசாட்சியில் பங்கெடுக்க முடியாத சிங்கள ஒற்றையாட்சி முறையை மாற்றி அமைத்து சமஷ்டி ஆட்சியைத் தோற்றுவிக்க அரசமைப்பைத் திருத்துவதற்கான கருத்தொற்றுமை தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த இந்த மூன்றாண்டு காலத்தில், தென்னிலங்கையின் ''அப்பே ஆண்டுவ'' (எங்கள் அரசாங்கம்) சிந்தனை, இன ஒற்றுமையை நோக்கி திசைதிருப்பப் பட்டிருக்குமானால் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றை தமிழ்மக்கள் பெற்று தம்மைத் தாமே ஆட்சி செய்யக்கூடிய நிலையை எட்டி இருப்பர்.

ஆனால், இந்த அமைதிக் காலம் அடக்கு முறையை மேலும் பலப்படுத்தவும், 'அப்பே ஆண்டுவ' சிந்தனைக்கு உரமூட்டவுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே தலைவரின் கால அவகாசம் காட்டில் எறித்த நிலவாகத் தான் இருக்கப்போகிறது.


பொறுமை இழந்து நம்பிக்கை இழந்து விரக்தியின் விளிம்பை அடைந்துள்ள எமது மக்கள் விடுத்த

❖ கால அவகாசத்தை

❖ எமது தேசியப் பிரச்சினையைத் தீர்க்குமாறு கேட்ட அவசர வேண்டுகோளை

நிராகரித்து காலத்தை இழுத்தடிக்க புதிய ஜனாதிபதி முற்படுவாரானால் தமது சுதந்திரப் போராட்டத்தை அடுத்த ஆண்டு அவர்கள் தீவிரப்படுத்துவர் என்ற தலைவரின் அறிவிப்பு நிஜமாகிவிடும்.



# கலக்கல்


வதனி

## கணினி கலக்கல்

கடவுளின் படைப்பு அற்புதமானது. ஏனென்றால் மனிதனை படைத்தது மட்டுமல்ல.. அவனை அழகாகவும் படைத்திருக்கிறான். முகத்திலே வாய் - கண் என்பவற்றை அந்தந்த இடத்திலே வைத்ததால் அழகாக இருக்கிறது. மாறாக இப்படி வாய் இருக்க வேண்டிய இடத்தில் கண்ணும் கண் இருக்க வேண்டிய இடத்தில் வாயும் இருந்தால் எப்படி அசிங்கமாக இருந்திருக்கும்.



## ஓவியச் சிரிப்பு





நாயையும் - புறாவையும் Cross பண்ணினால் இப்படியான ஒரு உயிரினம் தான் வரும் போலும். அது சரி இதனை எப்படி அழைப்பது? விலங்கென்றா பறவை என்றா?

## உலகம் போற போக்கு

ஜேர்மனியில் உள்ள ஒருவர் கிளி ஒன்றின் அதிகப்பிரசங்கித் தனத்தால்.. அவரது மனைவியால் வீட்டை விட்டு துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்...

ஜேர்மனியில் ஒப்பிரிக் என்ற இடத்தைச் சேர்ந்தவர் 50 வயதான பெட்ரா என்ற பெண். அவரது கணவரின் பெயர் பிராங். இவர்கள் ஒரு கிளியை வளர்த்து வந்தனர். அதற்கு ஹியூகோ என்று பெயர். அந்த கிளிக்கு 12 வயது. இந்த கிளிதான் பிராங் - பெட்ரா குடும்பத்தை கும்மியடித்து கலைத்து விட்டது. அதாவது பிராங்கிற்கு ஒரு சின்னவீடு. உதா என்று பெயர். இந்த சின்னவீட்டு சிலுக்கு பிராங்குடன் சில்மிஷன் பண்ணுவதற்காக அடிக்கடி அவரின் வீட்டுக்கு வந்து போவாள்; பெரிய வீடான பெட்ரா இல்லாத நேரமாகப் பார்த்து.

இவ்வாறாக ஒரு நாளின் உதா வந்து விட்டுச் சென்ற பின் - பெட்ரா வீட்டுக்கு வந்தார். அப்போ கிளி "உதா ... உதா" என்று சொல்லிக் கொண்டிருந்தது. இதில் சந்தேகப்பட்ட பெட்ரா... உடனடியாக விசாரித்ததால் பிராங்கின் குட்டை அது உடைத்து விட்டது. கோபம் கொண்ட பெட்ரா, உடனடியாக கணவனை வீட்டை விட்டு துரத்திவிட்டாள்.

இதிலிருந்து கிடைக்கும் நீதி... கிளி வைத்திருப்பவர்கள் சின்னவீடு வைத்திருக்காதீர்கள். வைத்திருந்தால் கிளி இருக்கும் வீட்டுக்கு கூட்டி வராதீர்கள். கூட்டிவந்தாலும் கிளி இருக்கும் பக்கம் போய் விடாதீர்கள். போனாலும் சி. வீட்டின் பெயரைச் சொல்லி கூப்பிட்டுவிடாதீர்கள்.

## ஜோக்



கணவன் : அன்பே நமது ஆறு குழந்தைகளில் ஒருவன் மட்டும் வித்தியாசமாக வேறு தோற்றத்தில் இருக்கிறானே..! உண்மையைச் சொல் அதற்குக் காரணம் வேறு யாருமா?

மனைவி : (அச்சத்துடன்) ஆம்...

கணவன் : கோபத்துடன் யார் அவன்.

மனைவி : அது வேறுயாருமில்லை... நீங்க தான்.

# பித்தன் பதில்கள்



**ஸ்டெலா- பூநகரி**

கே: அன்பின் பித்தா அண்ணா! உங்களை யாரும் கிண்டலடித்தால் என்ன செய்வீர்கள்?

ப: சிரித்துவிட்டு- நன்றி சொல்லி விட்டு போய்விடுவேன். போய் ஒதுங்கி நின்று சிந்தித்துப் பார்ப்பேன். அவர் கிண்டலடித்தது உண்மையாகவே என்னிடம் உள்ள குறைபாட்டை தானா... அல்லது சும்மாவா என்று... குறைபாடு இருந்தால் திருத்திக் கொள்வேன். ஆனால் நிச்சயம் கோபப்படமாட்டேன். ஏனென்றால் கிண்டல்கள்- விமர்சனங்கள் எல்லாம் என்னை திருத்துவதற்கே என்று நம்புபவன் நான்.

**சி.கருணா, வட்டுக்கோட்டை**

கே: 'வாழ்க்கை என்றால் மேடு பள்ளம் தாண்டித்தான் ஆகனும்' என்கிறார்கள். இது திருமணமானவர்களுக்கா, திருமணமாகாதவர்களுக்கா அல்லது இருசாரார்களுக்குமா பொருந்தும்?

ப: ஆஹா... நயினா... நீங்கள் எதை சொல்றீங்கள் என்டு விளங்குது.. நீங்கள் நினைப்பதென்றால் திருமணமானவர்களுக்கு மட்டும்தான்... மற்றும்படி இன்ப துன்பங்களை பற்றி என்றால் இருசாருக்கும்.



**எஸ்.மோகனதாஸ், முறிகண்டி**

கே: பித்தா! எனக்கு சில சந்தேகங்கள். தீர்த்து வைப்பீரா?

1) மனிதர்களையும் 5ரூபா முத்திரை ஒட்டி தபாலில் அனுப்ப முடியுமா?

2) சந்திர மண்டலத்துக்கு சைக்கிளில் போக முடியுமா?

ப: மோகனதாஸ் எனக்கு ஒரு சந்தேகம் அதனை முதலில் தீர்த்து வைப்பீரா? அதாவது நீர் மந்திகையிலே காட்டி மருந்து எடுக்கிறீரா அல்லது அம்புலன்ஸில் ஏற்றி அங்கொடைக்கு கொண்டு வர வேண்டுமா?

**அ.யாழினி, வன்னேரிக்குளம்**

கே: அன்பின் பித்தா! நடந்து முடிந்த தேர்தலைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: சமாதானம் என்று சாக்குப் போக்குச் சொல்லி சண்டைக்கும் விடாமல்- சமாதானமும் செய்யாமல் காலத்தை கடத்தும் போர்வழிகள் எமக்கு வேண்டாம். அதுவோ... இதுவோ... எதுவென்றாலும் நடந்து நிரந்தரமான முடிவு ஒன்று வேண்டும் என்பதை தமிழ் மக்கள் உணர்த்தியிருக்கும் தேர்தல்.

**நாக மகேந்திரன், கோப்பாய்**

கே: நாகரிகம் என்ற பெயரில் தற்போதைய இளசுகள் அநாகரிகமாக உடை அணிவது பற்றி... உமது அபிப்பிராயம் என்ன பித்தா?

ப: அநாகரிகமாக உடை அணிவதுதான் இன்றைய நாகரிகம் என்று நினைக்கிறார்கள் இன்றைய இளசுகள். வறுமையால் வாடுவோர் புதிய சட்டை வாங்க வழியில்லாமல் பழைய சட்டையை கிழியக் கிழிய போடுகிறார்கள். ஆனால் இளசுகள் புதிய சட்டையை வாங்கி கிழித்துவிட்டுப் போடுகிறார்கள்.

ஏழைகள் பழைய சட்டை அளவில்லாமல் போனாலும் வேறு சட்டை வாங்க முடியாத நிலையில் இறுக்க இறுக்கப் போடுகிறார்கள். ஆனால் இளசுகள் புதிய சட்டையையே இறுக்க இறுக்கப் போடுகிறார்கள். அது நன்மைக்கா... தீமைக்கா... விவாதம் வைக்க வேண்டிய விடயம்.

**எஸ்.தீர்த்தகி, வ/புனி/இ/கல்லூரி**

கே: டியர் பித்தா! சாஜஹான் தனது மனைவி இறந்ததன் நினைவாக தாஜ்மஹால் கட்டினான். நீர் உமது மனைவி இறந்தால் அவரின் நினைவாக என்ன கட்டுவீர்?



ப: எனது மனைவிக்கு ஒரு தங்கை இருக்கிறாள்.

**க.மதிவதனன், மல்லாவி**

கே: நடிகை குஷ்புவுக்கு எதிராக விடுதலை சிறுத்தைகள் அணியின் போராட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: ஏற்கனவே நடிகர் பிரபுவுடன் தப்பு தண்டா பண்ணி- அதனால் தனது வயிற்றிலே வளர்ந்த குழந்தையை அழித்து விட்டு- பின்னர் சுந்தர்.சியை திருமணம் செய்து- அவர் மூலம் 2 குழந்தைகளை பெற்றுக் கொண்டவர் குஷ்பு. இது வட இந்தியப் பெண்களுக்கு சாதாரணமான விடயம். ஆனால் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாசாரத்தில் வாழும் தமிழ் பெண்களும் தன்னைப் போல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும்- ஆலோசனை கூறுவதும் தப்புத் தானே...! எதிர்க்க வேண்டிய விடயம்தானே...!!

**பொ.கந்தையா, குப்பிளான்.**

கே: ஐயா பித்து! சிவபெருமான்- சுந்தரமூர்த்தி நாயனாருக்கு 'பித்தா' என்று பாடுமாறும், சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' என தமிழ் மொழியில் பாடுமாறும் அடியெடுத்துக் கொடுத்ததாக கூறிக் கொண்டு- இன்றும் எமது கோயில்களில் செத்து விட்ட சமஸ்கிருத மொழியில் பூஜை செய்வது ஏன்?

ப: இடையிலே மந்திரம் மறந்து விட்டால் ஏதோ அதை சொல்லி சமாளித்து விடலாம் அல்லவா... அதற்காக இருக்கலாம்.

**அ.யோகேஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழகம்.**

கே: டியர் பித்து மாமா

பல்கலைக்கழகத்தில் படிப்பவர்களை நம்பக் கூடாது என்று எனது நண்பி கூறுகிறாள். ஏனென்றால் அவர்கள் அங்கே ஒருவரையும், ஊரிலே ஒருவரையும் காதலித்து விட்டு பின்னர் வீட்டிலேபேசிவைத்திருப்பவர்களையே திருமணம் செய்வார்களாம். எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பார்களா?

ப: ஏன் அவர்கள் மட்டும்தான் அப்படியா? பல்கலைக்கழகத்தில் படிக்காதவர்கள் மட்டும் என்ன வாழுதாம். பல்கலைக்கழகத்திலே படிக்கும் ஒருவருக்கு பின்னால் அலைந்து கொண்டு, ஊருக்குள்ளே இருக்கும் ஒருவருக்கு லவ்வு விட்டுக் கொண்டு- வீட்டிலே கலியாணம் பேசினால் அதற்கும் தலையை ஆட்டும் எத்தனை பேர் இருக்கிறார்கள். எல்லா இடங்களிலேயும் எல்லாரும் இருப்பார்கள். அங்கே இருப்பவர்கள் எல்லாம் ஊத்தைவாளிகளுமில்லை- இங்கே இருப்பவர்கள் எல்லாம் உத்தமர்களும் இல்லை. அங்கே உத்தமர்களும் இங்கே ஊத்தைவாளிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



**எஸ்.புனுஷா, பொகவந்தலாவ**

கே: டியர் பித்து அங்கிள் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் எமக்கு நன்மை தருமா?

ப: பூசாரிகள் இடம் கொடுத்தால் சாமி வரம் கொடுக்கும். ஆனால் பூசாரிகள் விடுவார்களோ..


**எஸ்.சுரேகா, பரந்தன்**

கே: டியர் பித்து மாமா! உங்களது ஜோக்கை கேட்க ஆசையாக இருக்கிறது. எனக்காக ஒரு ஜோக் சொல்லுங்களேன்?

ப: மனைவி இறந்து விட்டாள். கணவன் அழுது புலம்பினான். மனைவியின் உடலை தகனம் செய்வதற்காக எடுத்துச் சென்றார்கள். கணவனும் அழுது புலம்பியபடி பின்னே சென்றான். மயானத்துக்கு கொண்டு செல்லும் வழியில் மனைவியின் உடல் தெருவோரத்தில் இருந்த மின்சார கம்பத்தில் மோதிவிட்டது. மோதிய அதிர்ச்சியில் பிணமாக கிடந்த மனைவி உயிர் பெற்று எழுந்து விட்டாள். உயிருடன் மனைவி எழுந்ததைக் கண்ட கணவன் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான். பின்னர் இருவரும் 10 வருடங்கள் குடும்பம் நடத்தினர்.

மீண்டும் 10 வருடங்களின் பின் மனைவி இறந்து விட்டாள். அப்போதும் கணவன் அழுது புலம்பினான். மனைவியின் உடலை தகனம் செய்வதற்காக எடுத்துச் சென்றனர். கணவனும் அழுது புலம்பியபடி பின்னே சென்றான்.. மயானத்துக்கு செல்லும் வழியில் அதே மின்சாரக் கம்பம். முன்னர் மனைவியின் உடல் மோதியபோது அவர் உயிர் பெற்று எழுந்த அதே கம்பம்.

இந்தக் கம்பத்தை கண்டதும் மனைவியின் உடலை தூக்கி சென்றவர்களை நோக்கி ஓடிச் சென்ற கணவன் சொன்னான், "கவனம்... போன தடவை போல் இந்த தடவையும் கம்பத்தில் மோதி விடாமல்... கவனமாக கொண்டு செல்லுங்கள்..."



**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-

பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85,ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு 14

**வ.ராஜ்மோகன், கிளிநொச்சி**

கே: அன்பின் பித்தா நம்ம ஆள் விஜயயின் 'சிவகாசி' பார்த்து விட்டீரா? படம் எப்படி?

ப: உங்களது பிச்சு உதறியிருக்காருல்ல... அண்ணன் பிரகாஷ்ராஜை மட்டும் ஒவ்வொரு முறையும் காட்டும் குறும்புத்தனம், சண்டைக் காட்சிகளில் காட்டும் முரட்டுத்தனம், குத்துப்பாட்டுக்களுக்கு போடும் ஆட்டம், அசின் வந்து கலாய்க்கும் போது முகத்தில் காட்டும் அப்பாவித்தனம் என்று உங்களது ஜமாய்ச்சிருக்காரு...

அதுசரி உங்களது கையை சொடுக்கி, சொடுக்கி- நரம்புகள் புடைக்க புடைக்க பேசும் பஞ்ச் டயலொக்குகளையும், சுயபுகழ்ச்சி டயலாக்குகளையும் எப்போ கைவிடப் போகிறார். படத்தின் ஆரம்பத்தில் வரும் பல்லாக்கு பாண்டி கதை ரும், அந்த சண்டையும் படத்துக்கு வீண்...

**க.செல்வி, பூநகரி**

கே: பித்தா! ஆண்களுக்கு பெண்கள் ஏன் அடிமையாக இருக்கிறார்கள்?

ப: பெண்கள் எல்லா விடயத்திலும் ஆண்களுக்கு கீழேயே இருப்பதால்

**க.மகேந்திரன், வவுனியா**

கே: பித்தா! இன்றைய சினிமா பாடல்களை விட- அந்தக் காலப் பாடல்களில் அதிக ஆபாசம் இருக்கிறதே. ஏன் இந்த பெரிசுகள் இன்றைய பாடல்களில் ஆபாசம் நிறைந்திருப்பதாக நை... நை என்று கத்துகிறார்கள்?



ப: இந்த பெரிசுகளுக்கு என்ன வேலை. சும்மா இந்தக் காலத்தைப் பற்றி குறை சொல்லாட்டா இவர்களுக்கு பத்தியப்படாது. அதிலும் பாடல்கள் மட்டுமில்லை. நடிப்பிலே கூட இந்தக்கால நமீதாவையும், நயன்தாராவையும் பார்த்தால் எமக்கு எந்த விதமான கிறுகிறுப்பும் வருகுதில்லை. ஆனால் அந்தக்கால ரி.ஆர்.ராஜகுமாரி, தேவிகா, விஜயலட்சுமி என்பவர்களை இப்போதுதிரையில் பார்த்தாலும் எமக்கு(இந்த வயதிலும்) கிளுகிளுக்குதே...

**ம.மயூரன், பத்திலியார் மகிழங்குளம்**

கே: பித்தா இம்முறை தேர்தலில் நான் வோட்டு போடாமல் பகிஷ்கரித்து விட்டேன். இது பற்றி உமது கருத்து?

ப: COME ON. KEEP IT UP

---

# எல்லாமே நாடகம்

குறுங்கதை

தெ.அரியநாகம்,
மல்வத்தை.



**து**ன்பம் என்றுமே தொடர்ந்து இருப்பதில்லை. இன்பமும் ஒருவரிடத்திலே நிரந்தரமாக குடிகொள்வதில்லை. துன்பம், துயரம் என்னும் சிறைக்குள் அடைபட்டுக்கொண்டிருந்த திலீபனுக்கு நல்ல துணையாக அமைந்தது தூய சிந்தனையே.

இரவு நேரம் சுமார் பத்து மணி இருக்கும். திலீபன் படுக்கையிலிருந்து பலவாறு சிந்தனை செய்துகொண்டிருந்தான். நித்திராதேவி அவனை விட்டு மெல்ல விலகிய வண்ணம் இருந்தாள். அவனால் தனது சிந்தனைகளை எழுத்துக்களால் தீட்டாமல் இருக்கமுடியவில்லை. கதிரையில் அமர்ந்தான், மேசையில் தாள்களை விரித்தான், பேனாவை எடுத்தான், எழுதிக்கொண்டே இருந்தான். அவனுக்கு அப்போது எழுதுவது என்னவென்றே புரியவில்லை. சிந்தனையின் வேகம் அவனை ஆட்சி செய்தது என்பதைவிட சிந்தனையை திலீபன் ஆட்சிசெய்தான்.

எப்படியும் வாழலாம் என்ற மனிதக்கூட்டத்தில் இருந்து விடுபட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற தொலை நோக்கோடு வாழ்ந்து கொண்டு இருப்பவன் அவன்.

துன்பம் எல்லாம் தொடர்ந்து வந்தவேளையிலும் இடையில் பல தீய விளைவுகளெல்லாம் குள்ளநரிகளாக குறுக்கிட்டபோதும் அவன் அத்தனையையும் தாண்டி வாழ்பவன்.

உயர்தரப் பரீட்சையில் உயர் சித்தியடைந்த திலீபன் பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதி பெற்றான். அப்போது புதிய நண்பன் இன்பனும் இடையில் அவனைச் சந்தித்தான். 'திலீப் என்ன சிந்தனை?' என்ன செய்வது? இந்த சிந்தனை யாரைத்தான் விட்டது? இதற்குத்தான் போலும் சிந்தனை செய் மனமே செய்தால் தீவினை அழியும் என்று சொன்னார்களோ தெரியவில்லை என்றான் திலீபன்.

அன்று பல்கலைக்கழகத்தில் திலீபனின் வருட வகுப்புக்கு விரிவுரை நடந்தது. இந்த விரிவுரை ஒரு ஆய்வு நோக்கில் நடந்துகொண்டிருந்தது. இந்த ஆய்வு மனிதனின் வளர்ச்சிப்படி பற்றியதாக இருந்தது. விரிவுரையின் பின் விரிவுரையாளர், விரிவுரையின் போது நடந்த சம்பவங்களை நினைவில் வைத்து கேள்வி ஒன்று கொடுத்து விடை எழுதச்சொன்னார். அதன் பின்னர் மாணவர்கள் தங்களின் ஆராய்ச்சிக்கு எட்டியவகையில் விடை எழுதிக்கொடுத்தனர்.

அடுத்த நாள் விரிவுரையின்போது, "எல்லா மாணவர்களும் நன்றாகவே எழுதியிருக்கிறீர்கள் ஆனால், திலீபன் என்ற மாணவன் மட்டும் விசித்திரம் நிறைந்த புதுமையான அணுகுமுறையில் தனது ஆய்வினை எழுதியிருக்கிறான். இவன் பிற்காலத்தில் மனோ தத்துவ நிபுணராக வரக் கூடும். எனது ஆசியினை இப்போதே கூறிவிட்டேன்" என்றார் விரிவுரையாளர்.

வெளியிடத்தில் நல்ல உள்ளம் உள்ளதோ அவனை அந்த ஆண்டவன் சோதிப்பான். ஆனால் திலீபனோ சோதனையால் வேதனையைப் பெற்று போதனையைப் பெற்றான். இது அவனை தெளிந்த உள்ளம் கொண்டவனாக மாற்றியது. நல்ல உள்ளங்கள் நாளும் வாழும். அதற்கு நல்ல உதாரணம் திலீபன். எத்தனையோ இடர்பாடுகள் அவனை நெருங்கிய போதும் எதிர் நீச்சல் வெற்றியீட்டியது. பல்கலைக்கழகத்தில் பல நண்பர்களைச் சேகரித்தான். அத்தோடு பல உறவுகள் அவனைச் சூழவே சுற்றியிருந்தன. மனம்போல் வாழ்வு என்பார்கள்இவனுக்குக் கிடைக்க இருந்த துணைவி உண்மையில் நல்ல இணைவுதான். அந்த வானத்தில் இரண்டு பறவைகள்,

(27ஆம் பக்கம் பார்க்க)



## சுவடுகள்

**இளைய அப்துல்லாஹ்**

இங்கு லண்டனில் வேலைக்கு பெரும் தட்டுப்பாடு. வேலை கிடைப்பது தமிழர்களுக்கு- அதுவும் இன்சூரன்ஸ் நம்பர் இல்லாத அகதிகளுக்கு- பெரும் சிரமம். இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் வேலைக்கு வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகும். ஆனால் தமிழ் முதலாளிமார் பலர் அகதி இளைஞர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள்.


பெற்றோல் ஸ்டேஷன்களில் தான் அதிகமாக இப்படி குறைந்த சம்பளத்தில் இந்தக் குளிருக்குள் வேலை வாங்குகிறார்கள். இன்சூரன்ஸ் நம்பர் இல்லாவிடில் சட்டப்படியாக, சம்பளம் கொடுக்கத் தேவையில்லை. முதலாளி சொல்வது தான் சம்பளம். இந்த குளிருக்குள் விறைத்து சாக வேண்டியது தான்.

பலசரக்கு கடைகளிலும் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்கிறார்கள் தமிழ் இளைஞர்கள். மணித்தியாலத்துக்கு சம்பளம் என்ற காரணத்தினால் ஒவ்வொரு நிமிடமும் வேலை, வேலை. பிழிந்து எடுத்து விடுவார்கள்.

போன வாரம் பெற்றோல் ஸ்டேஷன் ஒன்றுக்கு போன போது அங்கு நின்ற தமிழ் வாலிபர் ஒருவர் கண் கலங்கினார்.

''ஊரில் அம்மா, அப்பா, தங்கச்சி இரண்டு பேர். அவர்களை கரை சேர்க்க வேண்டும். ஆனால் வேலை கஷ்டம். 18 மணித்தியாலம் வேலை செய்கிறேன். சம்பளம் குறைவு.''

குளிரால் கைகள் விறைத்து தோலுரிந்து போன கைகளை காட்டுகிறார். இது தான் லண்டன் நிலைமை.



⅄ ⅄ ⅄

அழகுபடுத்தல் என்பது இப்பொழுது ஐரோப்பாவில் உள்ள தமிழ் சமுகத்தினரிடையே ஒரு பஷனாக இருக்கிறது. காதுக்கு கடுக்கன் போடுதல், தலையை மொட்டை அடித்தல் போன்றவை அழகுபடுத்தலுக்கான உதாரணங்கள். மொட்டையான இளைஞர்களைத்தான் இளம் பெண் பிள்ளைகளுக்கு பிடிக்கிறதாம்.

பெண்கள் முகத்துக்கும் முடிக்கும் பிளீச்சிங் செய்து முடியை செம்பட்டையாக்கவும் முகத்தை பிறவுன் கலருக்கு மாற்றவும் அதிக பணத்தை தண்ணீராய் இறைக்கிறார்கள். அண்மையில் பிளாஸ்டிக் கொஸ்மடிக் சேர்ஜன் ஒருவரைச் சந்திக்கும் பொழுது பலதும் பத்தும் பேசினோம்.

அழகு படுத்தல், மூக்கை பிளாஸ்டிக் அறுவை மூலம் அழகாக்குதல், உதடுகளை அழகு படுத்தல் என்று பேச்சு தொடர்ந்தது. பத்தாயிரம் பவுண்கள் வரை செலவாகும் கனதியான இந்த சிகிச்சைகளை ஏற்கனவே வெள்ளைக்காரருக்கு செய்து வந்ததாகவும் இப்பொழுது தமிழ் பெண்கள் தம்மிடம் சிகிச்சைக்கு வருவதாகவும் சொன்னார்.

சிறிய மார்பகங்களை பெண்கள் அசூசையாகவே பார்க்கிறார்களாம். பெருத்த மார்பகங்களை ஆக்குவதற்கான பிளாஸ்டிக் சிகிச்சை முறைகளை அவர் மேற்கொள்கிறார். ஆனால் மார்பகங்களைப் பிளந்து 'ஜெல்' போன்றவற்றை வைத்து அந்த சிகிச்சையை மேற்கொள்வதாக சொன்னார் டாக்டர்.

சிகிச்சை, பராமரிப்பு, வேறு செலவுகள் என்று ஏகப்பட்ட பவுண்கள் செலவு. சிகிச்சை செய்ததன் பின்பு மார்பகங்களை கையாள்வதில் அவதானம் தேவை என்று சொன்ன டாக்டர், தமிழ் பெண்கள் பலர் மார்பக பெரிது படுத்தல் சிகிச்சையை மேற்கொண்டதாகவும் சொன்னார்.

அண்மையில் மார்பக அறுவை சிகிச்சைக்கு பின்பு பராமரிப்பு குறைவால் ஒரு பெண்மணிக்கு நோய் தொற்று ஏற்பட்டு இரண்டு மார்பகங்களையும் அகற்றி விட்டார்களாம். இயற்கையை மாற்றும் பொழுது பல இடைஞ்சல்கள் ஏற்படத் தானே செய்யும்.

⅄ ⅄ ⅄

அண்மையில் லண்டனில் புத்தக வெளியீட்டு விழா ஒன்றுக்கு போயிருந்தேன். சனம் அதிகம். இந்தக் குளிருக்குளும் தமிழ் மக்கள் ஒன்று கூடலுக்கு மனம் விரும்பி வருகின்றனர். அங்கு பலரை-நண்பர்களை உறவினர்களை- சந்திக்க முடியும். ஏனெனில் சனி,ஞாயிறு தவிர்ந்த நாட்களில் வேலை, வேலை. உழைப்பில்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது.

இலக்கியக் கூட்டங்கள், புத்தக வெளியீட்டுவிழாக்களில் பேசுபவர்கள் சபையை மறந்துவிட்டு தமது சொந்த விடயங்களைத் தான் பார்வையாளர்கள் தலையில் கொட்டுகிறார்கள்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஒருவர், தான் கூட்டத்துக்கு வரும் பொழுது கார் விபத்தில் சிக்கியதைப் பற்றிச் சொல்லி இருபது நிமிடத்தை விழுங்கி விட்டார்.

உண்மையில் கூட்டங்களில் பேசும் போது சபையில் இருப்பவர்களை எண்ணுவதே இல்லை. இரத்தினச் சுருக்கமாக பேசவேண்டிய விடயத்தை பேசுவதே இல்லை. எரிச்சல் வரும், சில கூட்டங்களுக்கு ஏன் வந்தோம் என்று.

⅄ ⅄ ⅄

தொலைக்காட்சி நாடகங்கள் வீட்டில் உள்ள பெண்களை கட்டிப் போட்டு வைத்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டு தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பரவலாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. புலம் பெயர் நாடுகளிலும் அப்படித்தான்.



இங்குள்ள தொலைக்காட்சிகள் அதிகமான நேரத்தை தமிழக தொடர் நாடகங்களுக்கு ஒதுக்கிவைத்திருக்கின்றன. குறைந்த விலையில் அதிகமான நேரத்தை இந்த நாடகங்கள் ஆக்கிரமித்திருக்கின்றன.

வீடுகளில் இருக்கும் பெண்கள் அதிக நேரத்தை தொலைக்காட்சி நாடகங்களில் செலவழிப்பதாகவும் தம்மை கவனிப்பதில்லையெனவும் பல ஆண்கள் முணுமுணுக்கின்றனர்.

அழுகின்ற பெண் பாத்திரங்கள், 'வில்லி' பாத்திரங்களில் பெண்கள் காட்டப்படுகின்ற காட்சிகள் தொலைக்காட்சி நாடகங்களில் அதிகமாகிக் கொண்டே போகின்றன. தமிழகத்திலும் இங்கு ஐரோப்பிய நாடுகளிலும் நன்றாகவே இந்த நாடகங்கள் விலை போகின்றன. போதாததற்கு வீடியோ கெசட், DVD மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆக்க பூர்வமான சிந்தனைகளை விடுத்து பெண்களை, வீட்டில் ஓய்வாக இருக்கும் முதியவர்களை திசை திருப்பி விடுகின்றன இந்தத் தொலைக்காட்சிகள்.

⅄ ⅄ ⅄

லண்டனில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு வெள்ளைக்காரர்கள் போக பயப்படுகிறார்கள் என்று வெள்ளைக்கார நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

கையில் கத்தியுடன் தமிழ் இளைஞர்கள் நடமாடுவதாக அவர் அச்சப்பட்டார். இது ஒரு பெரிய பிரச்சினை தான். ஆனால் பிரித்தானிய பொலிஸார் கண்ணுக்குள் எண்ணெய் ஊற்றிக் கொண்டே திரிகிறார்கள். கிரிமினல் வேலை செய்பவர்களை அப்படியேஅமுக்கிவிடுவார்கள். அப்படியானவர்களை கண்டவுடன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தலையில் சுட்டுக் கொல்ல முடியும். துப்பாக்கியும் கையுமாகத் திரிகின்றனர் பொலிஸ்காரர்கள். அதனால் கிரிமினல் குற்றங்கள் குறைந்திருக்கின்றன.

ஆனால் அண்மையில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதி ஒன்றில் பஸ் ஹோல்டில் நின்று கொண்டிருந்தேன். மூன்று தமிழ் இளசுகள் வந்தார்கள். இடுப்பிலிருந்து வழியும் விதமாக கழிசான் போட்டிருந்தார்கள். அதில் ஒருவர் கழிசான் பொக்கற்றுக்குள்ளிருந்து இரண்டு சீனவெடிகளை எடுத்து லைற்றரில் பத்த வைத்து பஸ் ஹோல்டில் நின்ற சனத்துக்கு மத்தியில் வீசினார். இங்கு வெடிகள் பலத்த சத்தமானவை. எல்லோரும் அருண்டே விட்டோம். வெள்ளைக் காரர்கள் துடித்துப் போய் விட்டானர். உடனே 999 ஐ கூப்பிட்டார் ஒரு வெள்ளைக்காரர்.

பொலிஸார் வர தமிழ் இளைஞர்கள் மாயமாகி விட்டனர். எரிச்சல் படுத்தி வெள்ளைக்காரரை கோபப்படுத்தி, பிறகு பிரித்தானியாவில் இருந்து திருப்பி அனுப்புகிறார்கள், திருப்பி அனுப்புகிறார்கள் சத்தம் போட்டால்.....? இங்கு வெளிநாட்டவர் மீது பிடி இறுகுவதற்கு இவைகளும் காரணங்கள் தான்.

⅄ ⅄ ⅄

ஊர்வசி மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் பணி புரிபவர். ஊர்வசியின் கவிதைகள் சிலவற்றையே நான் படித்திருக்கிறேன். ஆனால் பெண்களின் மன விசாரங்களை துல்லியமான மொழியில் சொல்லக்கூடியவர். எமது கிராமங்கள், யுத்தம் மற்றும் பெண்களைத் தான் எமது கவி மூலங்கள் ஆழமாகவே தேடிப் போகின்றன. தவிர்க்க முடியவில்லை. இன்று ஊர்வசியின் கவிதை ஒன்று

**இடையில் ஒரு நாள்**

எப்பொழுதாவது ஒரு
மாலையில்
அது நடக்கலாம்
ஒரு மதகுரு; அல்லது
முக்காடு அணிந்த ஒரு மாது
ஒரு தாடி மீசைப் பிச்சைக்காரன்
இப்படி
இன்னும் வேறு யாராவது
என் வீட்டு வாசலில்
கதவைத் தட்டலாம்.
நான் அவர்களை
சட்டென்று அடையாளம்
கண்டு கொள்கிறேன்......
............
ராணுவக் கும்பல்; அல்லது
பொலிஸ் படை பிறகு
கூந்தல் அவிழ்ந்து விழுகிற
வரையில்
விசாரணை.
எனக்கருகே அம்மாவும்
கட்டிலிருந்து தவறி
வீழ்ந்துவிட்ட
ஒரு அணில் குஞ்சைப் போல...
நீ போய் விட்டாய்
நான் தொடர்கிறது.

(இன்னும் வரும்)

# மன்னர் கஜேந்திராவுக்கு கஷ்டகாலம்





மன்னர் கஜேந்திரா



மாஓ போராளி ஒருவர்

உலகின் ஒரே இந்து இராஜ்ஜியமான நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மன்னர் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நேபாளத்தின் ஏழு அரசியல் கட்சிகளுடன் மாஓ கிளர்ச்சியாளர்களும் சேர்ந்து கொண்டிருப்பது அந்த நாட்டின் நிலைமையை மிகவும் போசமாக்கி விட்டுள்ளது.

தமது ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மாஓ கிளர்ச்சியாளர்கள் கடந்தவாரம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்துள்ளனர்.

நேபாள அரச படைகளின் ஆத்திர முட்டும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் தமது இயக்கம் யுத்த நிறுத்தத்தை நீடிப்பதற்கு முடிவு செய்துள்ளதாக கிளர்ச்சியாளர்களின் தலைவர் பிரஷன்டா தெரிவித்துள்ளார்.

மாஓ கிளர்ச்சியாளர்களின் மூன்று மாத ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம் டிசெம்பர் 2 ஆம் திகதி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது. யுத்த நிறுத்தகாலத்திலும் மாஓ கிளர்ச்சியாளர்கள் ஆள் கடத்தல் மற்றும் பயமுறுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக நேபாள அரசு குற்றஞ்சாட்டி வருகிறது. மாஓ கிளர்ச்சியாளர்களைக் கொல்வதற்கு நேபாள படையினருக்கு இச்சம்பவங்கள் சாட்டாக அமைகின்றன என்று சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன.

மாஓ கிளர்ச்சியாளர்கள் மீண்டும் காடுகளுக்குச் செல்லும் நிலைமை தற்போதைக்கு ஏற்படப்போவதில்லை என்று பிரஷன்டா கூறுகிறார்.

கிளர்ச்சியாளர்களில் பெரும்பாலானோர், தமது தலைமை அரசியல்கட்சிகளுடன் செய்து கொண்ட 12 அம்ச திட்ட ஒப்பந்தத்தை எதிர்க்கிறார்கள். ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து மீண்டும் தலைமறைவு வாழ்க்கைக்கு போனால் அரசியல்

(17ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கெதிரான நகர்வுகளில் 'றோ'

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்து இந்தியா, முன்னரைவிடத் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது போல் தெரிகிறது.

90களின் பின்னர் பெரிதாக இலங்கை அரசியல் - இராணுவ விவகாரங்களில் அக்கறை காட்டாது இருந்த இந்தியா 2000ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இருந்து மேற்கு நாடுகள் மெல்ல மெல்ல இலங்கை விவகாரத்தில் நுழையத் தொடங்கிய பின்னர் விழிப்படைந்தது. நிலைமை தனது கையை விட்டு சென்று விடக்கூடும் என அஞ்சிய இந்திய இராணுவம் இலங்கையுடன் தனது நெருக்கத்தை மீண்டும் அதிகரித்துக் கொண்டது. போர்க் கப்பல்கள் உட்பட இராணுவத் தளபாடங்ளை அது இலங்கைக்கு வழங்கியது. சம காலத்தில் மேற்கு நாடுகள் சமாதான முயற்சிகளை அயராது மேற்கொண்டிருந்தன. இந்நிலையில் கடந்த மாதம் இலங்கையில் நடந்த ஜனதிபதித் தேர்தலும், மாவீரர் நாள் உரையில் தலைவர் பிரபா விடுத்த அபாய அறிவிப்பும் இந்தியாவின் கவனத்தைக் கவர்ந்துள்ளது போல் தெரிகிறது. இன்னொரு யுத்தம் இலங்கையில் மூண்டால் மேற்கு நாடுகளை அல்லது இந்திய விரோத சக்திகளை இலங்கைக்குள் நுழைய விடுவது தனக்கு ஆபத்தானதாகும் என இந்தியா கருதுகிறது.

இந்தச் சூழ்நிலையிலேயே இலங்கையின் புதிய வெளியுறவு அமைச்சராக உள்ள மங்கள சமரவீர தனது இந்திய விஜயத்தை மேற்கொண்டார். அவர் அங்கு இந்தியப் பிரதமர் உட்பட பல முக்கிய தரப்புகளைச் சந்தித்துப் பேசினார்.

அடுத்த ஆண்டு பெரும் யுத்தம் வெடிக்கலாம் எனக் கருதப்படுவதால் புதுடில்லியில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம் இந்தியாவின் தென்மண்டல இராணுவத் தளபதி ஜெனரல் பி. எஸ். தர்காரும் இலங்கை வந்து போயிருக்கிறார்.

இராணுவ உயர்மட்டத்துடன் அவர் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் சமாதான வழி முறையாலும் சரி, யுத்த வழி முறையாலும் சரி இந்தியாவை அழைப்பது பற்றி புதிய ஆட்சியாளர்கள் சிந்திக்கத் தொடங்கி உள்ளதையே இவரின் விஜயம் எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் பிராந்தியத்தில் வல்லரசான இந்தியாவுடன் புதிய ஆட்சியினரும் தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளும் நெருங்கிய நட்புக் கொண்டு வருகின்றன. இந்தச் சாதகமான புறச் சூழலில் இந்தியாவிற்கு சாதகமான ஒரு நிலை தென்னிலங்கை அரசியல் தரப்பில் காணப்படுகிறது. இந்தியா மீண்டும் நுழைவது தமிழர்களுக்குச் சாதகமாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

எற்கனவே 1987களில் தலையிட்ட இந்தியா தமிழரின் ஆயுதப்போராட்டத்துக்கு எதிரான சக்திகளை வளர்த்து விடுவதில் வெற்றி கண்டிருந்தது. அதனை தற்போதும் மேற்கொண்டு வருகிறது. இந்திய உளவு அமைப்பான 'றோ' நீண்டகாலமாக புலிகளுக்கெதிரான நகர்வுகளைச் சகல முனைகளிலும் மேற்கொண்டு வருகிறது. இந்த நிலை தற்போது மேலும் தீவிரமடைவதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா தனது கேந்திர நலன்களை முன்னிறுத்துவதற்கு எந்த எல்லை வரையும் செல்லத் தயார் என்பது கடந்த கால வரலாறாக உள்ளது. தற்போதைய புதிய சூழலில் இந்தியா புதிய அணுகுமுறையைக் கையாள வேண்டியது மிக முக்கியமாகும். அதை விடுத்துப் பழைய முறையில் அதே பாதையில் செல்ல முற்பட்டால் தமிழர் தரப்புடன் முட்டி மோத போதுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய ம.தி. மு. க பொதுச் செயலாளரும், ஈழத்தமிழர்களின் அனுதாபியுமான வைகோ, "சிங்கள அரசுகள் விரிக்கும் சதிவலையில் இந்தியா சிக்கிவிடக்கூடாது. அமைதிமுயற்சிகளில் இந்தியா தலையிட வேண்டும் என சிங்கள அரசு கோருவது சமாதானத்தின் மீதான நம்பிக்கையாலோ அல்லது தமிழருக்குத் தீர்வு கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தாலோ அல்ல. சமாதான வழிமுறைகளுக்கான பாதைகளை மூடவே" என தெளிவாகத் தெரிவித்திருந்தார்.



நோர்வேயின் அனுசரணைப் பணியை நிறுத்துவதில் தென்னிலங்கை பேரினவாதிகள் விடாப்பிடியாக இருந்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தியாவுக்கு தெளிவாகப் பாதையை வகுத்துக் கொடுத்துள்ளது சிங்கள தேசம். இந்தியா உடனடியான தலையிடுவதற்கான சாத்தியம் குறைவாக இருக்கின்ற போதிலும் திரைமறைவில் தனது சதி நடவடிக்கைகளை தீவிரமாக செயற்படுத்தக் கூடும்.

புலிகளின் பலம் குறித்து சரியான மதீப்பீடு இல்லாமல் 87களில் கால்வைத்த இந்தியா இறுதியில் மோசமான விளைவுகளைச் சந்தித்தது என்பது இன்றும் மறக்க முடியாத பாடமாக இருக்கிறது.

தென்னிந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் சிலர் கூறுவது போல் இந்தியா ஒன்றில் புதிய முறையில் இலங்கை விவகாரத்தை அணுகவேண்டும் அல்லது தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

எனினும் இந்தியாவின் நகர்வுகளை அவதானிக்கும் போது அது ஒதுங்கியிருப்பது சாத்தியமில்லை போல் தெரிகிறது. நிலைமைகளை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கே.பி.

## மன்னர்...

*(16ஆம் பக்கத் தொடர்ச்சி)*

கட்சிகளுடன் செய்து கொண்ட 12 அம்சத் திட்டம் பயன் அற்று விடும் என்பது கிளர்ச்சித் தலைவர்களின் நம்பிக்கை.

இதுவரை காலமும் ஆயுதப் போராட்டத்தினால் சாதிக்க முடியாது போனதை அரசியல் நீரோட்டத்தில் இணைவது மூலம் சாதிக்க முடியும் என்ற கருத்து கிளர்ச்சித் தலைவர்கள் மத்தியில் மேலோங்கி நிற்கிறது.

நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழிக்கவும் ஜனநாயக ஆட்சி முறையை உருவாக்கவும் பிரதான அரசியல் கட்சிகளும் மாஓ கிளர்ச்சியாளர்களும் இணைந்திருப்பது மன்னர் கஜேந்திராவுக்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது.

ஆட்சியில் இருந்த பல கட்சி அரசாங் கத்தை கடந்த பெப்ரவரி முதலாம் திகதி மன்னர் கஜேந்திரா கலைத்து விட்டு முழு ஆட்சி அதிகாரங்களையும் தனது பொறுப் பில் எடுத்துக் கொண்டதை அடுத்து நேபாளத்தில் அரசியல் குழப்பங்கள் ஆரம்பமாகின.

டாக்காவில் நடைபெற்ற சார்க் மாநாட் டில் கலந்து கொண்டு விட்டு தனது ஆபிரிக்க நாடுகளின் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த வாரம் தலை நகர் காட்மண்டு வந்து சேர்ந்த மன்னர் கஜேந்திரா, நேபாளத்தில் நடத்தி வரும் அடக்கு முறை ஆட்சி காரணமாக சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏற்கனவே அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகள் நேபாளத்துக்கான ஆயுத விநியோகத்தை நிறுத்திக் கொண்டுள்ளன. மா ஓ கிளர்ச்சியாளர்களை எதிர்த்து யுத்தம் செய்யும் பலத்தை நேபாள இராணுவம் படிப்படியாக இழந்து வருகிறது.

நேபாளத்தில் மன்னர் ஆட்சி ஒழிக்கப் பட்டு மீண்டும் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டால் அரசியல் நீரோட்டத்தில் தாம் இணைந்து கொள்ளத் தயார் என்று மாஓ கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருப்பது, பிராந்திய நாடான இந்தியாவுக்கு ஒரு வெற்றி என்று கூறப்படுகிறது.

அதே சமயம் ஒரு கால கட்டத்தில் மாஓ கிளர்ச்சியாளர்கள் வசம் நேபாளத்தின் முழு அதிகாரமும் சென்றடையும் நிலைமை எற்படுமானால் உபகண்டத்தில் மிகவும் மோசமான நிலைமை ஒன்றை இந்தியா சந்திக்க நேரிடும். ஆயுப் போராட்டம் மூலம் சாதிக்க முடியாததை அரசியல் போராட்டம் மூலம் சாதிக்க முயலுகின்றனர் மா ஓ கிளர்ச்சியாளர்கள்.

## கள் இறக்கும் கன்னி



அறிவிலும், ஆற்றலிலும் ஆண்களை விட பல மடங்கு உயர்ந்து நிற்கும் பெண்கள் மனவலிமை பெற்று இருந்தாலும், உடல் வலிமை என்பது குறைவுதான். எனவே சில வேலைகளை ஆண்களுக்கென்றே விட்டு வைத்து இருந்தனர்.

ஆனால் ஆர்வம், அவசியம் காரணமாக இது போன்ற கடின வேலைகளிலும் இப்போது பெண்கள் கால் பதித்து வருகின்றனர்.

பனை, தென்னை மரங்களில் ஏறி பனங்காய், தேங்காய் பறிப்பதும், கள் இறக்குவதும் ஆண்களே செய்யும் தொழில் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் புடூர் கிராமத்தில் கடந்த 6 ஆண்டுகளாகவே கன்னிப் பெண் ஒருவர் தென்னை மரம் ஏறி கள் இறக்குவதையே தொழிலாக கொண்டிருக்கிறார்.

சுதாம்மா என்று கிராம மக்களால் அன்புடன் அழைக்கப்படும் சுதாவின் பூர்வீகம் கேரளா அல்ல. தமிழ்நாட்டின் கோவை மாவட்டம்.

பிழைக்க வழி தேடி அவரது தந்தை மணியும், தாய் ஈசுவரியும் சுதா உள்பட 3 மகள்களை அழைத்துக் கொண்டு கேரளா சென்றனர். தென்னை மரம் ஏறி கள் இறக்குவதுதான் மணியின் தொழில்.

ஒருநாள் மரம் ஏறும் போது தவறி விழுந்த மணி முடிவைத் தேடிக் கொள்ள, இனி குடும்பத்தைத் தாங்குவது யார்? என்ற கேள்வி எழுந்தது. சுதாவுக்கு அப்போது வயது 16 தான். ஆனால் அவள்தான் மூத்த மகள். எனவே தந்தையின் தொழிலை தொடர்ந்து குடும்பத்தை காப்பாற்ற முடிவு செய்தார்.

சுதாவின் முடிவைக் கேட்டு ஊரார் வியந்து மூக்கில் விரல் வைத்து, வாய் பிளந்து நிற்க, தென்னையில் ஏறும்போது மரத்தோடு உராய்ந்ததால் மார்பில் சிராய்ப்பு மற்றும் வண்டுகளின் கடி, குளவிகளின் கொட்டுதலால் வேதனை ஏற்பட்டாலும் சுதா அசைந்து கொடுக்கவில்லை. பெர்முடா போன்று உருவாக்கப்பட்ட கால்சட்டை, கழுத்தை மூடிய பனியன் அணிந்து தனது தந்தையின் பணியை செய்யத் தொடங்கி அதையே வாடிக்கையாக்கிக் கொண்டார்.

அதிகாலை 5 மணிக்கே எழுந்து புறப்பட்டு செல்லும் சுதா, 20 மரங்களில் காலையிலும், மாலையிலும் ஏறி இறங்கி பணியைச் செய்கிறார். ஒரு லீட்டர் கள் இறக்கும் போது அவருக்கு கிடைப்பது ரு.3.50தான். இருப்பினும் அதில் மிச்சம் பிடித்து ஒரு தங்கைக்கு தங்கச் சங்கிலி வாங்கிக் கொடுத்து, திருமணத்திற்கு தயார்படுத்தி வருவதுடன், கடைசி தங்கையை பள்ளிக்கு அனுப்பி வைத்து மகிழ்ந்து வருகிறார்.

ஆனால் பாவம் சுதா, எத்தனை காலம்தான் அவரால் இந்த தொழிலை செய்ய முடியும்? அவரது தாய் ஈசுவரி விதியை எண்ணி விழிநீர் உதிர்த்தபடி மகளின் எதிர்காலத்தை நினைத்து வேதனையுடன் காலத்தை ஓட்டுகிறார்.



# அறிவியல்

## உயிர் கொல்லியாக மாறும் கம்ப்யூட்டர் கழிவுகள்



சென்ற நூற்றாண்டின் அரிய அறிவியல் கண்டுபிடிப்புக்களில் பிரதான இடம் வகிப்பவை மின்னணு பொருள்கள் கண்டு பிடிப்புகளே ஆகும்.

கம்ப்யூட்டர்கள், பக்ஸ் யந்திரங்கள், பிரிண்டர்கள், கையடக்க தொலைபேசிகள் ஆகியவை நம் அன்றாட வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாகி விட்டன.

ஆனால் இந்த நூற்றாண்டில் உபயோகம் இல்லாமல் தூக்கி எறியப்படும் இத்தகைய மின்னணு பொருட்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதை பார்க்கும் போது பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

வளர்ந்த நாடுகளில் பயனற்ற இதுபோன்ற மின்னணு பொருட்களின் கழிவுகள், பொதுவாக உபயோகமற்ற பொருட்களை காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக உள்ளன. மனித மூளையை விட சுறுசுறுப்பாக இயங்கும் மின்னணு பொருள் கழிவுகள் மனித உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய அதிக விஷத்தன்மை வாய்ந்தவை என்பது இப்போது கண்டறியப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் சுற்றுப்புற சுகாதாரத்திற்கும் இவை கேடு விளைக்கின்றன. (மின்னணு பொருட்கள் அதன் வாழ்நாள் இறுதியில் உபயோகம் இல்லாமல் போய் விடும் போது அதனை ஆங்கிலத்தில் 'e-Waste' என்கிறார்கள். இதில் 'e' என்பது மின்னணு தயாரிப்புகளைக் குறிக்கிறது.)

மின்னணு கழிவுகள் என்பது, அனைத்து விதமான உபயோகமற்ற மின்னணு பொருட்கள், மின்சார சாதனங்கள் ஆகியவை ஆகும்.

உலக நாடுகளை மின்னணு கழிவுகள் பாழ்படுத்துவதுடன் மறுசுழற்சி முறையில் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இவை உடல் நலத்திற்கு பெரும் கேடு விளைவித்து விடுகின்றன என்பது மருத்துவ வல்லுநர்கள் இப்போது கண்டு பிடித்து இருக்கும் அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

உபயோகமில்லாத மின்னணு பொருட்களை மீண்டும் மறுசுழற்சி முறையில் சீர்படுத்தும் போதோ அல்லது மறுபடியும் தயாரிக்கும் போதோ அதில் உள்ள ஈயம், பாதரசம் மற்றும் பட்டரி செல்லில் உள்ள நச்சுப் பொருட்கள் பூமிக்குள் கலந்து விடுகின்றன. இவை உடலுக்கு கடுமையான தீங்குகளை விளைவிக்கின்றன.

மின்னணு கழிவில் 1000க்கும் மேற்பட்ட பொருட்கள் மற்றும் இரசாயனக் கலவைகள் கலந்துள்ளன. இவற்றில் பல அதிக விஷத்தன்மை வாய்ந்தவை. மறு சீரமைப்புக் கூடங்களில் இவற்றை சீரமைத்து மீண்டும் உற்பத்தி செய்யும் போது சுற்றுப்புற சூழலை அதிக அளவில் பாதிக்கச் செய்வதோடு, உடல் நலத்துக்கும் அதிக அளவில் கேடு விளைவித்து விடுகின்றன.

மொனிட்டரில் உள்ள ஈயம், 'கம்ப்யூட்டர் சிப்'புகள், கண்ணுக்குத் தெரியாமல் வெற்றுக் குழாய் மூலம் செல்கின்ற 'மின்னணு கதிர்கள்', கேபிள்கள் செல்லக் கூடிய 'பி.வி.சி. குழாய்கள்' ஆகியவற்றில் நச்சுப் பொருட்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒருவருக்கு புற்று நோய் அல்லது மூச்சுத் திணறல் நோய் ஆகியவற்றை நாளடைவில் ஏற்படுத்தி விடக்கூடிய அபாயம் படைத்தவை.

கம்ப்யூட்டர் கழிவுகளில் உள்ள ஈயம் கொஞ்சம் கொஞ்சமாக சுற்றுப்புற சூழலில் கலக்கும் போது அதில் உள்ள விஷத்தன்மை தாவரங்கள், விலங்கினங்களின் உடலில் கண்ணுக்கு தெரியாமல் உள்ள உயிர் அணுக்கள் ஆகியவற்றுக்கு பெரும் பாதிப்பை உருவாக்குகின்றன. உடலிலுள்ள மைய நரம்பு மண்டலம், சுற்றுப்புற நரம்பு பகுதிகள், இரத்த ஓட்டம், சிறுநீரகம் ஆகியவற்றையும் பாதிக்கச் செய்கின்றன.

குறிப்பாக குழந்தைகளுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் மூளை வளர்ச்சியையும் அதிகமாக பாதிக்கச் செய்து விடுகின்றன. பூமிக்குள் பதிக்கக் கூடிய பொருட்களிலும் ஈயம் உள்ளது. இது நாளடைவில் கரைந்து குடிக்கும் தண்ணீருக்குள்ளும் கலந்து விடுகிறது. இந்த தண்ணீரை பயன்படுத்துகிறவர்கள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

## அறிவியல் துணுக்குகள்

- அரிமா சங்கத்தை (Lions Club) மெல்வின் ஜோன்ஸ் என்ற அமெரிக்கரே முதலில் நிறுவினார். இவர் 1879ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி பிறந்தவர். 1917ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆம் திகதி பொதுநல சங்கங்களின் பிரதிநிதிகள் சிக்காகோ நகரில் ஒன்று கூடி அரிமா சங்கத்தித்துக்கான விதையை ஊன்றினர்.
- முதல் இன்டர்நெட் 1965ஆம் ஆண்டுஉருவாக்கப்பட்டது. கலிபோனியா பல்கலைக்கழகத்தின் 'ருட்டர்' என்ற பெரிய எலக்ட்ரானிக் சுவிட்ச் மூலம் தொலைவில் உள்ள இன்னொரு கம்பியூட்டருக்கு செய்திகளை அனுப்பினர். அது வெற்றி பெற்றது. அமெரிக்காவில் இராணுவப் பயிற்சிகளுக்காக உருவாக்கப்பட்ட முதல் இன்டர்நெட் இதுதான்.
- 1968அம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதிக்காக 500,000 டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட காரே உலகில் அதிக செலவில் தயாரிக்கப்பட்ட காராகும்.
- இந்தியாவின் முதல் செயற்கைக் கோளுக்கு 'ஆர்யபட்டர்' என்று பெயர் சூட்டப்பட்டது. ஆர்யபட்டர் என்பவர் கணித மேதையும் விண்வெளி ஆராய்ச்சியாளருமாவார். இந்தியாவில் கோள்கள் பற்றி முதன் முதல் ஆராய்ந்த விஞ்ஞானி இவர் என்பதால் இந்தியாவின் முதல் செயற்கை கோளுக்கு இவரின் பெயரைச் சூட்டினர்.
- உலகின் மிகப் பழமையான விளையாட்டு அம்பு எய்யும் விளையாட்டுத்தான். வில்வித்தை விளையாட்டைத்தான் மனிதன் முதலில் விளையாடினான். இவ் விளையாட்டு நவீன விளையாட்டாக கி.பி.3ஆம் நூற்றாண்டில் மீண்டும் தலையெடுத்தது. அம்பு எய்தல் என்ற போட்டி விளையாட்டு 12ஆம் நூற்றாண்டில் நடைமுறைக்கு வந்தது.

## விந்தையான கம்ப்யூட்டர்



தைவான் நாட்டின் டாடங் கம்ப்யூட்டர் கம்பெனியின் அதிநவீன மாத்திரை கம்ப்யூட்டர்- டெலிவிஷனுடன் (TABLET PC&TV) கூடிய கம்ப்யூட்டர் தைப்பே நகரில் நடைபெற்ற உலக வர்த்தகக் கண்காட்சியில் எல்லோரையும் பெரிதும் வியப்புறச் செய்துவிட்டது.

இந்த அதிசய டு-இன்-ஒன் கம்ப்யூட்டருக்கு கீபோடோ அல்லது உரிய பட்டன்களோ தேவையில்லை. இதற்கென உள்ள பிரத்தியேக இடத்தில் பேனாவினால் தொட்டால் போதும் கம்ப்யூட்டரை, டெலிவிஷனை இயக்கி புரோகிராமும் செய்து கொள்ளலாம். விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். நிகழ்ச்சிகள் மற்றும் படங்களையும் பார்த்துக் கொள்ளலாம். இது விந்தையான கம்ப்யூட்டர்தானே?

## உலகின் முதலாவது அட்டை வடிவ கமெரா!



உலகின் முதலாவது அட்டை வடிவத்திலான (CARD SIZED) புகைப்படக் கமெரா (DIGITAL CAMERA) ஒன்றை ஜப்பானின் கசியோ கம்ப்யூட்டர் கம்பெனி தயாரித்துள்ளது. தலைநகர் டோக்கியோவிலுள்ள தலைமையகத்தில் வைத்து அதன் ஊழியரான மிஹோ நிசிஜாவா என்பவர் இந்த கமெராவை அறிமுகம் செய்த போது கண்டு வியப்படையாதவர் எவருமில்லை!

'எக்ஸிலிம் எக்ஸ் 5500' என்ற பெயர் கொண்ட இந்த அதிநவீன டிஜிட்டல் கமெராவின் எடையே 3.7மி.மீட்டர் தான்! இலகுவாக சட்டைப்பையில் போட்டுக் கொள்ள உதவும் இந்தக் கமெராவில் எடுக்கும் புகைபடங்களை கம்ப்யூட்டர் மூலம் காணவும், பிரின்ட் போடவும் முடியும்!


## சிறிய ரயில்...

1889ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஓடிய ஒரு ரயிலைப் போலவே ஒரு ரயிலை மிகச் சிறிதாக செய்து, பெர்லினில் நடைபெற்ற கண்காட்சியில் ஓட வைத்து காட்டினார் ராபர்ட் என்ற வல்லுனர். அரை மீட்டர் நீளமும், எட்டு கிலோ எடையும் கொண்ட இதில் அமர்ந்து பயணிகள் பயணித்த காட்சி அனைவரையும் அதிசயப்பட வைத்தது.



## விண்வெளி விஞ்ஞானம்

விண்வெளியில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றம் பற்றிய ஆய்வுகள் இப்போது தீவிரமடைந்துள்ளன. விண்வெளியில் உள்ள சில கோள்களில் அதிக வெப்பமும் வேறு சில கோள்களில் கடும் குளிரும் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பூமியிலும் இப்போது கால நிலை மாற்றங்கள் ஏற்படுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய காலநிலை மாற்றங்களினால் விண்வெளியில் உள்ள கோள்களிலும் மாற்றங்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக விண்வெளி விஞ்ஞானிகள் நம்புகின்றனர். எனவேதான் விண்வெளியில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்து இப்பொழுது ஆராய்ச்சிகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர் விண்வெளி விஞ்ஞானிகள்.



ஆரம்பத்தில் விண்வெளியில் அதிக வெப்பம் நிலவியது. காலம் செல்ல அது குளிர் மிகுந்த பகுதியாக மாற்றமடைந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இனி வரும் காலங்களிலும் இத்தகைய மாற்றங்கள் அங்கு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவேதான் விண்வெளி விஞ்ஞானிகள் இது பற்றிய ஆராய்ச்சிகளை இப்போது மேற்கொண்டுள்ளனர்.

1963ஆம் ஆண்டு டென்மார்க் விஞ்ஞானியான மாட்டின் சிமித் எதிர்காலத்தில் விண்வெளியில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிவித்ததை அடுத்தே விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து தமது கவனத்தைச் செலுத்த தொடங்கினர்.




# திரும்பிப்பார்

சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார் சௌமியா. அவரது திருமண வாழ்வில் புயல் வீசிக் கொண்டிருக்கிறது. கணவரைக் கண்டாலே எரிந்து விழுகிறார் அவர்.

ஒரு மனநல மருத்தவரைச் சந்திக்கும் அளவுக்கு இந்தப் பிரச்சினை முற்றியது. சௌமியாவின் பிரச்சினை இதுதான். கல்யாணம் ஆன சில ஆண்டுகளுக்கு தன்னை செக்ஸ் மூலம் சந்தோஷப்படுத்திய கணவர், தற்போது அதில் ஆர்வம் காட்டுவதில்லை. சௌமியா வற்புறுத்தினாலும் அதில் ஈடுபட மறுக்கிறார் அவர்.

கல்யாணம் ஆன புதிதில் ஏதோ செய்திருக்கலாம். நான்கு குழந்தைகளைப் பெற்ற பிறகு தனக்கு இதிலெல்லாம் ஆர்வம் போய் விட்டது என்பது கணவரது வாதம்.


இது வெறும் கட்டுக்கதை என்று பலர் நினைக்கலாம். ஆனால், செக்ஸ் பற்றி இந்தியா டுடே மூன்றாவது ஆண்டாக மேற்கொண்ட கருத்துக் கணிப்பின் முடிவுகளைப் பார்த்தால் இது உண்மை என்பது புரியும்.

இந்தியாவின் பிற நகரங்களோடு ஒப்பிடுகையில் பாரம்பரிய பார்வையைக் கொண்டதாக கருதப்படும் நகரம் சென்னை. 'செக்ஸ்' என்ற வார்த்தையைக் கேட்டாலே முகம் சுளிக்கும் பெண்கள்தான் இங்கு அதிகம்.

அதனால் இங்கிருக்கும் பெண்களுக்கு செக்ஸ் என்றாலே பிடிக்காது என்று முடிவு செய்வது அபத்தம் என்று சுட்டிக் காட்டுகிறது 'இந்தியா டுடே' எடுத்திருக்கும் மணமாகாத இளம் பெண்களின் செக்ஸ் பற்றிய இந்தக் கருத்துக் கணிப்பு. உண்மையில் சென்னை நகர பெண்கள் திருமணம் என்ற பந்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால், திருமணத்திற்குப் பிந்திய வாழ்வில் செக்ஸ் என்பது மிகவும் அவசியமான ஓர் அம்சம் என்பதில் அவர்களுக்குச் சந்தேகமில்லை.

அதனால், திருமணத்திற்கு முன் செக்ஸ் வைத்துக் கொள்ளவே கூடாது என்று சொல்லும் பெண்களின் சதவீதம் இந்தியாவிலேயே சென்னையில்தான் அதிகம்.

"இதை பட்டிக் காட்டுத்தனம் என்று நினைக்கக் கூடாது. இந்த விஷயத்தில் பாராமுகமாக இருக்கக் கூடாது என்பது தமிழ் பெண்களின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. ஒரு வகையில் அது நல்லதுதான்" என்கிறார் பிரபல மனநல மருத்துவரான ஷாலினி.



திருமணமாகாமல் சேர்ந்து வாழ்வது பெருநகரங்களில் அதிகரித்து வரும் நிலையில் அது தவறு என்று அடித்துச் சொல்கிறார்கள் சென்னை நகரப் பெண்கள்.

சென்னையில், 71 சதவீதம் பேர் இது தவறு என்கிறார்கள். ஹைதராபாதில் வெறும் 32 சதவீதம் பேர்தான் இது தவறு என்கிறார்கள். அப்படிச் சேர்ந்து வாழ்ந்தவர்கள் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என 78 சதவீத பெண்கள் கருதுகிறார்கள்.

திருமணம் வரை பெண் கன்னியாக இருக்க வேண்டும் என்ற விஷயத்தில் ஆண்களை விட பெண்களே அதிகம் கவலைப்படுகிறார்கள். தேசிய அளவில் 54 சதவீத ஆண்களே பெண்கள் திருமணம் வரை கன்னித் தன்மையுடன் இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் பெண்களில் 66 சதவீதம் பேருக்கு அந்தக் கருத்து இருக்கிறது. சென்னையில் கேட்கவே வேண்டியதில்லை. 84 சதவீதம் பேர் அப்படி நினைக்கிறார்கள்.

என்றாலும் திருமணத்திற்குப் பிறகு செக்ஸ் பற்றிய அவர்களின் பார்வை அடியோடு மாறுகிறது. திருமணம் ஆன பின் செக்ஸை வாழ்வின் மிக முக்கியமான பகுதியாக கருதும் பெண்களின் சதவீதம் இந்தியாவிலேயே சென்னையில்தான் அதிகம். ஆணுக்கு செக்ஸ் எந்த அளவுக்கு தேவையோ அதே அளவுக்கு பெண்ணுக்கும் தேவை என 63 சதவீதமான பெண்கள் நினைக்கிறார்கள். அகில இந்திய அளவில் இது வெறும் 46 சதவீதம் தான்.

செக்ஸில் ஆண்களுக்கு கிடைக்கும் அளவு இன்பம் பெண்களுக்கும் கிடைக்க வேண்டுமென 79 சதவீத பெண்கள் சொல்கிறார்கள். பெங்களூரில் வெறும் 50 சதவீத பெண்களே அப்படி நினைக்கிறார்கள். செக்ஸ் தங்கள் வாழ்வின் மிக முக்கியமான அங்கம் என 59 சதவீதமானோர் நினைக்கிறார்கள். இதற்கு பொருளாதார ரீதியாக பெண்கள் சுதந்திரம் அடைந்திருப்பது, உலக மயமாக்கலுக்குப் பிறகு உயர் சம்பளங்களில், உயர் பொறுப்புகளில் ஆண்களுக்கு இணையாக பெண்கள் பொறுப்புகளை வகிப்பது ஆகியன முக்கிய காரணமாக இருக்க வேண்டும். மீடியாவின் தாக்கத்தால் பெண்களிடம் செக்ஸ் குறித்த பார்வை விரிவடைந்திருப்பது இதற்கான இன்னொரு முக்கிய காரணம்.

## ஒரு நாள் திருமணம்!



மேலைநாடுகளில் நாகரிக ஆண்கள் பெண்கள் திருமணத்தை வெறுக்கிறார்கள். ஹொலிவுட் பாடகி பியான்ஸ், ஒரு நாளைக்கு மட்டும் திருமணம் செய்யப் போகிறார்.

23 வயதாகும் இவர் 8 வயதில் பாடத் தொடங்கினார். பிறகு, கோடி கோடியாக சம்பாதித்தார். கனினி ஊடாக 'ஜெய்ஸ்' என்ற வாலிபரைக் காதலித்தார். இவர்கள் இருவரும் திருமணம் செய்து, ஒருநாள் மட்டும் கணவன்-மனைவியாக வாழப் போகிறார்கள். இத் திட்டத்தை சொல்லியவரே பாடகி பியான்ஸ்தான். அதுவரை தொடர்ந்து காதல் செய்யவும், பாடுவதற்கும் இடைக்கால தடை போட முடிவு செய்திருக்கிறார், இவர்.

## நரகத்தில் மடோனா!



அமெரிக்க பொப் பாடகி மடோனா நரகத்துக்குப் போவார் என்று, யூத சமய பாதிரியார் ஒருவர் சாபம் போட்டிருக்கிறார்!

மடோனா அப்படி என்ன பாவம் செய்தார்?

ஞானிகளின் பெயர்களை வியாபாரப் பொருளாக்கக்கூடாது என்பது யூத சமயக் கொள்கை. மடோனா சமீபத்தில் ஒரு புதிய பாடல் 'அல்பம்' வெளியிட்டிருக்கிறார். அதில் 'ரபிக்கு சமர்ப்பணம்' என்று கூறியுள்ளார்.

ரபி என்பவர் யூத சமயப் புகழ்பெற்ற ஞானி! 'ஆல்பத்'துக்கு ரபியின் பெயரைப் பயன்படுத்தியதால், மடோனா நிச்சயம் நரகத்துக்குப் போவார் என்று, இந்த யூத பாதிரியார் கூறியிருக்கிறார்!

## அய்யோ பாவம்!



விளையாட்டுகளிலும் சில நேரம் விபத்தை சந்திக்க நேரிடும். இவர், அமெரிக்காவின் முன்னணி நீச்சல் வீராங்கனைகளில் ஒருவர். பெயர் செலசியா. வயது 17. நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டபோது, கரணம் அடித்தார். அப்போது, மேடை முகப்பில் மோதி விட்டார். அவரது முகத்தில் கடும் காயம் ஏற்பட்டது. இரத்தம் கொட்டியது.


இந்த விபத்துக்கு, பயிற்சியாளரின் கவனக் குறைவான பயிற்சிதான் காரணம் என செலசியாவின் பெற்றோர் குற்றம் சாட்டி உள்ளனர்.




தந்தை செல்வா



வன்னிய சிங்கம்



வீ. ஏ. கந்தையா



நாகநாதன்



இராஜவரோதயம்

# தமிழரசுக் கட்சியினரை ஹொரகொல்லவுக்கு அழைத்து பண்டா பேச்சு!

இரண்டு திசைகளிலிருந்தும் -அதாவது வடக்கில் இருந்தும் கிழக்கில் இருந்தும்- பாத யாத்திரை அணிகள் திருகோணமலையை அணுகிவந்தபோது கட்டுக்கடங்காத வகையில் உணர்ச்சிப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடியது.

நகரின் எல்லையில் மடத்தடி என்ற இடத்தில் இரு அணிகளும் ஏக காலத்தில் வந்து சங்கமமாகின. ஆண்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இவர்களை எதிர்கொண்டு வரவேற்றனர். மக்கள் திரண்டு நகரின் மத்தியில் இருந்த மைதானத்தை அடைந்தபோது அங்கே வெறும் மக்கள் தலைகளும் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளும் மட்டுமே நிறைந்து காணப்பட்டன.

மாநாடு நடைபெற்ற மூன்று தினங்களும் முழு திருகோணமலை நகரமும் நாட்டுப் பற்றுப் பாடல்களால் எதிரொலித்துக் கொண்டிருந்தது. தமிழ் தேசிய மணம் எங்கும் கமழ்ந்து கொண்டிருந்தது. திருகோண மலையில் இருந்த ஒவ்வொரு வீடும் ஒரு தொண்டரை அல்லது பேராளரை பராமரித்தது.

வீதி ஓரங்களில், சந்திகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் மொழிச்சட்டம் பற்றியும் குடியேற்றத் திட்டங்களால் திருகோணமலைக்கும் மற்றும் முழு கிழக்கு மாகாணத்துக்கும் ஏற்படப்போகும் ஆபத்து




பற்றியும் விவாதிக்கப்பட்டது.

மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் கடைசி நிகழ்வாக மூன்றாம் நாள் மாலை ஆறு மணிக்கு பொதுக்கூட்டம் ஆரம்பமாகவிருந்தது.

பிரதிப்பொலீஸ் மா அதிபர் சிட்னி டி சொய்ஸா எங்களுடன் தொடர்பு கொண்டு கூட்டம் 8 மணியுடன் முடிவடைய வேண்டும். அதற்கு மேல் தொடர்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று அறிவித்திருந்தார். கூட்டம் நடத்த ஆக இரண்டு மணிநேரம் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

நானும் நடராசாவும் தனிமையில் கூடி பட்டியலில் இருந்த பேச்சாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஆலோசித்தோம். இதில் உறுதியாக இருக்கவேண்டிய கட்டாயமும் இருந்தது. 6மணிக்கு முன்பே விசேட பொலிஸ் படையணிகள் கேடயங்கள், பொல்லுகளுடன் வந்து சேர்ந்தன. கூட்ட மேடைக்குப் பின்னால் அவர்கள் அணிவகுத்து நின்றனர். பிரதிப் பொலிஸ் மா அதிபர் நேரடியாகவே பிரசன்னமாய் இருந்தார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்டிருந்த தலைவரான கோப்பாய் எம்.பி, சி.வன்னிய சிங்கம் தலைமையில், வழமையான கட்சி தேசிய கீத இசைத்தலுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று.



பண்டாரநாயக்கா

## சமஷ்டிக்குக் குறைவான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தாருங்கள் என்றார்

என்.ஆர்.இராஜவரோதயத்தின் வரவேற்புரையை அடுத்து, தலைவர் மாநாட்டினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தீர்மானத்தை அறிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு- கிழக்கிற்கு சுயாட்சி அந்தஸ்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும் ஒரு வருட காலத்துக்குள் அரசு இதைச் செய்யத்தவறுமானால் அவ்வாறான அதிகாரக்கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு தமிழரசுக் கட்சி அமைதியான -சாத்வீகமுறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குமென்றும் அத்தீர்மானம் அறிவித்தது.

தலைவருக்குப் பிறகு பொத்துவில் எம்.பி.யான எம்.முஸ்தபா 5நிமிடங்கள் மட்டும் உரை நிகழ்த்தினார். இறுதியில் நன்றி தெரிவிப்புடன் சரியாக இரவு எட்டு மணிக்கு கூட்டம்முடிவுற்றது.

கூட்டம் முடிவுற்றதை அறிவித்து மக்களை அமைதியாகவும் ஒழுங்கான முறையிலும் வீடுகளுக்குத் திரும்பும்படி தலைவர் கேட்டுக் கொண்டார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் எங்களிடம் வந்து, ஒத்துழைத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

திருகோணமலைக்கான பாதயாத்திரையும் மாநாடும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த தேசிய எழுச்சியானது தளர்ந்து போகாமல் பல மாதங்கள் வரை நீடித்திருந்தது. அரசுக்கு கொடுக்கப்பட்டிருந்த காலக்கொடு முடிவடையும் காலம் அண்மித்துக் கொண்டிருந்து.

தமிழரசுக் கட்சி எப்பொழுதுமே தனது வாக்கைக்காப்பாற்றும் என்று மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை வளர்ந்திருந்ததால் காலக்கெடு முடிவடைந்ததும் நிச்சயமாக அவர்கள் நடவடிக்கையில் இறங்குவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

இந்த நிலைமை கொழும்பிலிருந்த அதிகாரத் துறையினருக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது.

### பிரதமர் அழைப்பு

காலக்கொடு முடிவடைவதற்கு முன்பதாக பண்டாவின் அரசு நடவடிக்கையில் இறங்கியது. பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கென தமிழரசுக் கட்சியை பிரதமர் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்தார். நிதியமைச்சர் ஸ்ரான்லி டி.சொய்ஸாவும் கொழும்பில் பிரபலமாக விளங்கிய வழக்குரைஞர் (கியு.ஸி) ரி.நவரட்ணராஜாவும் எடுத்துக் கொண்ட கூட்டு முயற்சியால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நவரட்ணராஜா எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் நெருங்கிப் பழகிய ஒரு நண்பர்.

பிரதமர் பண்டாரநாயக்காவின் பூர்விகக் கிராமிய ஹொரகொல்ல வாசஸ்தலத்தில் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் குழு அவரைச் சந்தித்தது. குழுவில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், சி.வன்னியசிங்கம், வி.ஏ.கந்தையா, என்.ஆர். இராஜவரோதயம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் ஆகியவர்களுடன் நானும் கலந்து கொண்டேன். பேச்சுக்கு ஏற்பாடு செய்த நண்பர்களான ஸ்ரான்லி டி சொய்ஸா, மற்றும் பி.நவரட்ணராஜா ஆகியோரும் பேச்சில் கலந்து கொண்டார்கள்.

**தமிழில் 'பேசா'**

பேச்சுக்கள் மிக நட்பு சூழ்நிலையில் ஆரம்பமாகின.

சிங்களம் மட்டும் சட்டமானது வெறும் அரசியல் நாடகம் என்ற கருத்து தொனிக்கும்படியாக அதன் பாரதூரத்தன்மையை அடக்கி வாசித்துக்கொண்டு பேச்சுக்களைத் தொடர்ந்தார் பிரதமர். சிங்களம் மட்டும் சட்டம் பற்றிக் கலவரப்பட வேண்டாம் என்றும் நிர்வாக ரீதியிலும் நீதிமன்றங்களிலும் ஆங்கிலத்தின் இடத்தை அது பிடிக்க பல ஆண்டுகள் எடுக்கும் என்றும் ஆங்கிலம் தொடரவேண்டி இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு அவர் கூறியபோது மனதாரவே அதை செய்திருக்கலாம். அவரும் கூட அப்போது சிங்களத்தை வாசிக்க, தெளிவாக பேச எழுத முடியாதவராய் இருந்தார். இதை அவரே உச்ச நீதிமன்றத்தில் தேஜா குணவர்த்தன வழக்கில் சாட்சியமளிக்கையில் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கடமை இருந்தது. இந்தப் பிரச்சினையை பிரதமரின் தரப்பிலிருந்து பார்ப்பது அல்ல தமிழ் பேசும் மக்களின் நிலைமையிலிருந்து அதனைப் பார்க்கவேண்டி இருந்தது.

சிங்களம் மட்டும் சட்டம் ஏற்கனவே சட்டப் புத்தகத்தில் இடம்பெற்று விட்டது. இனி சதா காலமும் அப்படியே இருக்கத்தான் போகிறது. எனவே அச்சட்டத்தை மிக விரிவாக மிக ஆழமாக புரையோடிப்போன நோயின் அறிகுறியாக தமிழரசுக் கட்சி கருதியது. அதற்கு சரியான மாற்று மருந்து தமிழ் சுயாட்சியாக மட்டுமே இருக்க முடியும் என்று நம்பியது.

ஹொரகொல்ல சந்திப்பின் போது சமஷ்டி பற்றியும் பேச்சுத் திரும்பியது. பண்டாரநாயக்கா முன்பு எழுதியிருந்த கட்டுரை பற்றியும் அதில் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பே மிகப் பொருத்தமானதாகவிருக்கும் என்று அவர் தெரிவித்திருந்ததையும் நான் நினைவூட்டினேன். சமஷ்டி பற்றிய எமது யோசினை அவருடைய

> நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)
>
> 
>
> தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

கட்டுரையிலிருந்தே உருவானது என்றும் கூறினேன்.

அது தான் தமது கருத்தாக முன்பு இருந்ததென்றும் இப்பொழுது சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான ஆணை தமக்கு மக்களிடமிருந்து கிடைத்திருக்கவில்லை என்றும் பண்டாரநாயக்க பதிலளித்தார்.

சமஷ்டிக்கு சற்று குறைவான- தமிழர் அச்சத்தைப் போக்கவல்ல- ஒரு மாற்றுத் திட்டத்தைப் பற்றியும் நாம் ஆராய்ந்தால் என்னவென்று பண்டாரநாயக்க கேட்டார். அதைப்பற்றித்தான் தாம் யோசித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

வன்னியசிங்கமும் டாக்டர் நாகநாதனும் நிர்வாகப் பகிர்வு பற்றிய சொக்ஸி அறிக்கை தொடர்பாகவும் டி.எஸ்.சேனநாயக்க அரசில் பண்டாரநாயக்க உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது உருவாக்கிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த அவரது பிராந்திய சபைகள் பற்றிய வரைவுத்திட்டம் பற்றியும் பண்டாரநாயக்காவின் கவனத்தை திருப்பினார்கள். அந்த இரு ஆவணங்களிலும் சிறப்பான சில கருத்துக்கள் இருப்பதாக கூறிய பண்டாரநாயக்கா அதிகாரப் பரவல் தொடர்பாக ஒரு திட்டத்தை, கட்சி அவசியமெனக்கருதும் அம்சங்களுடன், ஆனால் சமஷ்டிக்கு குறைவாக வரைந்து சமர்ப்பிக்கும் படியும் அதனை தாம் ஆராய்வதாகவும் கூறினார். மேற்கொண்டு ஆலோசனைகள் நடந்த பின்னர் எம்மைச் சந்திப்பதாகக் கூறி அனுப்பிவைத்தார். தமிழரசுக் கட்சியின் அபிலாஷைகளை எந்த அளவுக்கு பிரதமரால் தீர்த்து வைக்க முடியும் என்று சிந்தித்தபடி நாம் ஹொரகொல்ல வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறினோம்.

(தொடரும்)

# பெற்றோர் வழங்கும் தண்டனையும் குழந்தைகளின் பழிவாங்கும் உணர்வும்

**கே: எனது மகன் வயது எட்டு. அவனுடைய குழப்படியைப் பொறுக்க முடியாமல் 'பளார்' என்று அறைந்து விட்டேன். இதனால் காதுக்கு மேலாக உடனே ஒரு வீக்கம் ஏற்பட்டது. அடுத்த இரு நாட்களில் வீக்கம் வற்றி விட்டது. ஆனால் அடிக்கடி தலை வலிக்கிறது என்கிறான். படிக்க முடியாமல் இருக்கின்றது என்கிறான். நரம்பு சிகிச்சை நிபுணர், குழந்தை நோய் நிபுணர் என்று விசேட வைத்திய நிபுணர்கள் சகலரிடமும் காட்டிவிட்டேன். எதுவித நோயும் இல்லை என்கின்றார்கள். எனக்கு பயமாக இருக்கின்றது. எனது ஒரே குழந்தை இவன் மட்டும் தான். எனவே என் குறை தீர ஆலோசனை தரவும்.**

ப: சகல வைத்திய நிபுணர்களிடமும் ஆலோசனை பெற்றதாக கூறுகின்றீர்கள். அவர்கள் தேவையான இரத்தப் பரிசோதனை மற்றும் முக்கியமான- மூளை அலைகளை பரிசோதிக்கும்-ELECTRO EN-CEPHALOGRAM எனப்படும்-EEG, மற்றும் CT SCAN என்பவை யாவும் செய்யப்பட்டு அதன் பின்னர்தான் எதுவித நோயும் இல்லை என்று கூறியிருப்பார்கள் என்று நம்புகின்றேன். அப்படி கூறியிருந்தால் பயப்பட வேண்டாம். இந்த முழுமையான பரிசோதனைகள் நடத்தப்படாவிட்டால்-



முதலில் அவற்றை செய்யவேண்டும். இந்தப் பரிசோதனைகளில் CT SCAN எனப்படும் மூளை ஸ்கேன் செய்வதற்கு கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகளில் தான் வசதியுண்டு. எனவே இத்தனை பரிசோதனைகளின் பின்பும் தலைவலியின் காரணம் காணப்படாவிடில்- இந்த தலைவலியை PSYCHOSOMATIC எனப்படும் மனத்தோடு சம்பந்தப்பட்ட உடலியல் மாற்றமாக கருதுவதற்கு இடமுண்டு. இப்படி நான் கூறியதும் உங்கள் குழந்தைக்கு ஏதோ மனநோய் என்று பயந்து விடாதீர்கள். குழந்தைகள் மனோவியல் நிபுணர்கள்(CHILD PSYCHOLOGIST) தங்களது ஆய்வுகளில் குழந்தைகளிடம் பழிவாங்கும் உணர்வு - உருவாகும் வாய்ப்புகள் அதிகம் என்று சொல்கின்றார்கள். அடம் பிடிப்பது, புரளிபண்ணுவது, தனக்கு விருப்பமான காரியத்தை நிறைவேற்ற, உணவு உண்பதை, கற்றலை, முகவாட்டத்தை ஆயுதங்களாக பயன்படுத்துவது- இவற்றைக் கொண்டு BLACK MAIL பண்ணுவது போல் காரியமாற்றுவது- பெற்றோர் எதிர்பார்க்கும் விஷயங்களை செய்வதற்கு இனிப்புப் பண்டங்களை, சில்லறைக் காசுகளை எதிர்பார்ப்பது- போன்ற குண நலங்கள் எல்லாம் இந்த பழிவாங்கல் நடவடிக்கையின் சில பிரதிபலிப்புகள் என்று மனோவியல் நிபுணர்கள் எண்ணுகின்றார்கள்.

தனக்கு நோய் வரும்போது பெற்றோர் பதை பதைப்புடன் இருப்பதை புரிந்து கொண்டு தனது நோய்க் குணங்களைக் காட்டி தனது காரியங்களை சாதித்து விடும் குணம் உள்ளவர்கள் குழந்தைகள். எனவே நீங்கள் கொடுத்த தண்டனையை ஏற்றுக் கொள்ள மறுத்த உங்கள் மகனின் மனது சிலவேளை, இப்படி தலைவலியை சுட்டிக்காட்டி, நீங்கள் கொடுத்த தண்டனையால்தான் எனக்கு தலைவலி வந்தது என்ற குற்ற உணர்வை உங்கள் மேல் சுமத்துவதில் வெற்றி கண்டிருக்கின்றது.

எனவே ச்கலவைத்தியர்களும் நன்றாக பரிசோதித்து தலைவலிக்கு எதுவித நோயும் காரணமில்லை என்று கூறியிருந்தால் பயப்படாதீர்கள். பொய்யாக நோய் சொல்வதாக மகனைக் கண்டிக்கவேண்டாம். அவரின் நோயைப் பற்றி கவனம் எடுக்காதீர்கள்.

அவர் அடிக்கடி நோய் சொன்னாலும்-'வளர வளர ' சரியாகிப் போய்விடும் என்று தேற்றுங்கள். இன்னொரு முக்கிய விடயம். பிள்ளைகளைத் தண்டிப்பது பிழையில்லை. ஆனால் கோபத்தில், ஆத்திரத்தோடு தண்டனை கொடுக்காதீர்கள். ஆத்திரத்தோடு, கோபத்தில் கொடுபடும் தண்டனை- குற்றத்தின் தண்டனையாக இருக்க வேண்டுமே ஒழிய கோபத்தின் வெளிப்பாடாக இருக்கக் கூடாது.

உங்கள் கோபம் அடங்கிய பின்- மகனைக் கூப்பிட்டு அவன் செய்த குற்றத்தைக் கூறி-'இப்படி இனியும் செய்யாதே' அப்படி இனி நடந்தால் கட்டாயம் தண்டனை என்று காத்திரமாக சொல்லிவிடுங்கள். குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை.

**கே: ஆண் வயது 50. வாயினுள் பற்களால் கடிபட்டதால் ஒரு கட்டியுள்ளது. இதிலிருந்து இப்பொழுது அடிக்கடி இரத்தம் கசிகிறது. இது புற்றுநோயா?**

ப: வாயினுள் ஏற்படும் சகல கட்டிகளும் புற்று நோய்க் கட்டிகள் அல்ல. எனினும் நீண்ட காலமாக கட்டிகள் இருந்தாலும், அல்லது கட்டிகளில் மாற்றம், இரத்தக் கசிவு, வலி ஏற்பட்டாலும் BIOPSY என்கின்ற கட்டியின் ஒரு சிறு துண்டை வெட்டி எடுத்து அது சோதிக்கப் படவேண்டும்.

வெற்றிலை பாக்கை வாயினுள் வைத்து குதப்புவோர், புகையிலையை கொடுப்புக்குள் வைத்து உஞ்சுபவர்கள் என்பவர்களுக்கு வாயினுள் கட்டி ஏற்பட்டால்- புற்றுநோய் கட்டிகளா, இல்லையா என்பதை BIOPSY முறைமூலம் சோதித்துக் கண்டறிய வேண்டும்.

ஆரம்பகாலத்தில் வாய்ப்புற்றுகள் இலகுவில் குணப்படுத்தக் கூடியவை. மற்றும்- மேல்தாடை பல்வரிசை கீழ்தாடை பல்வரிசையுடன்- ஒருங்கிணைந்து (NON ALIGNMENT) இருக்காவிடினும்- வாய்க்குள் கட்டிகள் புண்கள் ஏற்படும். இப்புண்கள் நாளடைவில் புற்றுக் கட்டிகளாக மாறலாம்.

**கே: பெண். வயது 46. முதுகில் ஒரு கட்டி இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் சத்திரசிகிச்சை செய்து சரியாகிவிட்டது. சத்திரசிகிச்சை செய்த இடத்தில் காலம் செல்லச் செல்ல ஒரு கட்டி வந்தது. அது வளர்ந்து இப்போது முன்னைய அளவில் உள்ளது. இதனை அகற்றவேண்டும், முன்னர் செய்த போது சரியாகச் செய்யப்படவில்லை. அதுதான் திரும்பவும் வந்துள்ளது என்கின்றார் வைத்திய நிபுணர். எனக்கு பயமாக இருக்கிறது. இது புற்றுநோய்க்**



**கட்டியாக இருக்குமா? பதில் தரவும்.**

ப: நீங்கள் தந்த தகவல் உங்கள் வைத்திய நிபுணர் தந்த விளக்கம் சகல

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

தையும் வைத்துப் பார்க்கும்போது- இது புற்று நோய்க் கட்டியல்ல, இது- சருமத்தில் உள்ள எண்ணெய் சுரக்கும்- SEBACEOUS GLAND என்ற சுரப்பியில் தொற்று ஏற்படுவதால் உண்டாகும் கட்டி. இது சரியான முறையில் அகற்றப்பட வேண்டும். இந்த சுரப்பியின் பையோடு(CYST SAC)- தொற்று அகற்றப் படாவிடில்- திரும்பவும் இந்த பையினுள் சுரப்புகள் சேர்ந்து- பை நிறைந்து கட்டி வளரும். என்றாலும் இந்த முறை கட்டி அகற்றப்படும் பொழுது உங்கள் புற்றுநோய் பற்றிய சந்தேகத்தை போக்க, கட்டியை நோயியல் நிபுணர் (PATHOLOGIST) ஒருவரின் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கவும்.

**கே: பெண். வயது 20. எனக்கு இரவில் காய்ச்சல் வருகிறது. கடந்த ஒரு மாதமாக இப்படி இருக்கிறது. பகலில் காய்ச்சல் இல்லை. இரவில் காய்ச்சலின் பின்னர் குளித்து வந்தது போல் வியர்க்கிறது. வரவர உடல் மெலிகிறது. இருமல் சாதாரணமாக இருக்கின்றது. பரிகாரம் கூறவும்.**

ப: இரவு நேரத்தில் வரும் காய்ச்சல் அனேகமாக- TUBER CULOSIS என்ற காசநோயுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். அத்துடன் அதிகளவான வியர்வை, நிறை குறைவு என்பன காசநோய் வேளைகளில் கூட ஏற்படும். எனவே உடனே நீங்கள் ஒரு வைத்திய ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது.

நெஞ்சுப்பகுதியை எக்ஸ்ரே படம் எடுத்துப் பார்க்கவேண்டும். இரத்தப் பரிசோதனையில் முக்கியமாக பரிசோதனை அவசியம். தொடர்ந்து மூன்று நாட்களுக்கு எச்சிலில் காசநோய்க் கிருமிகள் இருக்கின்றனவா என்பதை பரிசோதிக்க வேண்டும்.

எனவே காலம் தாழ்த்தாது ஆலோசனை பெறுங்கள். காசநோய் என்றவுடன் உலகமே இருண்டு விட்டதாக எண்ணி துயரம் கொள்ளாதீர்கள். காசநோய் திரும்பவும் உலகில் வீரியமாகப் பரவிக் கொண்டு வந்தாலும், வெற்றிகரமாகச் சிகிச்சை செய்து வெற்றிகரமாக குணம் பெற வாய்ப்பு உண்டு.

# இரத்த சோகை

சிறிது தூரம் நடந்தாலே மூச்சு வாங்குகிறதா? விரல் நகம் வெளிறித் தெரிவது, வழக்கத்தைவிட அதிக இதயத் துடிப்பு போன்ற அறிகுறிகள் தெரிந்தால் அவர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார் என புரிந்து கொள்ளவேண்டும்.

இரத்த சோகையால் உயிருக்கு ஆபத்து கிடையாது. இருந்தாலும், உடல் நலம் கெட்டுப்போகும். நடைபிணமாக வாழ நேரிடும்.

**இரும்புச் சத்துக் குறைபாடு**

இரத்தத்தில் சிவப்பணு வெள்ளை அணுக்கள் உள்ளன. இதன் அளவு இரத்தத்தில் குறையும் போது இரத்த சோகை உண்டாகும். இது இரும்புச் சத்து குறைவால் உண்டாகும் நோய். இரத்த சோகை இரண்டு வகைப்படும். ஒன்று, நுண்ணணுச் சோகை. மற்றது, பேரணுச் சோகை.

இரத்தத்தில் சிவப்பணு பெரிதாக இருந்து அதன் காரணமாக இரத்த சோகை உண்டாவது, பேரணுச் சோகை.

சிவப்பணு சிறிதாக இருந்து அதனால் இரத்த சோகை நோய் வந்தால், அதற்கு நுண்ணணுச் சோகை என்று பெயர்.

**காச நோயாளி**

காச நோயாளிகளை இரத்த சோகை எளிதில் தாக்கும். மூல நோய் இருப்பவர்களுக்கும் இரத்தசோகை உண்டாகும்.

பெரிய விபத்துகளில் காயம் உண்டாகி, அதனால் இரத்த இழப்பு அதிகப்பட்டிருந்தால் இரத்த சோகை உண்டாகும்.

**பாக்கு தின்னாதீர்**

அடிக்கடி வெறும்பாக்கு தின்பவர்களுக்கு இந்நோய் உண்டாகும்.

குழந்தைகளுக்கு, குறிப்பாக 3 முதல் 4 மாத குழந்தைகளுக்கு, தாய்ப்பாலுடன் வேறு திரவ உணவுகளை கொடுக்க வேண்டும். இல்லை என்றால், இரும்புச் சத்து குறைந்து, குழந்தைகளை இரத்த சோகை தாக்கும்.

**பெண்கள்**

பெண்களையும் இரத்த சோகை அதிக அளவு தாக்கக்கூடும்.

மாதவிலக்கின் போது அதிக இரத்தப் போக்கு ஏற்படுவதால், பெண்களுக்கு இரத்த சோகை வரும்.

அடிக்கடி கருச்சிதைவு, தொடர்ச்சியாக குழந்தை பெறுதல் ஆகியவற்றாலும் பெண்களுக்கு இரத்த சோகை வர வாய்ப்புண்டு.

மலத்தில் பெருகும் கொக்கிப்புழுக்களாலும் இரத்த சோகை உண்டாகிறது. மலேரியாக் காய்ச்சல், வயிற்றுப் போக்கு ஆகியவையும் இரத்த சோகையை உண்டாக்கக்கூடியவை.

**அறிகுறிகள்**

இரத்த சோகை இருப்பவரின் முகமும், காலும் வீங்கித் தெரியும். சிலருக்கு முகம் வெளிறியும், தோல் மெலிந்தும் காணப்படும். கண் இமையின் உட்பகுதி வெளிறிக் காணப்படும். நாக்கு மிருதுவாகவும்- பளபளப்பாகவும் இருக்கும்.

இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்- கர்ப்பிணிப் பெண்கள் மணல், சாம்பல் தின்ன விரும்புவார்கள்.

**தடுப்பு எப்படி?**

இரத்த சோகையைத்தடுக்க, கீரைகள், பயறு, பருப்பு, மொச்சை ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்ப்பது நல்லது. ஏனெனில் இவற்றில் இரும்புச்சத்து உள்ளது.

திராட்சை, பேரீச்சம் பழம், கடல் பாசி சாப்பிடலாம்.

இறைச்சி, மீன், கோழி, முட்டை, ஈரல் சாப்பிடுவதும் இரத்த சோகை வராமல் தடுக்கும். கோதுமை, கேழ்வரகு, கம்பு மாவு, அவல் ஆகியவற்றையும் சாப்பிடலாம்.

இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இரும்புச் சத்து மாத்திரைகளை சாப்பிட்டும் நிவாரணம் பெறலாம். கர்ப்பிணிகளுக்கு இரும்புச் சத்து மாத்திரைகளை கொடுப்பதும் இரத்த சோகை தாக்காமல் இருப்பதற்குத்தான்.

இரத்த சோகையுள்ள பெண்கள் குறைப்பிரசவத்தில் குழந்தைகள் பெறுவர். எனவே இரும்புச் சத்து மாத்திரைகளைச் சாப்பிட்டு குறைப்பிரசவத்தை தவிர்க்கலாம்.

ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையே 3 ஆண்டுகள் இடைவெளி இருப்பது தாயின் உடல் நலத்துக்கு நல்லது.

# டீன் ஏஜ் பெண்களின் தாய்மாரே...

டீன் ஏஜ் பெண்கள் வீட்டில் இருந்தாலே, பல தாய்மார்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பதைப் போல் தான் உணர்கிறார்கள். அந்த பயத்திற்கு காரணம் இல்லாமலும் இல்லை.

டீன் ஏஜ் பெண்கள் பதின்மூன்று



வயதிற்கும், பத்தொன்பது வயதிற்கும் இடைப்பட்டவர்கள். இந்த வயதில் தான் பெண்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பல மாற்றங்களுக்கு உட்படுகின்றனர்.

பெண்கள் வாழ்வில் ஏற்படக்கூடிய முக்கிய நிகழ்வான பூப்பெய்துதல் இந்த கால கட்டத்தில் தான் ஏற்படுகிறது. இந்த பருவத்தில் தான் ஒரு பெண் தாயாவதற்கு இயற்கையால் தயார் செய்யப்படுகிறாள். உடலில் சுரக்கும் ஹோர்மோன்கள் அவர்களது உடலில் மட்டுமல்ல, மனதிலும் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இயல்பான கூச்சத்துக்கு உட்படும் பெண்கள் அச்சம், வெறுப்பு, என பல மனமாற்றங்களுக்கு உட்படுகின்றனர். இந்த வயதில் தான் கானலை காதலென்று எண்ணி பல பெண்கள் ஏமாறுகின்றனர். படிப்பை விட்டுவிட்டு காதலை நம்பி ஏமாந்து வாழ்வையே தொலைத்து விடுகின்றனர். வீட்டிலும், வெளியிலும் அவப்பெயரை சுமக்கின்றனர்.

சில பெண்கள் மட்டுமே உண்மையை உணர்ந்து காதலில் இருந்து விரைவில் மீண்டு விடுகின்றனர். ஆனாலும் அவப்பெயர் மட்டும் விரைவில் அழிந்து விடுவதில்லை.

இந்த டீன் ஏஜ் பருவம், பெண்களை ஒரு போதையில் தான் வைத்திருக்கிறது. சரி பிழை தெரியாத இந்த வயதில் இவர்கள் எளிதில் ஏமாந்து விடுவார்கள். காதல், போதை வஸ்து, கும்மாளம், நாகரிக மோகம் என பலதும் இந்த டீன் ஏஜ் பெண்களை இலகுவில் தொற்றிக் கொள்கின்றன. தவறான பாதையில் அவர்களை செல்ல வைக்கின்றன. அவர்களது வாழ்வை கேள்விக் குறியாக்குகின்றன.

எனவே தான் தாய்மாரே! உங்கள் பிள்ளைகளின் இந்தப் பருவம் உங்கள் கையில் ஒப்படைக்கப் பட்டுவிடுகிறது.

உங்கள் மகளுக்கு அதிக அன்பை வழங்குங்கள். போதுமான அளவு சுதந்திரம் கொடுங்கள். அவளது ஆசைகளை, தேவைகளை உங்களோடு பரிமாற விடுங்கள். மொத்தத்தில் அவளது தோழியாகவே மாறுங்கள்.

அடித்து திருத்தும் பருவம் இதுவல்ல. எனவே அன்பால் திருத்துங்கள். இந்த பருவத்தில் எழக் கூடிய இயல்பான உணர்ச்சிகளைப் பற்றியும், அவற்றின் நன்மை தீமை பற்றியும் உங்கள் மகளிடம் வெளிப்படையாகப் பேசுங்கள்.

அவளது ஆடைகளில் கவனம் செலுத்துங்கள். கண்ணைக் குத்துமளவு ஆடைகளை அணிய அனுமதிக்காதீர்கள். நீங்களே ரசிகையாக இருந்து நாசுக்காக ஆடைகளைப் பற்றி விமர்சியுங்கள்.

அதிகளவு நண்பர்களை கொண்டிருந்தால் நீங்கள் அவதானமாக இருங்கள். நீங்ளே நண்பியாக இருந்தால் உங்கள் பெண் வேறு தோழிகளை நாட மாட்டாள் என்பதை மறந்து விடாதீர்கள்.

அவளுக்குத் தெரியாமல் அவளது சின்னச் சின்ன மாற்றங்களை கண் காணியுங்கள். அவளது தவறுகளை முளையிலேயே கிள்ளி எறிவது போல் அந்த தவறை நீங்களும் மறந்து விடுங்கள். அதை சொல்லிச் சொல்லியே அந்த தவறை அவள் மறுபடி செய்யும் நிலையை உருவாக்கி விடாதீர்கள்.

தாய்மாரே உங்களது பெண்ணின் டீன் ஏஜ் பருவம் அவள் தன் வாழ்வில் கடக்கவேண்டிய மிக சிக்கலான ஒரு பாதை. எனவே, இந்தப் பருவத்தில் அவளுக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருந்து சிக்கலை விடுவித்து வெளியேற உதவுங்கள். மாறாக உங்கள் பெண் அந்த சிக்கலுக்குள் சிக்கிக் கொள்ள நீங்களே காரணமாக ஒரு போதும் இருந்து விடாதீர்கள்.

# தூங்கும் வரம் வேண்டும்



**சரியாக தூக்கம் வராமல் தவிப்பவர்கள் தூக்கத்தை வலைவீசிப் பிடிக்க சில எளிய வழிகள் இருக்கின்றன.**

- தூங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் வெதுவெதுப்பான நீரில் குளித்தால் சீக்கிரம் தூக்கம் வந்து விடும்.
- புத்தகங்களைப் படித்தாலே போதும் தூக்கம் ஈஸியாக கண்களைத் தழுவும்.
- இரவில் மட்டன் சூப், சிக்கன் சூப் என ஏதாவது மாமிச சூப் சாப்பிட்டாலும் தூக்கம் வரும்.
- தயிர் சாப்பிட்டாலும் தூக்கம் வரும். இரவில் கண்டிப்பாக தயிர் சாப்பிடக் கூடாது என ஆயுள்வேதம் சொல்கிறது. ஆனாலும் தூக்கத்தை வரவழைக்கும் சிறந்த மருந்து தயிர் தான்.
- எனவே, எப்போதாவது தூக்கம் வராத இரவுகளில் கொஞ்சம் தயிரைச் சாப்பிட்டால் பரவாயில்லை.

# காது அழகுக்கு...



பெண்களின் அழகை மிளிர வைப்பதில் காதுகளுக்கும் பங்குண்டு. ஆனால் நம்மில் பலர் முகத்தை பராமரிக்கும் அளவுக்கு காதை கண்டு கொள்வதே இல்லை. இது மிகவும் தவறு. காதுகள் இரண்டும் உங்கள் முக அழகுக்கும் வேட்டு வைத்து விடும்.

**ஆகவே, பெண்மணிகளே காதை இப்படி மிளிர வையுங்கள்.**

- ☺ காது மடல்கள் மீது பேபிலோஷனைத் தடவி 15 நிமிடம் கழித்து காதுகளை அழுத்தமாக துடைக்கவும். இப்படி தொடர்ந்து செய்தால் நாளடைவில் காதின் கறுப்பு வளையம் மாயமாகி விடும்.
- ☺ சிறிது சூடான நல்லெண்ணெயில் கழுத்துடன் சேர்த்து காதையும் மசாஜ் செய்தால் நல்லது.

# வாரம் ஒரு கேள்வி-பதில்

எனக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள். நான் பதினோராம் வகுப்பில் படிக்கிறேன். எனது தந்தை குடித்து விட்டு வந்து அம்மாவுடன் சண்டை பிடிக்கிறார். என்னால் படிப்பில் கூட கவனம் செலுத்த முடியவில்லை. ஆலோசனை தாருங்கள்.

க. கௌரி, புசல்லாவ.

உங்கள் நிலையை நினைத்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது. படித்து முன்னேற வேண்டிய வயதில் இவ்வாறான நிகழ்வுகள் உங்கள் மனதை புண்படுத்துவதை நினைத்தால் இவ்வாறான தந்தையர் மீது கோபமும் வருகிறது. ஆனாலும், என்ன செய்வது? தாயையும், தந்தையையும் நாம் தெரிவு செய்து கொள்ள முடியாது. அது போல நாம் வாழவேண்டிய வாழ்வையும் நாம் தெரிவு செய்ய முடியாது.

எனவே, நீங்கள் எல்லாக் கவலையையும் ஒதுக்கிவிட்டு நன்றாகப் படிக்க முயலுங்கள். நல்லதோரு தொழிலைப் பெற்று நீங்கள் உயரும் போது உங்கள் தந்தையின் கை தானாக ஓய்ந்து விடும்.

தம்பி, தங்கையை படிப்பிக்க, அவர்களுக்கு வழிகாட்ட என உங்களுக்கு நிறைய பொறுப்புகள் இருக்கின்றன. இது நாள் வரை கஷ்டத்தில் வாழ்ந்த உங்கள் தாய்க்கு மன ஆறுதல் தரவேண்டிய பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கையில் முயலுங்கள்.

முடிந்தால் உங்கள் தந்தைக்கு எடுத்துக் கூறி திருத்தப்பாருங்கள். நல்ல விதமாக சொல்லுங்கள். ஒரு வேளை அவர் குடிப் பழக்கத்தில் இருந்து மீள விரும்பினால் அவரது அனுமதியுடன் ஒரு நல்ல மன நல வைத்தியரின் உதவியை நாடி ஆலோசனையை பெற்றுக் கொடுங்கள்.

எல்லாக் கவலைகளுக்கும் காலம் தான் சிறந்த மருந்து. சிறுவயதில் இவைகளை அனுபவிக்கும் நீங்கள், எதிர்காலத்தில் வளமுடன் வாழக்கூடிய வழிவகைகளை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள். ஒரு உத்வேகத்தோடு படிக்கத் தொடங்குங்கள். இப்போதைக்கு கல்விதான் உங்களுக்குக் கைகொடுக்கும்.

அயராத முயற்சியுடன் வாழ்வில் நீங்கள் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

# சமைக்க சுவைக்க

## பட்டர் சொக்லேட்

தேவையானவை

| | |
|---|---|
| மில்க் மெய்ட் | 1 டின் |
| கோதுமை மா | 1 கப் |
| வெண்ணெய் | முக்கால் கப் |
| சீனி | நான்றே முக்கால் கப் |
| சொக்கோ பவுடர் | 2 டேபிள் ஸ்பூன் |

செய்முறை

சீனியை சிறிதளவு தண்ணீர் ஊற்றி கரைய விடவும். கரைந்ததும் அதனுடன் வெண்ணெயை சேர்த்து இலேசாக வெண்ணெய் உருகியதும் அடுப்பில் இருந்து இறக்கவும். அதில் மில்க் மெய்ட், கோதுமை மா, கொக்கோ பவுடர் சேர்த்து கட்டியாகாமல் கலக்கவும். பிறகு அடுப்பில் வைத்து கிளறவும். பின் நெய் தடவிய தட்டில் கொட்டி சற்று ஆறியதும் விரும்பிய வடிவங்களில் வெட்டிக் கொள்ளவும்.

# பெண்

## பிள்ளைகள் சிறக்க...

- ✱ தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். எனவே, சிறுவயது முதலே நல்ல பழக்க வழக்கங்களை குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும். அதில் தாயின் பங்கு மிகவும் இன்றியமையாதது.
- ✱ சிறு வயதிலேயே குடும்பப் பொருளாதார நிலையை குழந்தைகளுக்கு உணர்த்துங்கள். இதனால் காண்பதை எல்லாம் கேட்டு அடம் பிடிக்கும் நிலையைத் தவிர்க்கலாம்.
- ✱ விளையாட்டு, கவிதைத்துறை, கணினி எதில் ஆர்வம் இருந்தாலும் சரி 8 வயது முதலே அதற்குரிய பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்புங்கள்.



- ✱ சிறுவயதிலேயே அன்பு, மரியாதையையும், முதியோரை மதிக்கும் பண்பையும் வளர்த்து விடுங்கள்.
- ✱ கடைகளில் விற்கும் நொறுக்குத் தீனிகளை சாப்பிட பழக்க வேண்டாம்.
- ✱ குழந்தைகள் கூறும் சின்னச் சின்ன செய்திகளை ஆர்வமாய்கேளுங்கள். இதனால் வருங்காலத்தில் எல்லா சிக்கல்களையும் தாயுடன் பகிர்ந்து கொள்வர்.
- ✱ தவறு செய்தால் தண்டிக்கும் அதே வேளை, பிறர் மீதான கோபத்தை குழந்தைகளிடம் காட்ட வேண்டாம்.
- ✱ வெற்றியும் தோல்வியும் சாதாரணமானது என்பதை சிறு வயதிலேயே புரிய வையுங்கள்.
- ✱ குழந்தைகள் முன்னிலையில் பெற்றோர் சண்டை பிடிக்க கூடாது.
- ✱ தான் விரும்பும் துறையை குழந்தை தேர்ந்தெடுக்க அனுமதி வழங்குங்கள்.
- ✱ ஒரு குழந்தையின் முதல் தோழி அம்மாதான். எனவே நல்ல சூழலில் உங்கள் குழந்தை வளர்ந்தால் உடல், மன நலத்துடன் ஆளுமை மிக்கவர்களாக அவர்கள் உருவாவார்கள்.

ப. விமலபிரியா,
ஏரன்ஸ் லேன், மட்டக்களப்பு.

## கேள்வி-பதில்

அன்புக்குரிய சகோதரிகளே!


உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப்பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி-**

**பெண்**
**சுடர் ஒளி வார இதழ்**
**155, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

# மனிதனுக்குள்ளே ஒரு மிருகம்



சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஸிஸேர் லாம்ரோஸோ என்னும் இத்தாலிய குற்றவியல் நிபுணர், பலவிதமான ஆராய்ச்சிகளுக்குப் பிறகு ஒரு புத்தகம் எழுதினார். 1876இல் வெளிவந்த 'வன்முறை மனிதன்' என்னும் அந்தப் புத்தகம், ஐரோப்பா முழுவதும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

புத்தகத்தில் லாம்ரோஸோ முன்வைத்த விளக்கம் இதுதான்-

'கிரிமினல் மனிதர்கள் பிறவியிலேயே அதற்கான மூளையுடன் பிறக்கிறார்கள். ஒருவருடைய தலை மற்றும் முக அமைப்பைப் பார்த்து கூட அவர் வன்முறை மிகுந்தவர் என்பதைக் கண்டுபிடிக்க முடியும்!'

கை ரேகை போல தலையின் அமைப்பை ஆராய்ந்து ஒருவருடைய குணாதிசயம் மற்றும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைச் சொல்லும் 'ஃப்ரெனாலஜி' என்னும் கலை அப்போது ஐரோப்பாவில் பிரபலமாகி இருந்தது.



அதாவது மூளையில் பல பகுதிகள் உண்டு. அதில் ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சி அடைந்ததாகவோ அல்லது இல்லாமலோ இருக்கலாம். மண்டையைத் தடவிப் பார்ப்பதன் மூலம் அதைக்கண்டுபிடிக்க முடியும். அதாவது மண்டையில் உள்ள 'மேடு பள்ளங்களை' வைத்து ஒருவருடைய குணாதிசயங்களைச் சொல்ல முடியும்!

சில முரடர்களையும், கொலைகாரர்களையும் வரவழைத்து அவர்களுடைய மண்டைகளை ஆராய்ந்து அதற்கான அளவு கோல்களையும் தயாரித்துத் தந்தார் 'லாம்ரோஸோ'.

'இதன் மூலம் குழந்தைப் பருவத்திலேயே மனித மிருகங்களைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு உண்டு' என்றார் அவர்!

ஒருவகையில், 'லாம்ரோசோ'வின் ஆராய்ச்சிகளை அடிப்படையாக வைத்துத் தான் இப்போது ஓவியர்கள் கொலைகாரர்களை முரட்டுத்தனமாக வரைய ஆரம்பித்தார்கள்! (இன்றும் இது தொடர்கிறது)

'லாம்ரோஸோ' புகழடைந்த சமயத்தில் ஒரு பெண்ணைக் கொலை செய்ததாக இரு சகோதரர்கள் கைது செய்யப்பட்டார்கள். இருவரும் குற்றச்சாட்டை மறுத்தார்கள். நீதிபதி 'லாம்ரோஸோவை' வரவழைத்தார். இருவருடைய மண்டைப்பகுதிகளையும் வெகு நேரம் ஆராய்ந்து, முடிவில் ஒருவரை மட்டும் குற்றவாளியாகச் சுட்டிக்காட்டினார் லாம்ரோஸோ. அதற்கான காரணங்களையும் அவர் விளக்க, அந்தச் சகோதரருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

'லாம்ரோஸோவின்' ஆராய்ச்சியைத் தொடர்ந்து சில ஐரோப்பிய நாடுகள், 'கிரிமினல் மண்டையுடன்' குழந்தைகள் பிறக்கும் போது, அவற்றை உடனே கொன்று விட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தால் அது சமுதாயத்துக்கு நல்லதாக இருக்குமா என்ற ரீதியில் விவாதங்கள் நடத்தின! உடனே சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் ஒன்று கூடி தலையையும் முகச்சாயலையும் வைத்து மிருகத்தன்மை மிகுந்தவர் என்ற முடிவிற்கு வருவது ஆபத்தான அணுகுமுறை என ஆட்சேபனை தெரிவித்தார்கள்.

அதே சமயம் மூளை பற்றிய ஆராய்ச்சிகளும் விரிவடைய, லாம்ரோஸோவின் 'தத்துவம்' மெள்ள மெள்ள செல்வாக்கு இழந்தது. சமூக விஞ்ஞானிகள், 'பால்மணம் மாறாத முகத்துடன்' கூடிய, மண்டைத் தத்துவத்திலிருந்து மாறுபட்ட, பல கொலைகாரர்களை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டியதும் ஒரு காரணம்!

பிற்பாடு ஒரு மனிதனின் பிறப்பு, மற்றும் வளரும் சூழ்நிலைகள் பற்றி ஆராய்ச்சிமேற்கொள்ளப்பட்டன. ஒரு மனிதனுக்கு சமூகத்தின் மீதும் சக மனிதர்கள் மீதும் வெறுப்பும், கோபமும் வருவதற்கு அவன் வளர்ந்த சூழ்நிலைதான் காரணம் என்கின்ற கருத்து முன்வக்கப்பட்டது.

மோசமான பெற்றோர், சிறு வயதில் துன்புறுத்தப்படுவது, கல்வி அறிவின்மை, வறுமை போன்றவை ஒரு சிறுவனை எதிர்காலத்தில் முரட்டுத்தனம் கொண்ட மனிதனாக மாற்றுகிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

'ஒருவன் குற்றவாளியாகப் பிறப்பதில்லை, அவனை சூழ்நிலைதான் அப்படி ஆக்குகிறது' என்கிற கருத்து பிரபலமடைந்தது அப்போதுதான்.

மூளைக்குள் வன்முறையைத்தூண்டும் பகுதி ஒன்று உண்டா என்ற சோதனையை மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து மேற்கொண்டார்கள்.

வன்முறை என்கின்ற குணத்தை உற்பத்தி செய்கிற குறிப்பிட்ட பகுதி மூளைக்குள் கிடையாதுதான், ஆனால் அடிப்படை உணர்ச்சிகளான செக்ஸ், பயம், உடனடித் தற்பாதுகாப்பு, கோபம் போன்றவைகளைக் கையாளும் 'குட்டி மூளை' ஒன்று மூளையின் மையத்தில் (முதுகெலும்பு நரம்பு மண்டலம் மூளைக்குள் சென்று முடியும் பகுதியில்) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அது-'அம்க்டலா' மூளைக்குள் 'அம்க்டலா' உள்ளபிரதேசத்தின் பெயர் 'லிம்பிக் பகுதி' என்று அழைக்கப்படுகிறது. பாம்பு போன்ற சில அடிப்படையான (ஊர்ந்து செல்லும்) விலங்கினங்களிடம் இருப்பது 'அம்க்டலா' பகுதி மட்டும்தான். 'ஊர்வன' வற்றிலிருந்துதான் பாலினங்கள் தோன்றின. பிறகு அதிலிருந்து குரங்குவகை. கடைசியாக மனிதன்!

இப்போதும் ஒவ்வொரு (பகுத்தறிவு பெற்ற) மனிதனின் மூளைக்குள்ளேயும் 'அம்க்டலா' அடங்கிய 'லிம்பிக் பகுதி' உண்டு!

1848இல் ரயில்வேயில் பணிபுரிந்த பீனியஸ்கேச் என்பவருக்கு ஒரு விபரீதமான விபத்து நேர்ந்தது. ரயில் பாதை போடுவதற்காக மலைப்பகுதி ஓரமாக வெடி குண்டுகளை பொருத்திக் கொண்டிருந்தார் கேஜ். திடீரென்று ஒரு வெடி குண்டு வெடிக்க, 'கேஜ்' தூக்கியெறியப்பட்டார். அப்போது இரும்புக்கம்பி ஒன்று படுவேகமாக அவரது கன்னத்தை துளைத்துக் கண்ணைச்சிதறடித்து, உச்சந்தலையைக் கிழித்துக் கொண்டு வெளியே பாய்ந்து விழுந்தது. அப்படியும் 'கேஜ்' உயிர் தப்பினார்! மருத்துவர்கள் வெற்றிகரமாக அந்தக் கம்பியை அகற்றினார்கள். அவருடைய ஒரு கண்ணில் மட்டும் பார்வை போய் விட்டது. மூளையின் முன் பகுதியும் சேதமடைந்தது.

மயக்கம் தெளிந்த பிறகு கேஜுக்கு சில தடவைகள் வலிப்பு வந்தது. அதோடு சரி! கேஜ் ஆச்சரியமாக பிழைத்துக் கொண்டதோடு சில மாதங்கள் கழித்து பழையபடி நடமாடினார். மீண்டும் வேலையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்!

திகைப்பேற்படுத்தப்படும் அடுத்த ஆச்சரியம் காத்திருந்தது!


கேஜ் மிகவும் அமைதியான சுபாவம் உள்ளவர். எல்லோரிடமும் பணிவோடு நடந்து கொள்பவர். மென்மையாகப் பேசுவர், கோபம் துளியும் வராது. மற்றவர்கள் சண்டை போட்டாலே மிகுந்த வருத்தப்படுவர். உடனே சென்று அவர்களைச் சமாதானப்படுத்துவார். இதெல்லாம் விபத்துக்கு முன்பு!

விபத்துக்குப் பிறகு, குணமடைந்து மருத்துவமனையிலிருந்து வெளிவந்த கேஜ் முற்றிலும் மாறுபட்ட மனிதராக இருந்தார்!

கேஜ் இப்போது, முரட்டுத்தனமான மனிதராக ஆகியிருந்தார். அவரிடமிருந்து கெட்டவார்த்தைகள் சரமாரியாக வெளிப்பட்டன. பொறுமை அடியோடு போய் விட்டது. முன் கோபம் காரணமாக மற்றவர்களை, சிறு விஷயத்துக்கெல்லாம் தாக்க ஆரம்பித்தார் கேஜ். இந்தப் புதிய வன்முறைக் குணங்களைப் பார்த்து எல்லோரும் திகைத்துப் போனார்கள்.

கேஜுக்கு வயதாகி அவர் இறந்து பல ஆண்டுகள் கழித்து மருத்துவ அறிஞர்கள் அவருடைய வன்முறைக்கு விளக்கம் சொன்னார்கள்!

பரிமாண வளர்ச்சியில் மனிதனின் மூளை, முழு வளர்ச்சி அடைந்த கையோடு பகுத்தறியும் திறனும் மனிதனுக்கு வந்தது. பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கும் சக்தி வந்து விட்டதால் அவனால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தது. இந்தக் கட்டுப்பாட்டை இயக்குவது மூளையின் முன்பகுதி. அதாவது நெற்றிப் பகுதிக்கு உள்ளே உடனடியாக இருக்கும் மூளைப் பகுதி. இதற்கு Pre Frontal Cortex என்று பெயர். எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் பகுதி இதுவே. 'இவனோடு சண்டையிட்டால் மேலதிகாரிக்குத் தெரிந்து நம் வேலை



போகக்கூடும்' என்று சிந்திக்க வைப்பது Pre Frontal Cortex தான்.

நண்பர் ஒருவர் 'பாம்பு' என்று சொல்லி ஒரு கயிற்றை நம் முன்னால் தூக்கிப் போட்டவுடன் சரேலென்று பின் வாங்கச் செய்வதும் மூளையின் 'லிம்பிக்' பகுதியே. அது கயிறுதான் என்பதை மின்னல் வேகத்தில் புரிய வைத்து, நம்மை அசடு வழியச் சிரிக்கச் செய்வது Pre Frontal Cortex! மொத்தத்தில் அடிப்படை உணர்ச்சிகள் வெளிப்பட்டு வெடிக்காமல் இருக்க உதவும் 'ப்ரேக்' இது!

கேஜ் என்கிற அந்த மனிதருக்கு விபத்தில், நெற்றிக்குள் உள்ள அந்த மூளைப் பகுதி நாசமாகி விட்டது. 'அமிக்டலா'வில் உருவான அவருடைய கோபம், வன்முறைச் செயல்கள் எல்லாம் தடையில்லாமல் வெடித்து வெளிப்பட்டதற்கு அதுவே காரணம் என்று மூளை அறிஞர்கள் (பல ஆண்டுகள் கழித்து) விளக்கினார்கள்.

---

# அலெக்ஸாண்டர்

தன்னம்பிக்கை, ஊக்கம், முயற்சி, இவற்றையே உயிர்மூச்சாகக் கொண்டு விளங்கியவர் மாவீரர் அலெக்ஸாண்டர்.

இவர் கி.மு. 356 ஆம் ஆண்டில் மாசிடோனிய நாட்டு மன்னன் பிலிப் என்பவருக்கு மகனாகப்பிறந்தார் அலெக்ஸாண்டரின் தாயார் ஒலிம்பியாஸ். மசிடோனியாவின் தலைநகரான பெல்லாவில் பிறந்த அலெக்ஸாண்டர் இளமையிலேயே தலைசிறந்த வீரராக திகழ்ந்தார். இளம் வயதிலேயே படைக்கு தலைமை தாங்கி போர்க்களம் செல்லும் அளவுக்கு வலிமையும் திறமையும் பெற்றிருந்தார்.

அலெக்ஸாண்டர் தனது தந்தையை இழந்து ஆட்சிப் பொறுப்பேற்ற போது அவருக்கு இருபது வயது கூட ஆகவில்லை.

தத்துவ ஞானி அரிஸ்டாட்டிலிடம் மாணவராக இருந்தவர் அலெக்ஸாண்டர். இதனால் போர் வீரராக மட்டுமல்லாமல் அரசியல் ஞானியாகவும் திகழ்ந்தார். ஒழுக்கசீலராகவும் விளங்கினார்.

எதையும் முயற்சி செய்தால் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தையும் கொண்டிருந்ததனால்தான் தனது இருபத்தாறாம் வயதில் படை நடத்திச் சென்று பாரசீகம் முழுவதையும் அவரால் வெற்றிகாண முடிந்தது. அதன்பிறகு ஆசியா கண்டத்துக்குச் சென்று எதிர்ப்பட்ட நாடுகளை எல்லாம் வென்றார். அனைத்து நாடுகளையும் வென்று அடிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அலெக்ஸாண்டருக்கு இருந்தது. குருபக்தி, தாய்ப்பாசம், தெய்வ நம்பிக்கை, பகைவனிடம் வலிமை பாராட்டல் போன்ற அரிய குணங்களையும் கொண்டு விளங்கினார் அவர். சென்ற திசைகளிலெல்லாம் வெற்றி பெற்றாரே தவிர தோல்வியை ஒரு போதும் சந்தித்ததே இல்லை. ஆசியாவில் ஒரு கிரேக்கப் பேரரசை புதிதாக நிறுவினார். முயற்சி திருவினையாக்கும் என்ற பழமொழிக்கு இலக்கணமாக விளங்கிய மாவீரன் அலெக்ஸாண்டர் கி.மு. 323இல் கொடிய காய்ச்சலினால் அவதிப்பட்டு மரணம் அடைந்தார்.

இளம் வயதிலேயே இவ்வளவு பெரிய புகழை பெற்றவர் மாவீரன் அலெக்ஸாண்டர் என்றால் அதற்கு முக்கிய காரணம்அவரது விடா முயற்சியே ஆகும். எதைப்பற்றிய நடவடிக்கையானாலும் முடியுமா? என்று அவர் சிந்தித்ததில்லை. முயன்றால் முடியும் என்று நினைத்துத் தான் கடைசி வரை செயல்பட்டார்.



முயன்றால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு அலெக்ஸாண்டர் வாழ்க்கையில் நடந்த சிறு நிகழ்ச்சி உதாரணமாகும்.

அலெக்ஸாண்டருக்கு பதினைந்து வயதாக இருக்கும் போது பிலிப் மன்னனுக்காக குதிரை ஒன்றை கொண்டு வந்திருந்தான் குதிரை வணிகன். தெஸ்ஸலி நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட குதிரையின் பெயர் புசிபாலஸ். அந்தக் குதிரையோ சரிவர பழக்கப்படாதது. குதிரை மிகவும் முரட்டுத்தனத்துடன் காணப்பட்டது. அதை மேலும் கீழுமாகப் பார்த்தார் மன்னர் பிலிப். யாராவது அருகில் சென்றாலே பயங்கரமாகக் கனைத்து முன்னங்கால்களை தூக்கிக் கொண்டு பாய வந்தது குதிரை. அழகாகவும் கம்பீரமாகவும் இருந்தாலும் முரட்டுத்தனத்துடன் இருந்ததால் அந்தக் குதிரை வேண்டாமென்று சொன்னார் மன்னர். மினு மினு வென்று பளபளத்த குதிரையை ரசித்துக் கொண்டிருந்த இளைஞன் அலெக்ஸாண்டருக்கு அப்பா அப்படிச் சொன்னது பிடிக்கவில்லை.

"அப்பா இந்தக் குதிரையை நான் வாங்கித்தான் ஆக வேண்டும். மிகவும் அழகாக இருக்கிறது" என்றார் அலெக்சாண்டர். "அழகாயிருக்கிறது சரி. ஆனால் சுலபத்தில் அடக்க முடியாது போலிருக்கிறதே" என்றார் மன்னர்.

"முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை. என்னை அனுமதியுங்கள். நான் அடக்கிக் காட்டுகிறேன்" என்றார் அலெக்ஸாண்டர். லேசாக குதிரையை தட்டிக் கொடுத்த அலெக்ஸாண்டர் குதிரையின் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டார். குதிரை வேகமாகப் பறந்தது. சிறிது நேரத்தில் குதிரை அதே இடத்தில் கொண்டு வந்து நிறுத்தினார் அவர். மன்னரும் மற்றவர்களும் ஆச்சரியப் பட்டார்கள்.

தன்னம்பிக்கையுடன் முன்றால் முடியாதது எதுவுமில்லை என்பது இந்த நிகழ்ச்சியின் மூலம் விளங்குகின்றது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையிலே மிக அவசரமாய் எழுந்து அனைத்துக் கடமைகளையும் முடித்துக் கொண்டு தானும் அலங்கரித்துக் கொண்டு கையிலே தேநீருடன் தனது அறையை நோக்கிச் சென்றாள் லாவண்யா.

தூக்கத்தில் இருந்த முரளியை எழுப்பி, புன்னகை சிந்தியவளாய் "என்னங்க இன்னைக்கு நம்ம கல்யாண நாள் இல்லையா...! சீக்கிரம் எழுந்து ரெடியாகுங்க கோயிலுக்கு போகலாம்" என்று செல்லமாகக் கூறினாள்.

முரளியின் கண்கள் குளமாகின. ஏதோ ஞாபகம் அவன் மனத்திரையில் ஓடியது. மறக்க நினைத்த நினைவுகள் இன்று அவனுக்கு நினைவில் வந்தது. "சரி சரி நீ போ நான் ரெடியாகி வாறேன்" என்று கூறி லாவண்யாவை அனுப்பிவிட்டு தன் டயரியில் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து பிரித்துப் படித்தான்.

"வேறு யாருக்கோ கணவனாகப் போகும் என் காதலனுக்கு நந்தினி எழுதுவது! முதலில் என்னை மன்னித்து விடுங்கள். ஏனெனில் எதையும் தாங்கும் இதயம் எனக்கு இல்லைங்க. திருமணத்தில் முடிகின்ற காதல் பயணம் மட்டுமல்ல, மரணத்தில் முடிகின்ற காதல் பயணமும் சுகமானது தாங்க. என்னோட காதல் மரணத்தில் முடிகின்ற காதல். நீங்க இல்லாத வாழ்க்கை எனக்கு வேண்டாங்க. என் காதல் தூய்மையானது, புனிதமானது உண்மையானது என்றால் அது வாழவேண்டும் இல்லை சாக வேண்டும். என் காதல் வாழவில்லை அதனால் ....... உங்கள் இன்பத்திலும், துன்பத்திலும் உங்கள் பக்கத்தில் உங்கள் மூச்சுக் காற்றாய் நான் இருப்பேன். சந்தோஷத்துடன் ஜோடியாய் நலமுடன் வாழ வாழ்த்துகிறேன். என் பயணங்கள் என்றும் முடிவதில்லை ஏனெனில் அது நீண்ட பயணம்... நந்து."

"ஏன்டி இப்படிச் செய்தாய்? மரணம் தான் பிரச்சினைக்கு முடிவா? பைத்தியம் தப்பு பண்ணிட்டியே!"

கண்ணீரை விழித்திரைக்குள் மூடி மறைந்து விட்டு லாவண்யாவுடன் கோயிலுக்குச் செல்ல ரெடி ஆனான் முரளி. லாவண்யாவைக் கோயிலில் விட்டு விட்டு அவசரமாய் தன் நண்பனைச் சந்தித்து விட்டு வருவதாய் கூறி சென்று விட்டான். அவன் சென்றது நண்பனைச் சந்திப்பதற்கு அல்ல நந்தினியைச் சந்திப்பதற்கு!

❖ ❖ ❖

மூன்று வருடங்களுக்கு முன் நந்தினியின் அழகிய விவசாய கிராமத்துக்கு வேலை மாற்றம் பெற்று முரளி சென்றிருந்தான். அப்பொது நந்தினி நகர பாடசாலை விடுதி ஒன்றில் தங்கியிருந்து உயர்தரம் படித்துக் கொண்டிருந்தாள். அவள் விடுமுறைகளில் தன் கிராமத்துக்கு வருவதுண்டு. முரளியை அவள் பல தடவைகள் பார்த்திருக்கிறாள். ஆனால் பேசிப் பழகியது கிடையாது. அவளுக்கு ஆண்களைப் பிடிப்பதில்லை, காதல் மேல் நம்பிக்கை இல்லை. முரளியையும் தவறான ஓர் ஆணாகவே நோக்கினாள். சிறுபிள்ளைத் தனமாய் சுற்றித்திரிந்த நந்தினிக்கு முரளி நல்லவன் என்று அயலார் கதைப்பது காதில் பல தடவை விழுந்தது. அவனுடன் பேசிப் பழக வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. காலப்போக்கில் ஆசை காதலாய் உருப்பெற்றது. தனது முதல் காதலை தெரியப்படுத்த முடியாமல் ஒரு வருடம் பறந்தது.

# சொல்ல மறந்த காதல்



மெதுவாய் முரளியுடன் பேசினாள், பழகினாள். தன் அன்பை மானசீகமாய் வெளிப்படுத்தினாள். இருவரும் தொலைபேசி மூலம் அடிக்கடி பேசினர் அன்பாய் பழகினர். அன்பை மட்டும் வெளிப்படுத்திய நந்தினி தன் காதலை கடிதம் மூலம் சொன்னாள். முரளி தன் காதலை எவ்வாறு வெளிப்படுத்துவார் என்று நந்தினி காத்திருந்தாள். அவளுக்கு தன் படிப்பு மேல் இருந்த நாட்டத்தை விட காதல் மேல் இருந்த நாட்டமே அதிகமாயிருந்தது.

அன்று ஞயிற்றுக் கிழமை நந்தினியும் முரளியும் எதார்த்தமாய் சந்தித்தனர். நந்தினியை பரிதாதபமாக பார்த்த முரளி "ஏன் அப்படி கடிதத்தில் எழுதினாய்"

"ஏன் எழுதக் கூடாது"

"உனக்கு என்னைப் பற்றி தெரியுமா?"

"என்ன தெரியாது சொல்லுங்க"

"ஏய் நந்தினி நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் தெரியுமா? உனக்கு"

நந்தினி மனசு துடித்தது. இதயம் வெடித்தது. சிரித்துக் கொண்டு "பொய் தானே சொல்லுறீங்க?" என்றாள்.

"இல்லடா இது தான் உண்மை" என்றான் முரளி வேதனையுடன்.

"அப்படி என்றால் ஏனுங்க என்னைக் காதலிப்பதாய் நடித்தீர்கள்? பேசினீர்கள்? பழகினீர்கள்? என் காதலை மானசீகமாய் சொன்ன போது மௌனமானீர்கள்? சொல்லுங்கள்.....?"

துடித்தாள், அழுதாள். நந்தினியின் விழி நீரைத் துடைத்தவன் "எனக்கு உன்மேல் காதல் இல்லடா எனக்கு உன் குணம் பிடிச்சிருந்தது அதனால் உன் மேல் அன்பு காட்டினேன், பேசிப் பழகினேன். உன் அன்பை ஒரு போதும் காதலாக நான் கருதியதில்லை. ஒரு வருஷமா என்னை காதலித்த நீ ஏனடி காதலை சொல்ல மறந்தாய்? அன்புக்காய் ஏங்கி என்னை காதலிப்பதாய் மூன்று மாதங்களுக்கு முன்னர் லாவண்யா சொன்னாள். நானும் ஒப்புக் கொண்டேன். எனக்கு அப்பா அம்மா கிடையாது. லாவண்யாவிடமிருந்து அன்பு கிடைக்கும் என்று தான் ஒப்புக் கொண்டேன். அதற்கு முன்னர் நீ உன் காதலை சொல்லியிருந்தால் உனக்கு நான் கிடைத்திருப்பேன்" என்று கூறி முடித்தான். "நீ இறந்தால் நானும் இறப்பேன்" என்று முரளி கூறிய வார்த்தை அவளின் வெந்த இதயத்தில் காரமிட்டது.

அவள் காதல் சிலுவையை சுமந்தது, இதயம் வேதனையை சுமந்தது, கண்கள் கண்ணீரை சுமந்தன. அவன் வாழ வேண்டும் என்பதற்காய் பாதி ஜீவனுடன் நந்தினி வாழ்ந்தாள். காதலை நட்பாக மாற்ற விரும்பாத நந்தினி முரளியுடன் பேசுவதை, பழகுவதை படிப்படியாகக் குறைத்துக் கொண்டாள். சில காலங்கள் நடைபிணமாய் நந்தினி வாழ்ந்தாள். அன்று ஒரு நாள் முரளியிடம் இருந்து திருமண அழைப்பு வந்தது. அது அவளுக்கு மரண அழைப்பாய் இருந்தது. விழி வழியே உயிரும் வெளியேறிக் கொண்டிருந்தது.

"என் இதயத்தில் தீட்டிய ஒவியத்தை, நான் செதுக்கிய சிற்பத்தை இன்று யாரோ ரசிப்பதா? நாளை அதை என் கண்கள் பார்க்கலாமா? கூடாது" கடிதம் எழுதினாள். மாலையிட்ட தன் படத்துடன் சேர்த்து கல்யாணப் பரிசாய் தபால் மூலம் அனுப்பி வைத்தாள். லாவண்யா கழுத்தில் தாலிக்கயிறு ஏறும் முகூர்த்தம், முரளி கட்டும் தாலியாய் எண்ணி சுருக்குக் கயிற்றை மாட்டினாள்.

❖ ❖ ❖

"ஏனடி இப்படி செய்தாய் உன் மீது காதல் இல்லை என்று தானே சொன்னேன். அன்பில்லை என்று சொன்னேனா? நானும் உன்னோடு வந்திருப்பேன் லாவண்யாவை திருமணம் செய்யாதிருந்தால். ஏன் என்னை தினம் தினம் கல்யாண நாளில் சித்திரவதை செய்கிறாய். என் கண்ணீர் மழையால் அர்ச்சனை செய்கிறேன்" என்று, புதிதாய் கட்டப்பட்ட நந்தினி என்ற பெயர் இடப்பட்ட கல்லறையை தொட்டு மலர் தூவினான்.

என் சுவாசக்காற்றாய் உன்னை தினம் சுவாசித்து உயிர் வாழ்கிறேன் என்று கூறி விடைபெற துடித்த விழி நீருக்கு விடுதலை கொடுத்து கோயிலிலே காத்திருந்த லாவண்யாவை தேடிச் சென்றான்........

**நதியா,**
**தம்பலகமம்,**

# தன்னம்பிக்கை

இதுவும் ஒரு காதல் கதையே...

ஆனால், இது நெகிழ்ச்சியான கதை... நம்பிக்கை ஊட்டும் காதலின் கதை!

ராதா கிருஷ்ணன்-எலிசபெத் இருவரும் காதல் தம்பதியினர். இருவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு.

உறுதியான உடலுடன் இருந்தாலும் இருவரும் எயிட்ஸ் நோயாளிகள்!



திருமண மகிழ்ச்சி முகத்தில்பொங்கப் பேசுகிறார் ராதாகிருஷ்ணன். "எனது சொந்த ஊர் சிதம்பரம். 23 வயதில் துபாய்க்கு வேலைக்குப் போனேன். அங்கே அதிகாரிகள் எனக்கு மருத்துவப் பரிசோதனை செய்தபோது, அந்தச் செய்தியைச் சொன்னார்கள்....எனக்கு எச்.ஐ.வி நோய்யாம்.

அப்படியே துடிதுடிச்சுப்போயிட்டன். உடனே, என்னை அடுத்த விமானத்தில் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். என் உடம்பில் எந்த மாற்றமும் இல்லை. எடை குறையவும் இல்லை. அப்படி இருக்க எனக்கா எயிட்ஸ்? இதில் ஏதோ தப்பு இருக்க வேண்டும் என்று என்னை நானே தேற்றிக்கொண்டு, சென்னைக்கு வந்த நான் இன்னொரு பரிசோதனை செய்தபோது, இங்கேயும் அதை உறுதி செய்ய நொறுங்கிப்போனேன்.

என்னையே எனக்குப் பிடிக்காமல் போச்சு! ஒரு நாள் தப்பு என்னை வாழ்க்கை முழுக்கத் துரத்த ஆரம்பிச்சது. எனக்கு இது எப்படி வந்தது? யார் யாரோ கேட்கும்போது, செத்துவிட நெஞ்சு துடிக்கும். ஏன்தெரியுமா? அந்தக் கேள்வியிலேயே 'நீ தப்பானவன்' என்கிற தொனி இருக்கும். கிட்டத்தட்ட தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த போதுதான்...எயிட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஒரு கூட்டத்தில் எலிசபெத்தைச் சந்தித்தேன்" என்று தன் காதல் மனைவியைப் பார்க்கிறார் ராதாகிருஷ்ணன்.

சென்னைப் பெண்ணான எலிசபெத்துக்கு இது இரண்டாவது திருமணம். "என் முதலாவது கணவர் ரவி ஒரு லொரி டிரைவர். அவரது தப்பான சகவாசங்களால் எச்.ஐ.வி. வந்திருக்கு. அவரால் அது எனக்குப் பரவ ...நான்கு வருடங்களுக்கு முன்பு ஏதேச்சையாகச் செய்த இரத்த பரிசோதனையின் போதுதான் எங்கள் பிரச்சினையே தெரிய வந்தது. அதற்குள் ரவி இறந்து போய்விட்டார்.

தினம், தினம், மாத்திரை, தனிமை, பயம், அவமானம் என்று இருந்த என் வாழ்க்கையில் சந்தோசத்தைக் கொடுத்தது ராதாகிருஷ்ணனின் சந்திப்புத்தான். எங்களுக்குள் காதல் மலர்ந்தது. எனக்கு ரெண்டு குழந்தைகள் பிறந்து இரண்டுமே இறந்துவிட்டன. இருந்தாலும், நாங்கள் இப்போது குழந்தை பெற முடிவு செய்திருக்கிறோம்'' என்கிறார்.

"எச்.ஐ.வி. கிருமி தங்கியுள்ள தாயும் தகப்பனும் சேர்ந்து, எச்.ஐ வி.தாக்காத குழந்தையை பெற்றெடுக்க முடியும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். எச்.ஐ.வி.க்கு எதிராகப் போராடும் நாங்கள் அந்த உண்மையை உலகுக்கு சொல்லவாவது ஓர் ஆரோக்கியமான குழந்தையைப் பெற விரும்புகிறோம்.எங்களுக்கு வாழ ஆசையாக இருக்கு!" -எலிசபெத்திடம் உறுதி தெரிகிறது.

அற்ப பிரச்சினைகளுக்கெல்லாம் ஆயுளை முடித்துக் கொள்ளும் முட்டாள்தனமான முடிவைத் தேடுபவர்கள், ராதாகிருஷ்ணன்-எலிசபெத் தம்பதியின் கதையை ஒரு நிமிடம் கேட்டால் நல்லது!

# கவிதைப் பூங்கா

**ஆதிக்கச் சின்னம்**

அந்த
ஆழ்ந்த அகழிகளை
சாம்பல் கொண்டு
தூருங்கள்.
மேடும் பள்ளமுமாய்
இருக்கும்
பூமித் தரைகளை
மெள்ள
மட்டந்தட்டி
வெண்மையானதாய்- ஓர்
நடைபாதை போடுங்கள்
இடையிடை
புல்லை....
மரங்களை...
வெண்பூச் செடிகளை....
இன்னும்
அவை விரும்பும்
எல்லாவற்றுடனும்
ஓர்
ஒலிவ மரக்கிளையையும்
கொண்டுவந்து நடுங்கள்!
வெளியூர் வெண்புறாக்கள்
வரட்டும்
இது ஓர்
இனத்தின்
விடுதலைக் குரல்வளையை
நசுக்கிப் போட்ட
கொலைக் களம்
என்று அறியாதபடி!

*வளலாய் செல்வகுமார்*
*அச்சுவேலி*

**எழுதாத என் கவிதை**

ஏராளம் ஏராளம்
எண்ணங்கள் எழுத
எழுந்துவர முடியவில்லை
எல்லையில் என்
துப்பாக்கி எழுந்து நிற்பதால்
எழுந்துவர என்னால்
முடியவில்லை
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன் நீங்கள்

*சி.குமார்*
*யாழ் சாலை*
*கிளிநொச்சி*

**தென்றல்**

சொல்லி விட்டு வீசவில்லை
மௌனமாக தொட்டுச் சென்றாய்
உணர்ந்து கொண்டபின் தானே வந்து
போவதை தெரிந்து கொண்டேன்
தென்றல் என்று.

*ஜெயா*
*4ஆம் கட்டை*
*பூநகரி*

**விண்மீன்கள்**

தமிழனின் விடிவுக்காய்
வெடிகுண்டோடு தன்
உடலை சிதறடித்த
கரும்புலி வீரனின்
தசைத்துண்டுகள்

*கோ.செல்லா,*
*திரியாய்,*
*திருமலை.*

**இறப்பு**

பூமியிலிருந்து
விண்ணிற்கோ
அல்லது
பாதாளத்திற்கோ
செல்வதற்கு எடுத்து
கொள்ளும் விமானச்
சீட்டு

*கே.மேனகா*
*தரம்-10*

**சொல்ல மறந்த காதல்**

உறவே!
என் மானசீகக் காதலை
சொல்ல மொழியின்றி தவித்தேன்
ஆறிரண்டு மாதமாய் அடி மனதில்
ஆசை கொண்டு அன்பே
ஆழமாய் உன்னை காதலித்தேன்.
என்றாவது என் காதலை- நீ
உணர்வாய் என்றிருந்தேன்.
அஞ்சி அஞ்சி நான் காதல் சொல்ல
வந்த போது காதலனே-உன்
காதலியை காட்டி,
ஊமையான என் காதலை
ஊனமாக்கி விட்டாயே!!!

*நதியா,*
*தம்பலகமம்,*
*திருமலை.*

**ஏன் இப்படி**

நினைக்கும் போதெல்லாம்
சிறகடித்த இதயம்
கற்பனையில் உன்னை
வட்டமிட்ட இதயம்
நீ என்னை
கடந்து செல்லும் போது
கரைந்து போகிறதே ஏன்?

*இ.கிருபா*
*ஸ்கந்தபுரம்*

**உனக்காக....**

உன் நினைவுகளுடன்
வாழும்-எனக்கு
நிஜங்கள் வெறுக்கின்றன.
உன் வரவை
தினம் எண்ணி...!
இதயம் செயல்
இழந்துவிட்டது
உன் நினைவுகளுடன்..
தற்கொலை செய்யும்
என்னை- தயவுசெய்து!
பிரேத பரிசோதனை
செய்யாதீர்..!
அவனை நேசித்த
என் இதயம்
சிதைய வேண்டாம்
தீயில் என்னை
சங்கமிக்காதீர்..!
ஏனெனில்...!
என் இதயம்
பொசுங்க வேண்டாம்
என் கல்லறையில்
முளைவிடும்
செடியில்
மலரும் பூ...!
தென்றலுக்கு சொல்லும்
என் காதலை...!

*தி.தனுஷியா*
*சாவகச்சேரி*

**ஏக்கம்....**

கல்வீட்டில் வாழ்பவனும்
மாளிகைக்காகவே
ஏங்குகின்றான்
வானம் தெரியும்
குடிசைகளும்
நம்மிடையே இருப்பதை
மறந்து

*ஆ.ஆனந்தி*
*ஆயம்,*
*புளியங்குளம்.*

**நீதி தேவதையே!**
**பாருன் கண்ணால்**

நீதிக்கே நீதியற்று
நிலத்தில் வீழ்ந்து விட்டது
நீதி தேவதையின்
முக்குக் கண்ணாடி
கைநீட்டிக்
கட்டளையிட்டவள்
கைநீட்டி வேண்டிவிட்டாள்
விழத்தான் வேண்டும்
ஊட்டியவன் காலில்

நாடாளும் தலைவியே
சாடிவிட்டாளுன்னை
சாடைமாடையாக
நடப்பது இன்னுமா
புரியவில்லை?

கை நீட்டி நீதிகேட்டு
வந்தவர்களை
கைபார்த்து
கைகாட்டி விட்டுவிட்டாய்!

நீதிக்குமுன்
யாவரும் சமன்
யாவருக்கும் முன்
நீதி சமமா?

மொழி பகுத்துணரும்
உன் செயலால்
படுகின்றோம் பாடு!
பாருன் கண்ணால்
நீதி தேவதையே!
பாருன் கண்ணால்.

*எஸ்.அகிலன்*
*களுத்துறை சிறைச்சாலை.*

**பா(கா)த்திருக்கிறது**

*சுமக்கவில்லை உடல்*
*சுமையாய் இருக்கிறது உயிர்!*
*வருத்தமில்லை எனக்கு...*
*நீ வரும்வரை காத்திருப்பதற்கு*
*உன் வரவை என் உகைம்*
*பா(கா)த்திருக்கிறது...*

*காயா*
*கொழும்பு*


# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



சாதனை படைக்க வேண்டும், கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் இன்று உலகம் முழுவதும் பரவலாக பலரை ஆட்டிப்படைக்கத் தொடங்கியுள்ளது. இதற்காக இவர்கள் எதையும் விட்டுவைப்பதில்லை. எல்லா வகையிலும் முயன்று வருகிறார்கள். வானத்தில் உயரே சென்று விருந்து சாப்பிடுவதிலும் சாதனை படைக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு திபெத் மலைப் பகுதியில் 22,326 அடி உயரத்தில் ஹென்றி செப்போர்ட் என்பவர் விருந்து சாப்பிட்டு சாதனை படைத்தார்.

ஒரு ஆண்டுக்குப் பின் இப்போது இந்த சாதனை முறியடிக்கப்பட்டு உள்ளது. இங்கிலாந்தை சேர்ந்த பியர் சிரில்ஸ், ஆலன்வியல் ஆகியோர் பலூனில் 24,262 அடி உயரம் பறந்து சென்று அங்கு மூன்றுவகையான உணவுகளைச் சாப்பிட்டனர். மாலை விருந்து முடிந்ததும் மீண்டும் பத்திரமாக பூமிக்கு திரும்பினர். இந்த சாதனை விரைவில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்கும் என்று தெரிகிறது.

* * *



ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு பொருளை சேகரிக்கும் பழக்கம் இருக்கும். பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த 55 வயதாகும் 'நான் பா' என்பவருக்கு, பொம்மைகளை சேகரிக்கும் பழக்கம் உள்ளது. இவரின் 6ஆவது வயதில் துவங்கிய இந்த பழக்கம் இன்று வரை தொடர்கிறதாம். இதுவரை 56,000 பொம்மைகளை சிறியது, பெரியது என சேர்த்து வைத்துள்ளார்.

தனது வீட்டினுள்ளேயே தனித்தனி சுவர்களில் இந்த பொம்மைகளை வரிசையாக அழகுபடுத்தி வைத்துள்ளார். இன்னமும் பொம்மைகளை வாங்கிச் சேகரிக்கும் இவரின் இன்னொரு ஆசை, இவருக்கு பின்னால் இந்த பொம்மைகளை ஒரு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்பதே!

* * *



அறுபதுவயதைத் தொட்டதுமே பெரும்பாலோருக்கு நாடி தளர்ந்து விடுகிறது. அதன்பின் ஒவ்வொரு நாளையும் வாழ்க்கையில் கிடைத்த போனஸ் என்று எண்ணி வாழத்தொடங்கி விடுகின்றனர்.

ஆனால் நூறு வயதை தொட்டாலும் கூட சிலர் சோர்வு என்பதே இல்லாமல் துடிப்புடன் இருந்து சாதனையும் படைக்கின்றனர். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 95 வயதான கோசோஹரகுச்சி 95-லிருந்து 99 வயதானவர்களுக்கான 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் புதிய சாதனை படைத்து உள்ளார். இதன் பழைய சாதனை 24.01 விநாடியாக இருந்துவந்தது. சமீபத்தில் ஜப்பானில் மியாசாகி நகரில் நடந்த ஓட்டப் பந்தயத்தில் 100 மீட்டர் தூரத்தை 22.04 விநாடிகளில் ஓடிக்கடந்து இவர் சாதனை படைத்தார்.

கோசோ சாதனை படைப்பது இது முதல் தடவை அல்ல. 5 ஆண்டுகளுக்கு முன்பு 90-லிருந்து 94 வயதானவர்களுக்கான ஓட்டப்பந்தயத்தில் 100 மீட்டர் தூரத்தை 18.08 விநாடிகளில் ஓடிக்கடந்து சாதனை படைத்துள்ளார். அந்த சாதனை இன்னமும் முறியடிக்கப்படவே இல்லை.



மேற்கு வங்காளத்தில் பிஸ்வநாத் தாஸ் என்பவர் மீனின் முள் மற்றும் தோல்களை வைத்து சிலைகளை தயாரித்து வருகிறார். கொல்கொத்தாவிலுள்ள பிரசித்தமான காளி அம்மன் கோவிலில் உள்ள அம்மன் சிலையைப் போன்று இவர் மீன் முள்ளால் வடிவமைத்துள்ளார். அதை மக்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்குகிறார்கள். இது மட்டுமல்ல ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள், கணபதி சிலை மற்றும் குதிரையில் செல்லும் போர் வீரன் போன்ற அழகிய சிலைகளையும் வடிவமைத்துள்ளார்.

* * *



மனிதர்கள் வரையும் ஓவியங்களைவிட நத்தைகள் வரையும் ஓவியங்கள் ஐரோப்பிய நாடுகளில் தற்போது அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. வண்ணங்களைக் குவித்து அதன்மேல் நத்தைகள் ஊர்ந்து செல்ல வைத்து தீட்டப்படும் இம்முறையை இத்தாலியில் செய்து வருகின்றனர். பல்வேறு வண்ணங்களின்மீது பல்வேறு கோணங்களில் ஊர்ந்து வரையப்படும் இந்த ஓவியம் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

* * *

'அக்கு பஞ்சர்' சிகிச்சை முறையை கண்டுபிடித்த சீனாவில் இப்போது 'தீப்பொறி மசாஜ்' முறையை கண்டுபிடித்துள்ளனர். மசாஜ் செய்து கொள்பவரின் உடம்பில் பாதுகாப்புக்காக ஒரு துணியை போத்திவிட்டு எடுக்கிறார்கள். இதிலுள்ள வெப்பம் உடலுக்குள் செல்வதால், அசதிகளை போக்கி உடலில் புத்துணர்ச்சியை உண்டாக்குகிறதாம்.

**பத்தினி**

பலரிடம்
புரண்டாலும்
பத்தினியாகவே
இருக்கிறது
பணம்!

* * *

**தாகம்!**

எச்சில்பட்டால்
ஆகாதென்று
இளம் வயதிலே
காக்காய்கடி கடித்து
கடலையுருண்டையைப்
பங்கு போட்டவன்-
இன்று
என் எச்சிலோடு
இதழ்களையும் விழுங்கிட
ஓயாமல் மேய்கிறான்
உதடுகளில்....!

* * *



"என் பையன் சில்லறைக்காசை விழுங்கிட்டான்..."

"டாக்டரிட்டை கூட்டிக்கொண்டு போறது தானே..?"

"வேண்டாம் டாக்டர் நோட்டை விழுங்கிடுவார்.

# சிறுவர் பக்கம்

## ஏமாறாதே! ஏமாற்றாதே!!



ஒரு ஊரில் வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் கலப்பட வியாபாரி. அரிசி, பருப்பு, எண்ணெய் என்று எது விற்றாலும், அதில் கலப்படம் இருக்கும்.

ஒரு நாள் அவர் வியாபாரத்துக்காக வெளியூருக்குப் போனார். ஒரு காட்டு வழியே போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தார்.

கோபத்துடன் கல்லைப் பெயர்த்தார். கல்லுக்கு அடியில் ஒரு பானை இருந்தது. பானை நிறைய பொற்காசுகள் மின்னின!

அப்போது ஒரு தேவதை தோன்றினாள். ''பொற்காசுகளில் பாதியை மட்டும் நீ எடுத்துக்கொள்! மீதியை பானையுடன் புதைத்துவிடு. வேறு யாருக்காவது பயன்படும்'' என்று கூறிவிட்டு, தேவதை மறைந்துவிட்டாள்.

வியாபாரிக்குப் பேராசை ஏற்பட்டது. பானையிலிருந்த பொற்காசுகள் முழுவதையும் ஒரு துணியில் கொட்டி எடுத்துக் கொண்டார். வெறும் பானையைப் புதைத்து வைத்துவிட்டு, நடந்தார்.

கொஞ்சத் தூரம் போனார். திருடர்கள் வியாபாரியை வழிமறித்தார்கள். அவரிடமிருந்த பொற்காசு, பணம், அரிசி எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இவர் அழுதுகொண்டே நடந்தார். மீண்டும் அந்தத் தேவதை தோன்றினாள். ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டாள். ''திருடர்கள் என் பொற்காசுகளை பறித்துக்கொண்டார்கள்'' என்று வியாபாரி சொன்னார்.

''பானையில் பாதி பொற்காசு இருக்குமே? போய் எடுத்துக்கொள்'' என்று கூறிவிட்டு, தேவதை மறைந்தாள்! வியாபாரி 'ஓ' என்று பலமாக அழுதார்! அவர்தான் பானையைக் காலி செய்துவிட்டாரே! தேவதையை ஏமாற்றினார்! இப்போது இவர் ஏமாந்துபோனார்!!



ஜெ. அஜித்தன்
தரம் -11பீ
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



சி. புவனேந்திரன்
தரம் 9 பீ.
மு/பாரதி வித்தியாலயம்
வள்ளுவர் புரம், விசுவமடு



இ. சுரேகா,
தரம் -9ஏ
மு/பாரதிவித்தியாலயம்
வள்ளுவர்புரம்.



செ. கார்திகா
தரம் -3
யா/சி.சி.த.க பாடசாலை, நல்லூர்



ஆர். விஜயரூபன்
விசுவமாடு
மாணிக்கபுரம்



கோனாலன்
பாலர் பாடசாலை
கவிஸ்.



பு. நிலுஷன்
தரம் 9
தி/உவர்மலை
விவேகானந்தாக் கல்லூரி.

## அறிந்து கொள்ளுங்கள்

- சர்வதேசநீதிமன்றம் அமைந்துள்ள நாடு?
  - நெதர்லாந்து
- உலகில் அதிகம் அவரைக்காய் பயிரிடப்படும் நாடு?
  - கலிபோர்னியா
- இலங்கையில் மட்பாண்டத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
  - பிலியந்தல
- பெரிய தொலை நோக்கி உள்ள இடம்?
  - அமெரிக்கா
- இலங்கையில் டயர்தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
  - களனி

நா. தமிழ்ச்செல்வி, நல்லூர், பூநகரி.

- இலங்கையில் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
  - பரந்தன்
- ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு எது?
  - பின்லாந்து
- நோபல் பரிசைஆரம்பித்தவர் யார்?
  - அல்பிரட் நோபல்


அ. பவிதா
தம்பிராய், பூநகரி.

## பொது அறிவு

- முக்கனிகளும் எவை?
  மாம்பழம்
  வாழைப்பழம்
  பலாப்பழம்
- பறக்கும் பாலூட்டி எது?
  வௌவால்
- இலங்கையின் முதற் பிரதம மந்திரி யார்?
  டி.எஸ்.சேனநாயக்கா
- எரிபொருட்கள் மூன்று தருக.
  டீசல்
  நிலக்கரி
  பெற்றோல்
- பூமி தனது அச்சில் ஒருமுறை சுற்றிவர எடுக்கும் நேரம் எவ்வளவு?
  24 மணித்தியாலம்
- சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோள் எது?
  புதன்
- இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது?
  திருகோணமலை
- உலகில் மிக சனத்தொகை கூடிய நாடு எது?
  சீனா
- பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து எது?
  விற்றமின் 'சீ'

இ.நிதர்சன்
தரம்-8, கிளி/பூ/ம/வி
மட்டுவில் மேற்கு, பூநகரி

## ஒற்றுமை




## கணினியின் சுருக்க வடிவமும் விரிவாக்கமும்

| | |
|---|---|
| Ms | - MicroSoft |
| C.P.U | - Central Processing Unit |
| RW | - Rewritter CD |
| CD | - Compack Dise |
| RAM | - Random Access Memory |
| ROM | - Read Only Memory |
| DTP | - Desk Top Publishing |
| WWW | - Wold Wide Web |
| E-Mail | - Electornic Mail |
| ISP | - Internet Service Provider |
| O/S | - Operating System |
| I/O | - Input output Device |
| HDD | - Hard Disc Drive |
| FD | - Floppy Disc |
| MP3 | - Music Protocol Three |
| PC | - Personal Computer |
| IT | - Information Technology |
| P iv | - Pantium Four |
| MS DOS | - Microsoft Disk Operating System |
| GTI | - General Information Technology |

K.T. Sarangan
2007 A/L (Arts)
J/ Kokuvil Hindu College

## நான்

எனது பெயர் ந.சஞ்ஜீவன். எனது பாடசாலையின் பெயர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி. எனக்கு விருப்பமான பாடம் கணிதம், விஞ்ஞானம். எனக்கு விருப்பமான உணவு நூடில்ஸ். நான் தரம் 11 இல் கல்வி பயில்கின்றேன். எனக்கு பிடித்த விளையாட்டு கிரிக்கெட். நான் படிக்கும் கல்வி நிலையம் ஜோன் கல்வி நிலையம். எனது எதிர்கால இலட்சியம் ஒரு பொறியியலாளர் ஆவது.

ந.சஞ்ஜீவன்
தரம் 11 எ
பு.ம.கல்லூரி, மந்துவில்

# வழிகாட்டும் செல்ல நாய்!



கருப்புக் கண்ணாடியும் கையில் ஊன்றுகோலுமாக இருந்த ஆண், பெண்கள் அந்த அரங்கில் கூடியிருந்தனர். "சிறப்பு விருந்தினர் வருகிறார்'' என அறிவித்ததும், பலத்த கைதட்டல்!

கமராக்கள் பளிச்! பளிச்!! என ஒளி வீசின.

அந்தக் கட்டடத்துக்கு சிறப்பு விருந்தினர் ஒரு அமெரிக்கப் பெண். பார்வையற்றவர்கள் குழுமியிருந்த அந்த அரங்குக்கு வந்த அந்த பெண்ணும் விழி இழந்தவர்தான். பெயர் ஜாய்ஸ்கேன்.

அவரை அரங்குக்கு அழைத்து வந்தது, ஒரு நாய்! அதன் பெயர் 'கோரி'.

பார்வையற்றவகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி அது.

அங்கு பார்வையற்றோர்களுக்கு உதவும் வகையில் 'நாயை எப்படி பயன்படுத்துவது?' என விளக்கமளித்தார், ஜாய்ஸ்கேன்.

அதுதவிர, பார்வையற்றோர் சந்திக்கும் பிரச்சினைகள், பொதுமக்கள் அவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்தும் உரையாற்றினார். அவர் சொன்ன சில கருத்துக்கள்:

**சுதந்திரமாக**

பார்வையற்றவர்கள் பிறர் உதவி இல்லாமல் சுதந்திரமாக, தன்னிச்சையாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் வாழ்கிறேன்.

நான் பிறவிக் குருடி அல்ல. எட்டு ஆண்டுக்கு முன்பு பார்வை இழந்தேன். எனக்கு இதய அறுவை நடந்த போது எதிர்பாராதவிதமாக பார்வை இழந்தேன்.

அதற்காக நான் கவலைப்படவில்லை. என் செல்ல நாயை வழிகாட்டல் பயிற்சி பெற வைத்தேன். அதற்கு ரூ.7,200 செலவானது.

முன்பெல்லாம் விழி இழந்தோருக்கு உதவிட நாய்க்குப் பயிற்சி அளிக்க இலட்சக்கணக்கில் செலவானது. இப்போது அதற்கென தனிப் பயிற்சி பள்ளிகள் இருப்பதால், பயிற்சிக்கான செலவு குறைந்து விட்டது.

இந்தியாவில் மும்பையில் நாய்களுக்கு பயிற்சி அளிக்கும் மையம் இருப்பதாகத் தெரிந்து கொண்டேன்.

பார்வை இழந்தவர்கள் கட்டாயம் 'பிரெய்லி' முறை கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர், கணினி துறைகளில் நாம் மின்ன முடியும்.

படிக்கட்டுக்கள் ஊனமுற்றவர்களுக்கு குறிப்பாகப் பார்வையற்றவர்களுக்கு சிரமமான ஒன்று. எனவே, ரெயில் நிலையங்கள், பாலங்களில் ஊனமுற்றோர்கள் பயன்படுத்தும் வகையில் சாய்வான பாதைகள் அமைக்க வேண்டும்.

இந்த நாயின் உதவியால் நான் கடைக்கு போகிறேன். பொதுக்கூட்டங்கள், கழிவறை, மக்கள் நெருக்கடி மிகுந்த இடங்களுக்கு சரளமாகச் செல்ல முடிகிறது. தன் இரண்டரை வயதில் என்னுடன் வந்த 'கோரி' இப்போது என் வாழ்க்கைக்கே வழி காட்டுகிறது. வாழ்க்கையையும் காட்டுகிறது என்றால் அது மிகையில்லை'' என்றார், அவர்.

அமெரிக்க தூதரகமும், சக்தி பவுண்டேசன் நிறுவனமும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

# தருமாறும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது இராணுவக்கட்டமைப்பை பலப்படுத்திக் கொள்கிறாரோ தெரியவில்லை. ஆனால் தென்னிலங்கையில் பல கோணங்களிலிருந்து அவரை நோக்கி பல அபாயச்சங்குகள் ஊதப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பலவீனமான நிலையில் மஹிந்தவுக்கு காலக்கொடு விதிக்கவில்லை எனவும் மிகவும் பலமான நிலையில் நின்று கொண்டே பிரச்சினைக்கான தீர்வுக்கு சிறிது காலம் அவகாசத்தை வழங்கியுள்ளதாகவும் கூறி பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் கண்டு கொள்ளுமாறு மஹிந்தவுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

பிரபாவின் யுத்தம் கொழும்பின் கதவையும் தட்டுகிறது என்று கொழும்பு நாளேடு ஒன்று ஜனாதிபதியை அண்மையில் எச்சரித்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மாவீரர் தின உரையின் போது கூறியிருப்பதைப் போல மஹிந்தவும் மஹாவம்ச மனோநிலையில் தான் இருக்கிறார் போல் தெரிகிறது. வெகு விரைவில் அவர் இந்த மனோநிலையில் இருந்து விடுவிக்கப்படுவார்.

# எல்லாமே....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று அதன் சிறகுகளினால் அடித்து இன்பமாக விளையாடிக்கொண்டிருந்தது. இதனைப்பார்த்த மாத்திரத்தில் இவனுக்கு அவனின் காதலி இன்பமுதத்தில் நினைவு வரவே சைக்கிளில் மின்னலென விரைந்தான். அப்போதுதான் அவனை எதிர்பார்த்ததுபோல் 'இப்பதானா உங்களுக்கு நேரம் வந்தது' என்றாள் அவள். எனக்கு நேரம் வந்தால் நான் எதற்கு இங்கு வருகிறேன். அப்படி போகின்ற நேரம் இன்னும் வரவில்லை என தமாசாகச் சிரித்துக்கொண்டே கூறினான் திலீபன்.

அன்பு உள்ளம் கொண்டு திலீபன் தன் பாதையால் நடந்துவரும் வேளை பல்கலைக்கழக மாணவர்களின் இறுதித்தேர்வு இடம் பெற்றது. இதில் திலீபன் சமூகவியல் பாடம் சம்மந்தமாக செய்த ஆய்வு மிகவும் தெளிவாக இருந்ததுடன் அதுவே முதல் இடத்தையும் பிடித்துக்கொண்டது.

இதன் விளைவாக சமூகத்துடன் தொடர்புடைய பெரிய அதிகாரியானான் திலீபன். இந்நேரத்தில் திலீபனின் பெற்றோர் பெருமிதத்துடன் நாங்கள் கஷ்டப்பட்டது வீண்போகவில்லை எனக்கூறி நிம்மதி அடைந்தனர். இப்படியாக இருந்தபோது திலீபனுக்கு தந்தி ஒன்று வந்து அவன் மனதை வேதனையால் சுடடெரித்துக்கொண்டிருந்தது. அதாவது அவனின் காதலியான இன்பமுதம் திடீர் நெஞ்சுவலியால் மரணமடைந்த செய்திதான் அது. எல்லாவற்றிலும் வெற்றிகொண்ட திலீபனுக்கு காதலில் வெற்றகொள்ள முடியவில்லையே. எல்லாமே அவன் நாடகம்.

தெ.அரியநாயகம்

# ராசி பலன்

இவ்வார "ராசிபலன்" 12-12-2005 முதல் 18-12-2005வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது தோசமானது. இருப்பினும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. சனி செவ்வாயைப் பார்ப்பது பாதகமானது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் இலாபம் இருக்காது. (2,7) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைத் தரமாட்டார். கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய புதன் 8இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திறமையை செயலில் காட்ட சந்தர்ப்பம் இருக்காது. 4இல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நலமதல்ல. (9,12) உரிய குரு 7இல் இருப்பது விசேஷமானது. பிதா நலம். சயன சுகம் உண்டு. (10,11) உரிய சனி 4இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷமானது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 7இல் நல்ல பலனைச் செய்யார். கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் 8இல் நல்ல பலனைத் தரார். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு கூடாது. (7,12) உரிய செவ்வாய் 12இல் இருப்பது பாதகமானது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (8,11) உரிய குரு 6இல் இருப்பது பாதகமானது. முதலீடுகளால் இலாபம் இருக்காது. நண்பர்களுக்குள் மனக்கசப்பு வரலாம். (9,10) உரிய சனி 3இல் இருப்பதுநல்லது. பிதா நலம், தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 6இல் இருப்பது விசேஷம். மேலும், சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். வாகன சுகம் உண்டு. தாய் நலம். 2இல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைச் செய்யும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 11இல் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். பிரயாண வாய்ப்பு உண்டு. (7,10) உரிய குரு 5இல் இருப்பது சிறப்பானது. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. (8,9) உரிய சனி 2இல் இருப்பது நல்லதல்ல. பிதாவுக்கு கூடாது. முதலீடுகளால் இலாபம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன், மேடம் முதல் மிதுனம் வரை சஞ்சாரம் செய்வதால் வார ஆரம்பத்திலும் மத்தியிலும் நல்ல பலன் உண்டு. ராசியில் சனி இருப்பது நல்லதல்ல. அதை செவ்வாய் பார்ப்பதும் நல்லதல்ல. சுக்கிரன் ராசியைப் பார்ப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். இரண்டுக்குரிய சூரியன் 6இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். (3,12) உரிய புதன் 5இல் இருப்பது நல்ல பலனைச் செய்யார். செவ்வாய் பார்ப்பதும் ஒரு காரணம். மாமன், மாமிக்கும் நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலனைச் செய்யாது. தாய்க்கு கூடாது. நண்பர்களுக்கு நல்லதல்ல. (5,10) உரிய செவ்வாய் 10இல் நல்ல பலனைச் செய்யாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. 7க்குரிய சனி ராசியில் இருப்பது திருமண வாய்ப்பை பாதிக்கும்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசி நாதன் சூரியன் 5இல் இருப்பது கூடாது. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். ராசிக்கு இருபுறமும் தீய கிரகங்கள் இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். (2,11) உரிய புதன் 4இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. தங்க ஆபரணங்கள் கைமாறப் பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 9இல் நல்ல பலனைத் தரமாட்டார். பெற்றோருக்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. (5,8) உரிய குரு 3இல் இருப்பது நல்லதல்ல. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் இலாபம் இருக்காது. (6,7) உரிய சனி 12இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் கேது இருப்பதும் சனி பார்ப்பதும் தீங்கானவை. (2,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய குரு 2இல் இருப்பது சிறப்பானது. தாய் நலம், வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. (5,6) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 12க்குரிய சூரியன் 4இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் பாதிக்கலாம். (3,8) உரிய செவ்வாய் 8இல் இருப்பது தோசமானது. மேலும் சனி செவ்வாயைப் பார்ப்பது கூடாது. முதலீடுகளால் இலாபம் இருக்காது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது சிறப்பானது. இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். முதலீடுகளால் லாபம் இருக்கும். (2,7) உரிய செவ்வாய்7இல் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது தீங்கானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 10இல் நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு கூடாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (9,12) உரிய புதன் இரண்டில் நல்ல பலனைத் தரார். பிதாவுக்கு நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. 10இல் உள்ள சனியை செவ்வாய் பார்ப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6இல் இருப்பது நல்லது. மேலும், சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் சமரசத்துக்கு வருவர். (2,5) உரிய குரு 12இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9இல் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு சம சுகம். திறமையை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் 3இல் நல்ல பலனைச் செய்யும். திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (8,11) உரிய புதன் ராசியில் நல்ல பலனைச் செய்யார். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. முதலீடுகளால் இலாபம் இருக்காது. தொழிலுக்குரிய சூரியன் இரண்டில் நல்ல பலனைச் செய்யார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11இல்இருப்பது நல்லது. மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். வாகன சுகம் உண்டு. தாய் நலம். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,3) உரிய சனி 8இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. தங்க நகைகள் இடம்மாறப் பலன் உண்டு. (5,12) உரிய செவ்வாய் 5இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,11) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் விலகி இருப்பர். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,10) உரிய புதன் 12இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. 9க்குரிய சூரியன் ராசியில் நல்ல பலனைச் செய்யார். பிதாவிற்கு நல்லதல்ல. அதிஷ்டம் இருக்காது.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7ல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 10இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போகலாம். (4,11) உரிய செவ்வாய் 4இல் நல்ல பலனைச் செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,9) உரிய புதன் 11இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பிதா நலம். பகைவர் நண்பராவர். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். சனி வழிபாடு செய்ய நல்ல பலன் உண்டாகும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது நல்லது. மேலும், சனி தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (3,10) உரிய செவ்வாய் 3இல் இருப்பது நல்லது. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. தங்க ஆபரணங்கள் சேரும். (4,9) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. அதிஷ்டம் உண்டு. (5,8) உரிய புதன் 10இல் நல்ல பலனைச் செய்வார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். முதலீடுகளால் இலாபம் இருக்கும். 7க்குரிய சூரியன் 11இல் இருப்பது திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். ராசிநாதன் சனியை செவ்வாய் பார்ப்பது கூடாது.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் பரணி சந்திரன்<br>சுக்கிரன் உத்தராடம் சூரியன்<br>புதன் அனுசம் சனி | | சனி |
| சுக்கிரன் | சூரியன் மூலம் கேது<br>குரு சுவாதி ராகு<br>சனி பூசம் சனி | | |
| சூரியன் | புதன் | குரு | கேது |

கார்த்திகை 27 முதல் மார்கழி 03 வரை

சந்திரன் மேடம் முதல் மிதுனம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல் இருப்பது பாதகமானது. இருப்பினும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. (2,9) உரிய செவ்வாய் 2இல் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு கூடாது. அதிஷ்டம் இருக்காது. (3,8) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்லது. முதலீடுகளால் இலாபம் இருக்கும். குறுந்தூரப் பிரயாணம் அமையும். (4,7) உரிய புதன், 9இல் நல்ல பலனைச் செய்யார். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 6க்குரிய சூரியன் 10இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகை விலகும். (11,12) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை.

# வேண்டாம் தூக்கு



ஷாங்கி சிறையில் தனது மகன் நூயென் வானைப் பார்த்து விட்டு வெளியேறுகிறார் தாயார். அருகில் ஆஸ்திரேலியத் தூதரக பெண் அதிகாரி.

மரணதண்டனைக்கு எதிராக உலக நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

ஆஸ்திரேலிய போதை வஸ்து கடத்தல்காரருக்கு சிங்கப்பூரில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 1976 ஆம் ஆண்டு மீண்டும் மரண தண்டனை அமுலுக்கு வந்த பின்பு 1000 ஆவது மரணதண்டனை கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டது.

வேர்ஜீனியாவைச் சேர்ந்த ராபின் லோவிட் என்பவரே மின்சாரக் கதிரை மூலம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர். அவர் ஒரு கொலைக் குற்றவாளி.

சிங்கப்பூரில் போதை வஸ்து வைத்திருப்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அங்கு மின்சாரக் கதிரை இல்லை. பெரும்பாலான நாடுகளைப் போன்றே சிங்கப்பூரிலும் குற்றவாளிகள் தூக்கிலிடப்படுகின்றனர். நூயென் வான் என்ற இந்த ஆஸ்திரேலிய இளைஞரைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட சகல ராஜதந்திர, சட்ட முயற்சிகளும் பயன்தரவில்லை.

சிங்கப்பூரின் ஷாங்கி சிறைச்சாலையில் இவர் தூக்கிலிடப்பட்டார்.

இவர் தூக்கிலிடப்படவிருந்த நேரம் ஏராளமான பத்திகையாளர்கள் சிறைச்சாலைக்கு வெளியே காத்திருந்தனர். தூக்கிலிடப்பட்டதை ஒரு சிறு குறிப்பு பத்திரிகை அறிக்கை மூலம் வெளியிட்டிருந்தது சிங்கப்பூர் உள்விவகார அமைச்சு.

அமெரிக்காவிலும் சிங்கப்பூரிலும் மரண தண்டனைகள் நிறை வேற்றப்பட்டதை அடுத்து உலகம் முழுவதும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. ஒரு கொலைக்கு பரிகாரம் இன்னொரு கொலை அல்ல என்ற எண்ணம் உலக மக்களிடம் பரவி வருகிறது.

இந்த எண்ணத்தை வலியுறுத்தும் வகையிலும் 1786ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டின் டாஸ்கேனி என்ற இடத்தில் நவம்பர் 30 ஆம் திகதி மரண தண்டனை தடை செய்யப்பட்டதை யொட்டியும் உலகம் முழுவதும் மரண தண்டனைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. உலகம் முழுவதும் உள்ள 380 நகரங்களில் மரண தண்டனைக்கு எதிராக ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. உலகின் பல்வேறு நகரங்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்களில் விளக்குகள் ஏற்றப்பட்டன.

ரோம் நகரின் கல்லோசியம், பிரஸ்சல்ஸ் நகரின் அடோமியம், மட்ரிட் நகரின் சாண்டா அனா சதுக்கம், பீனஸ் நகரின் பெலிஸ்க் கட்டடம், சாண்டியாகோ நகரின் மொனெடா அரண்மனை ஆகியவை இப்படி ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன.

ரோம் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு எதிரில், மரண தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 100 பேர் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

"மரண தண்டனைக்கு ஆதரவு குறைந்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 5 நாடுகள் மரண தண்டனைக்கு தடை விதித்து உள்ளன. இதன் மூலம் இப்படி தடை செய்துள்ள நாடுகளின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

15 கிராம் போதை வஸ்து வைத்திருந்தாலேயே மரண தண்டனை விதிக்க சிங்கப்பூரில் சட்டம் இடம் அளிக்கிறது. சிங்கப்பூரின் தூக்கிலிடப்பட்ட ஆஸ்திரேலியப் பிரஜையான நூயென்வான் 25 வயது நிரம்பியவர். "ஆறு நிமிடத்தில் எல்லாம் முடிவடைந்துவிட்டது" என்று சிங்கப்பூரின் மனித உரிமைகள் வழக்கறிஞர் எம்.ரீ.ரவி செய்தியாளர்களிடம் கூறினார். சிறைச்சாலைக்கு வெளியே நடத்தப்பட்ட மனித உரிமை இயக்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கையில் இவரும் கலந்து கொண்டார்.



நூயென் வான் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்ட சமயம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடந்த எதிர்ப்பு இயக்கம்.

சிங்கப்பூரில் கடந்த மே மாதம் போதை வஸ்துக் கடத்தலுக்காக சண்முகம் முருகேசு என்ற பிரபல விளையாட்டு வீரர் தூக்கிலிடப்பட்டார். சிங்கப்பூரின் படைப்பிரிவில் அவர் முன்பு கடமையாற்றி இருந்தார். சண்முகம் முருகேசுவுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்டவரும் மனித உரிமைகள் வழக்கறிஞரான ரவி தான். சிங்கப்பூரில் மரண தண்டனையை ஒழிப்பதற்காக போராட்டங்களை நடத்தி வருகிறார் ரவி.

1991 ஆம் ஆண்டுக்கும் 2004 ஆம் ஆண்டுக்கும் இடையில் சிங்கப்பூரில் 420 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என்று சர்வதேசமன்னிப்புச் சபை கூறுகின்றது. தூக்கிலிடப்பட்ட ஆஸ்திரேலியப் பிரஜையான நூயென் வான் கம்போடியாவில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு போதைப்பொருளைக் கடத்திச் சென்ற சமயம் சிங்கப்பூர் விமானநிலையத்தில் வைத்து 2002 டிசெம்பரில் கைது செய்யப்பட்டார். இவர் கைதான சமயம் இவரிடம் 400கிராம் (14 அவுஸ்) போதைப் பொருள் இருந்தது. சிங்கப்பூரில் இடம் பெற்ற விசாரணையின் போது தாம் போதைப் பொருள் கடத்தல்காரர் என்பதை நூயென் வான் ஒப்புக் கொண்டார். தனது சகோதரரின் கடனை அடைப்பதற்காக இந்த கடத்தலில் ஈடுபட்டதாக அவர் கூறினார்.

இவரது தாயாரும் இவரது இரட்டைச் சகோதரரில் ஒருவரும் கடந்த வாரம் சிங்கப்பூர் வந்து இவரைச் சந்திப்பதற்கு சிங்கப்பூர் அரசு அனுமதி வழங்கி இருந்தது.


## HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்ரோரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com

## இப்பொழுது நடைபெறுகின்றது



### விஷேட விற்பனை

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

புத்தகங்கள் - காகிதாதிகள்
வாழ்த்துமடல்கள் - சஞ்சிகைகள்
அனைத்தும்

மார்கழி முதல் தைமாதம் வரை
விஷேட விலைக் கொடுப்பனவுகளில்
விற்பனை

நவீன காட்சியறை

பூபாலசிங்கம் புத்தகசாலை

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொலைபேசி : 2422321, 2435713

fpisfs;
aho;g;ghzk; nts;sj;ij




## வாழ்த்துகள்



திரு.பொ.நடராசா(அதிபர்) தம்பதிகளின் செல்வப் புதல்வனும் கிளி/இராமநாதபுரம் ம.வி மாணவனுமான செல்வன் .கதிரன்.நடந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் 159 புள்ளிகள் பெற்று கிளி/மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சிறப்புற்றமைக்காகப் பாராட்டினைத் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அப்பப்பா, அப்பம்மா,உற்றார்.


## EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, டிசம்பர் 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.